
# சுவடுகள்

## கலைஞர்கள் சிறப்பிதழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவடுகள் கடந்த இதழ் அதிகமாகவே வாசகர்களது பொறுமையைச் சோதித்திருக்கும் என நம்புகிறோம். அளவுக்கதிகமாகவே எழுத்துப் பிழைகள் இந்த இதழில் இருந்தன. உண்மையில் சுவடுகள் இரண்டாம் பக்கத்தில் சுவடுகள் 68 எனக் குறிப்பிடப் பட்டிருந்தது. 69ஆக இதழ் இருந்தபோதும். தேர்தல், பாலஸ்தீனம் பற்றிய கட்டுரைகளில் வடமொழி எழுத்துகள் அனைத்தும் விடுபட்டுப் போயிருந்தன. தேர்தல் பற்றிய கட்டுரையில் மத்திய கட்சி சார்பில் ஒஸ்லோ தலைமை வேட்பாளர் எனக் குறிப்பிடப் பட்டிருந்த யமீல் உண்மையில் ஒஸ்லோ தலைமை வேட்பாளர் அல்லர். ஒஸ்லோ நகர்ப்பிரிவுகளில் ஒன்றான ஸ்ரவ்னரின் (Stovner bydel) பட்டியலில்தான் அவரது பெயர் முதலாவதாக இடம்பெற்றிருந்தது. பல்கலாச்சாரப் பட்டியல் என்ற பெயரில் இம்முறை ஒஸ்லோவில் போட்டியிட்ட வெளிநாட்டவர்கள் தவிர எந்தக் கட்சியும் தனது மாநகர, மாகாணப் பட்டியலில் வெளிநாட்டவர் ஒருவரை முதலாவது வேட்பாளராகப் போட்டதாகத் தெரியவில்லை. ஒஸ்லோவின் நான்கு நகர்ப்பிரிவுகளுக்குப் பரீட்சார்த்தமாக நிகழ்ந்த தேர்தல்களில், பட்டியலில் முதலாவதாக இடம்பெற்ற ஒரே ஒருவர் யமீல் (அவர் வெற்றி பெறவில்லை). தவிரவும் இதே கட்டுரையில் கம்யூனிஸ இடதுசாரிக் கட்சி எனக் குறிப்பிடப்பட்ட கட்சியின் பெயர் சிவப்புத் தேர்தற் கூட்டு என்றிருப்பதே பொருத்தமானது. இதே கட்சியே அர்வே எனப் பொதுவாக அழைக்கப் படுவது. விளையாட்டுப் போட்டிகள் பற்றிய செய்தியில் படம் இடம்பெறாமலே படம் பற்றிய குறிப்பு இடம்பெற்றிருந்தது. இப்படியான பிழைகளுடன் ஏராளம் எழுத்துப் பிழைகளும் இடம்பெற்றிருந்தன.

சுவடுகள் 68ல் ஏற்பட்ட தாமதம், இதழ்68ஐ வெளியிட்ட ஓரிரு தினங்களுக்குள்ளேயே, அடுத்த இதனையும் (இதழ்69) தேர்தல் காரணமாக வெளியிடவேண்டி இருந்தது. தேர்தலுக்கு முன்பே வாசகர்களிடம் சுவடுகள் கிடைக்க வேண்டுமென விரும்பியமையே இந்தத் தவறுகளுக்கும், சுவடுகள் இரு இதழ்களும் ஒன்றாகத் தபாலில் இடப்படவும் முக்கிய காரணங்கள். இவ்வாறான தவறுகள் இனி நேராது எனவே நம்புகிறோம்.

பொதுவாகச் சுவடுகளுக்கு வரும் கவிதைகள் உடன் பிரசுரம் ஆவதில்லை. சுவடுகளில் ஏற்படும் பிரசுரத் தாமதம் காரணமாக, சுவடுகளில் பிரசுரமாகும் அதே கவிதைகள் சில சமயங்களில் வேறு பத்திரிகைகளிலும் பிரசுரமாக நேர்கிறது. இதழ்68ல் வந்த கூடுகளுக்குள் ஒரு கூடு கவிதை, ஏற்கனவே சவுதி அரேபியாவில் வெளிவந்திருந்தது இதனால்தான். ஏற்கனவே சில கவிதைகளுக்கு இந்தக் கதி நேர்ந்திருக்கிறது. வாசகர்கள் புரிந்துகொள்வர் என நம்புகிறோம்.

சுவடுகளுக்குச் சந்தா செலுத்துவது கௌரவக் குறைவு எனவும், சுவடுகளைச் சந்தா செலுத்தாது இலவசமாகப் படிப்பது கௌரவம் எனவும் சிலர் நினைக்கிறார்களோ தெரியவில்லை. சுவடுகளின் பொருளாதார நிலை அப்படியான வாசகர்களுக்குப் புரிந்தால் நல்லது.

சுவடுகள் பற்றிய உங்கள் அபிப்பிராயங்களை எழுதுங்கள். சுவடுகளின் முன்னேற்றத்தில் உறுதுணையாக இருங்கள்.

நன்றி,


சுவடுகள்.
ஒஸ்லோ



R. Pathmanaba Iyer
27-B High Street
Plaistow
London E13 0AD
Tel: 020 8472 8323

சிந்தியா

# இங்குள்ள கலைகளும் பெண்களும்



புலம்பெயர்வாழ் [illegible]ளாகிய எமது வாழ்க்கையில் க[illegible] நிகழ்ச்சிகள் ஒர் இன்றியமையாத இ[illegible] பிடித்துள்ளன. ஏனெனில் அலைதா[illegible] இயந்திர மயமான வாழ்வுக்கு மருந்தாக[illegible]வை. அப்படிப்பட்ட முக்கிய இடத்தை[illegible]ள்ள இக்கலை நிகழ்ச்சிகளைத் தரு[illegible]ளர்த்தாக்களாகிய கலைஞர்கள் [illegible] பாராட்டப்பட வேண்டியவர்கள் [illegible]றும் கலைஞர்கள், முக்கியமாகப் பெ[illegible] கலைஞர்கள் தங்கள் பங்களிப்பைப் போதி[illegible]ளவு வழங்கவில்லை என்பது பலரது ஆதங்கம். ஒஸ்லோவின் இறுதிக்கால[illegible]லை நிகழ்ச்சிகளை அவதானித்தால் பெண் பாத்திரங்களுக்கு ஆண்கள் மாற்றுடையில் நடிக்க வேண்டிய நிர்ப்பந்தம் இருந்ததை அவதானிக்க முடியும். கலைஞர்கள் பங்களிப்பின்மைக்குக் கூறும் காரணம் [illegible]நேரமின்மை[illegible] ஆகும். இது இருபாலார்க்கும் பொதுவானது. புலம்பெயர்வாழ் தமிழர்களாகிய எமக்கு எதிர்காலம் எங்கு என்று நிச்சயம் இல்லாததாலும், ஏனைய குடும்ப அங்கத்தவர்கள் தாய்நாட்டில் இருப்பதாலும், காசு சேர்ப்பது முக்கிய கடமை ஆகிவிட்டது. எனினும் அதற்காக வேலை வேலை என்று இரவு பகல் பாராமல், விருப்பமற்ற வேலையைச் செய்வதால் உடல் மட்டுமன்றி, மனமும் சோர்ந்துவிடுகிறது. இதனை மனதில் கொண்டாவது, கிடைக்கும் நேரத்தில் மனதுக்கு இதமளிக்கும் விதத்தில் எமக்குப் பிடித்த விடயங்களைச் செய்வது மிகவும் அவசியம்.

கலையில் நாட்டமுள்ளவர்கள் தம் நேரங்களை இக் கலைகளை வளர்ப்பதற்குச் செலவிடுவதால் மனதுக்கு அமைதி கிடைப்பதோடு மட்டுமல்லாமல், தாம் அக்கலையைக் கற்றதன் பயனையோ அன்றேல் பெற்றதன் பயனையோ அடைய முடிகிறது. முக்கியமாக வீட்டில் இருக்கும் பெண்கள் ஒரே வேலையைத் திரும்பத் திரும்பச் செய்வதன் மூலம் விரைவில் சலிப்படையச் சந்தர்ப்பம் உண்டு. இவர்கள் தம் ஓய்வு நேரத்தில் கதை, கட்டுரை, கவிதை என்பவற்றை எழுத முனைவதன் மூலம் தம் கற்பனைக்குக் களம் அளிக்கலாம். இவை மனிதனின் தன்னம்பிக்கைக்கு உரம் ஊட்டுபவை. பெண் கலைஞர்களைப் பங்களிப்பிற்கு அழைக்கும்போது அவர்தம் பாதுகாவலர்களால், மறுப்பிற்குக் கொடுக்கப்படும் விளக்கம் [illegible]பெயர் கெட்டுவிடும்[illegible] என்பதாகும். இதற்குக் காரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாமலில்லை. ஓர் கலைஞன் ஒரு கலை நிகழ்வைத் தர முன்வரும்போது மக்கள் அவன் கலையின் கருவை மட்டும் எடுத்துக் கொள்ளாமல், கலையைத் தர அந்தக் கலைஞனுக்கு அருகதை உண்டா எனக் கலைஞனை ஆராய முற்படுவதும், கலைஞனின் சொந்த வாழ்க்கையைப் பொதுச் சொத்தாக்கி விமர்சிப்பதும் நாம் அறிந்த விடயங்கள். இவை மட்டுமல்லாமல் கலை உலகில் காலடி எடுத்து வைக்கும் ஒவ்வொரு மனிதனும் பலதரப்பட்ட கலைஞர்களுடனும் பழகவேண்டிய அவசியம் இருக்கிறது. இவை வெளி உலகத்தினரின் பார்வைக்கு இலக்காகிப் பல □கிசுகிசு□க்களை □புரளி□களை உண்டாக்க வழிவகுத்து விடுகிறது. இவை எமது சமுதாயத்தில் அக்கலைஞனின் சொந்த வாழ்க்கையில் பாதிப்பை ஏற்படுத்துவதாலேயே பல கலைஞர்கள் தங்கள் பங்களிப்பில் பின்நிற்கிறார்கள். மக்கள் தரமான நிகழ்ச்சிகளை எதிர்பார்ப்பின், அவர்கள் கலைஞர்களைக் கையாளும் முறையும் மாறவேண்டும் என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம்.

மற்றைய சமுதாயத்துடன் ஒப்பிடுகையில் எமது சமுதாயம் கலைக்குக் கொடுக்கும் மதிப்பு மிகக் குறைவாகவே காணப்படுகிறது. அத்தோடு கலைஞர்கள் மீது ஒரு பாகுபாடு காட்டுவதும் எம்மத்தியில் உண்டு. அதாவது ஒரு பாடகிக்கு அல்லது நாட்டிய தாரகைக்கு இருக்கும் மதிப்பு ஒரு நடிகைக்குக் கிடைப்பதில்லை. □நடிகை□ என்ற பதம் எம் மத்தியில் ஒரு இழி (negative) சொல்லாகவே பாவிக்கப் படுகிறது.

இதனாலேயே பல பெண் கலைஞர்கள் நடிப்பு என்றதும் தயங்குகிறார்கள்.

பெண் கலைஞர்களின் அடுத்த எதிரி மேடைக் கூச்சம். இது இருபால் கலைஞர்களுக்கும் பொதுவாயினும், பெண்களுக்கு இயற்கையாக அமைந்துவிட்ட கூச்சமும் சேர்ந்துவிட இது இரட்டிப்பாகி விடுகிறது. இதனைத் தவிர்ப்பதற்கு, இவர்கள் முதலில் சிறுசிறு மேடைகளில் மேடையேறித் தம்மைப் பழக்கப்படுத்திக் கொள்ளலாம். மற்றும் மேடையில் நிற்கும்போது பார்வையாளர்களின் தொகையைப் பற்றி யோசிக்காமல், என்னால் முடியும் என்று நினைத்துச் செயற்பட வேண்டும். ஏனெனில் நாம் காட்டிக் கொடுக்காவிட்டால் பார்வையாளர்களால் எம் பிழைகளை உணர முடியாது. இது மட்டுமல்லாமல் இங்கு இதற்கான பல பயில்நெறிகளும் (Course/kurs) உள்ளன என்பதையும் கூற விரும்புகிறேன். எங்கள் மத்தியில் பல வளரும் கலைஞர்கள் இலைமறைகாயாக உள்ளனர். இவர்களைப் பெற்றோர், உற்றார் இனங்கண்டு சிறுவயது முதல் அவர்கள் ஆற்றல்களை வளர்க்க உதவினால், எதிர்காலத்தில் நல்ல கலைஞர்களை நாம் காண வாய்ப்புண்டு. பெண்பிள்ளைகளைப் பொறுத்தவரை பெற்றோர் அவர்களை ஒரு குறிப்பிட்ட வயதுவரையே நிகழ்ச்சிகளில் பங்குபற்ற அனுமதிக்கிறார்கள். இதற்கு அவர்கள் கூறும் காரணம் பிள்ளைகளின் திருமணத்திற்கு இந்நிகழ்ச்சிகள் தடையாக அமைந்துவிடும் என்பது. கலையை மக்கள் பார்க்கும் பார்வை மாறிவருகிறதோ என்ற ஐயம் ஏற்படுகிறது. பெரும்பாலான பெற்றோர் பிள்ளைகளுக்குக் கலையைப் பழக்குவது தமது கௌரவத்துக்காக (status) மட்டுமேயன்றிக் கலையின் பெருமையை உணர்ந்தல்ல என்றே எண்ணத் தோன்றுகிறது. கலை ஓர் உன்னதமான தொடர்புச் சாதனம். அதன் மூலம் நாம் எத்தனையோ விடயங்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள முடிகிறது. இது எல்லோராலும் முடியக்கூடியதல்ல. அந்த வகையில் கலையில் பரிச்சயம் உள்ள பெண்களை உயர்வானவர்களாகவே கணிப்பிட வேண்டும்; ஆனால் அந்த நிலை இன்று மாறி, அவர்களை இழக்கமான முறையில் முத்திரை குத்துவதாலேயே பெண்களின் பங்களிப்பு அருகி வருகிறது. கலைஞர்கள் மீது மக்கள் செலுத்தும் பார்வை மாறினாலேயற்றி, வேறு எந்த விதத்திலும் நாம் இவர்களின் பங்களிப்பை மாற்ற முடியாது. இதற்கு நாம் ஒவ்வொருவரும் பொறுப்பு என்பதை மறந்துவிட முடியாது. மக்கள் வேறோர் நாட்டில் இருந்து வரும் ஓர் நிகழ்ச்சியை, எவ்வாறு கலைஞனை விடுத்துக் கலையை ரசிக்கிறார்களோ, அதே நிலை இந்நாட்டில் வாழும் கலைஞனுக்கும் கொடுக்கும் பட்சத்தில் கலைஞனின் பங்களிப்பு நிச்சயம் இனிவரும் காலத்தில் மாற்றமடைய உதவலாம்.

இன்னோர் விடயம் என் ஞாபகத்திற்கு வருகிறது. அண்மையில் நடந்த விடயம். ஓர் பெண்ணை விவாத அரங்கொன்றுக்குப் பங்களிக்க அழைத்தபோது அவர் எனக்களித்த பதில் □ஐயையோ, நான் மாட்டன், பிறகு வாய்காறி என்று கூறுவார்கள்□ என்பதாகும். நான் அவரிடம் விபரமாகக் கேட்டபோது அவர் கொடுத்த பதில் ஓரளவு ஏற்கக் கூடியதாகவே காணப்பட்டது. ஏனெனில் மக்கள் மேடையில் பார்ப்பதற்கும் - நிஜவாழ்க்கைக்கும் உள்ளவற்றுக்குமான வேறுபாட்டைப் புரிந்து கொள்வதில்லை. ஒரு கலைஞனின் பங்கு என்னவெனில் தனக்குக் கொடுக்கப்பட்ட பாத்திரத்தை (அது இயல் ஆக இருக்கலாம், இசையாக இருக்கலாம், நாடகமாக இருககலாம்) உணர்ந்து வெளிப்படுத்துவதேயன்றித் தன் சொந்தக் கருத்துகளை வெளிப் படுத்துவதல்ல. எல்லாக் கலைஞர்களுக்கும் தம் சொந்தக் கருத்துடன் ஒத்துப் போகும் பாத்திரம் கிடைப்பதில்லை என்பதை நாம் புரிந்து கொள்வதில்லை. மேடையில் வீராவேசமாக வாதிடும் பெண்கள், ஆண்களுக்கு எதிர்த்துக் கருத்துக் கொடுக்கும் பெண்கள் இவர்கள் எல்லாம் நிஜ வாழ்விலும் அவ்வாறே முத்திரை குத்தப்பட்டுக் குடும்ப வாழ்க்கைக்கு உதவாதவர்கள் என்றும் வாய்க்காரி என்றும் சொல்லப் படுவதாலேயே தாம் நிகழ்ச்சிகளில் பங்குபற்ற விரும்புவதில்லை என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

இது இவ்வாறு இருப்பினும், இவற்றை நாம் காரணமாக சுட்டிக்காட்டி, மற்றவர்களின் விமர்சனத்துக்காய் எமக்குத் திருப்தியைத் தரும் கலையை, எமக்குக் கடவுளால் கொடுக்கப்பட்ட அந்த அரிய திறமையை மண்ணாக்குவது எமது மடமையே ஆகும். (கலை உலகில் காலடி எடுத்து வைப்பது ஓர் கடினமான விடயமே தான். எனவே ஒவ்வொரு கலைஞனும் தன் மனத்தை நன்கு பக்குவப்படுத்தி எதையும் தாங்கும் சக்தியை வளர்க்க வேண்டும். பல தரப்பட்ட ரசிகர்கள் வாழும் இச்சமூகத்தில் விமர்சனங்களும் பல தரப்பட்டதாகத்தான் இருக்கும். ஆனாலும் ஒவ்வொரு கலைஞனதும் கடமை என்னவெனில், உண்மையான கலை விமர்சனத்தை இனங்கண்டு, அவற்றின் மூலம் தம் பிழைகளைத் திருத்தித் தன் கலையை வளர்த்துக் கொள்வதேயாகும்)

பழம்பெரும் கலைஞர்கள் தங்கள் அனுபவத்தை, வளர்ந்துவரும் கலைஞர்களுடன் பகிர்ந்து அவர்களைச் சரியான வகையில் வளர்த்தெடுக்க உதவவேண்டும். நோர்வேவாழ் தமிழர்களாகிய எமது சமூகத்தில் கலையின் உன்னதம் நிலைத்து நிற்க நாம் எல்லோரும் எமது பங்களிப்பை நல்கவேண்டும். வளர்ந்துவரும் கலைஞர்களை அவர்களின் நிகழ்ச்சிகளின் பின் பாராட்டுவதிலோ அன்றேல் சரியான விமர்சனத்தைக் கொடுப்பதிலேயே எமது பங்களிப்பை வழங்கலாம் என்பதை நாம் மறக்கக் கூடாது.

## *மெல்ல மெல்ல நாடு அடைக்கப்படுகிறது
## (Langsomt ble landet lukket)

நோர்வேயின் அகதிக் கொள்கை தொடர்பான பகிரங்க மாநாடு எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 27, 28, 29ம் திகதிகளில் ஸான்டபியோர்ட் (Sandefjord) எனும் இடத்தில் நிகழ்கிறது. மாநாட்டில், வரலாற்றுப் பின்னணியில் நோர்வேஜிய அகதிக் கொள்கை, அரசியற் தஞ்சம் கோருவோர் மீதான சட்ட நடவடிக்கைகள், புதிய அகதிக் கொள்கை, குடும்ப மீளிணைவு, பொருளாதார அகதிகள் பேரன்ற தலைப்புகளில் உரைகள், கருத்துப் பரிமாற்றங்கள் இடம்பெறும்.

இந்த மாநாடு தொடர்பான மேலதிக விவரங்களுக்குத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: Trømso AU,/ Postboks 685,/ 9001 Trømso.
தொலைபேசி இலக்கம்: 77656591

சிவன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அண்மையில் நிகழ்ந்து முடிந்த நோர்வேயின் உள்ளூர் நிர்வாகத் தேர்தல் முடிவுகள் தொடர்ந்து வரும் நான்கு வருடங்கட்கும், நாடு தழுவிய ரீதியில் பரவலாக நிர்வாகச் சிக்கல்களைத் தோற்றுவிக்க உள்ளது. பிரதான கட்சிகளின் வாக்குகள் பிரிக்கப்பட்டு இடைநிலைக் கட்சிகளிடம் சென்றமையாலும், பிரதான கட்சிகளது ஆதரவுக் கட்சிகளிடையே ஏற்பட்டுள்ள செல்வாக்கு மாற்றங்களும், அவற்றிற்கிடையேயான முரண்பாடுகளும் சீரான நிர்வாகத்திற்குத் தடைக் கற்களாகும். நாட்டின் வடபிராந்தியம் தவிர்ந்த ஏனைய பல பகுதிகளிலும் இவ்வாறான சிக்கல்கள் தோன்றியுள்ளன. ஒஸ்லோவில் (பார்க்க பெட்டிச் செய்தி) நிலவும் திரிசங்கு நிலை இதற்கு நல்ல உதாரணம்.

தேர்தலில் தனிக் கட்சி என்ற ரீதியில் தொடர்ந்தும் தொழிற் கட்சியே முன்னணி வகித்தாலும் 1991 (உள்ளூராட்சித்) தேர்தலுடன் ஒப்பிடுகையில் கட்சி 6% செல்வாக்கை இழந்துள்ளது. 31% செல்வாக்கை மட்டுமே கொண்டுள்ள இக் கட்சியின் இன்றைய நிலை 1930களில் கட்சி பெற்ற மிகக் குறைந்த ஆதரவு நிலையை நோக்கிக் கட்சி

• சஞ்சயன்

# எதிர் பாராத முடிவு தந்த இன்னொரு தேர்தல்

வந்துள்ளமையைச் சுட்டிக் காட்டுகின்றனர் அரசியல் ஆய்வாளர்கள். கட்சியின் செல்வாக்கை வீழ்ச்சிப் போக்கில் இட்டுச் செல்வதில் சாதனை படைத்துவரும் பிரதமர் திருமதி குறுாஹாலம் புருண்ட்லாந்த் (Gro Harlem Brundtland), இம்முறை இதே சாதனையைத் தனது கட்சித் தலைவர் துார்பியோண் யாகலாண்டுடன் (Thorbjorn Jagaland) இணைந்து மேற்கொண்டுள்ளார். "முன்னொரு காலத்தில்" சாதாரண பொதுமக்களின் நலன்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து அவர்களது சமூக பொருளாதார வளர்ச்சியில் அக்கறை செலுத்திவந்த கட்சி இன்று சோசலிச ஜனநாயகவாதிகள் எனப் பெருமையுடன் கூறிக்கொண்டு செல்வந்தர்களது பிரச்சனைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வருவதாலும், அவர்களது மூலதன ஆதிக்கத்தைப் பாதுகாக்கும் அல்லது வலுப்படுத்தும் செயல்பாடுகளிலும் கட்சி ஈடுபடுவதாலும் சாதாரண மக்களின் நம்பிக்கையை இழந்துள்ளது. ஐரோப்பிய சமூகம் தொடர்பாக கட்சி கையாண்ட கொள்கையும் மக்கள் மனதில் இன்னும் ஆழப் பதிந்துள்ளதாகப் பிரபல பத்திரிகைகள் கருத்துத் தெரிவித்துள்ளன. நோர்வேயின் இன்றைய சமூக வளர்ச்சிக்குப் பலவிதத்திலும் முக்கிய பங்களிப்பை வழங்கிய தொழிற்கட்சி இன்று அதே சமூக வளர்ச்சியை முழுமையான திறந்த சந்தைப் பொருளாதாரத்தை மையப் படுத்தும் செல்வந்த முதலாளிகளின் ஆதிக்கத்தின் மூலம் நிலைப்படுத்த முயல்கிறது. கட்சியின் இன்றைய



கொள்கைகளின் அடிப்படைச் சீர்திருத்தம் செய்யப் படாதவரை மேற்கொண்டு பாரிய மாற்றங்கள் எதையுமே எதிர்பார்க்க முடியாது.

பிரதான எதிர்க் கட்சியான வலது (Høyre) கட்சியானது 1993 (பாராளுமன்றத்) தேர்தலில் மூன்றாம் இடத்திற்குத் தள்ளப் பட்டிருந்தாலும், தற்போது மீளவும் தனது நிலையை உறுதிப் படுத்தியுள்ளது. தொழிற்கட்சிக்கு மாற்று சக்தியாகக் கருதப்படும் இக்கட்சி கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக போதிய தலைமைத்துவம் இன்றி அல்லாடி வருகிறது. தற்போது தலைமைப் பதவியை ஏற்றிருக்கும் யான் பெற்றர்ஸன் (Jan Pettersen) 1997 தேர்தலின் பின்னர் வலதுசாரிக் கூட்டணி அரசே பதவிக்கு வரும் எனக் கூறியுள்ள போதிலும், அதற்கான வாய்ப்பு எந்தளவு துாரம் கிடைக்கும் எனத் தெரியவில்லை. 1993த் தேர்தலுடன் ஒப்பிடுகையில் கட்சி, இன்றைய நிலையையிட்டுத் திருப்தி அடையலாம். எனினும் மாற்று அரசாங்கம் ஒன்றிற்குத் தலைமை தாங்கக்கூடிய தகுதியையோ வாய்ப்பையோ இன்னும் கட்சி பெறவில்லை என்றே கூறலாம்.

1993 பாராளுமன்றத் தேர்தலில் சடுதியான அரசியற் பூகம்பத்தை உருவாக்கிய மத்திய கட்சியும் கட்சியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவி அன்ன எங்ஙர் லான்ஸ்ரைய்ன் (Anne Enger Lahnstein) அவர்களும் எவ்வளவோ முயன்றும் தமது இரண்டாம் நிலையைத் தக்க வைக்க இயலவில்லை. 1991உடன் ஒப்பிடுகையில் கட்சி திருப்திப் படலாம். ஆனால் இரு வருடங்களின் பின் வந்த பாராளுமன்றத் தேர்தலில் கட்சி பெற்ற வாக்குகளை இப்போதைய வாக்குகளுடன் ஒப்பிடின் கட்சியின் வீழ்ச்சி தெரியும். நாட்டின் விவசாய, மீன்பிடி, காட்டுத் துறையினரின் அதிக ஆதரவைப் பெற்ற இக்கட்சி, அவர்கள் அதிகம் வசிக்கும் நாட்டின் வடமத்திய பிரதேசங்களில் தனது செல்வாக்கைத் தக்கவைத்துக் கொண்டிருக்கிறது. வலதுசாரிப் போக்கைக் கொண்டிருந்த இக்கட்சி அண்மைக் காலமாக வலதுசாரிக் கட்சிகளுடன் பெரும் முரண்பாடுகளைக் கொண்டுள்ளது. மத்திய கட்சியின் ஒத்துழைப்பின்றி வலதுசாரிக் கூட்டணி அரசு ஏற்படுத்துவது சாத்தியமற்றது என்றே கருதப் படுகிறது. 1993 தேர்தலில் இரண்டாம் இடத்திலிருந்த இக்கட்சி இன்று மூன்றாம் இடத்துக்குத் தள்ளப் பட்டுள்ளது. இங்கு வாழும் கறுப்பின மக்களின் "இடப்பெயர்ச்சி" வாழ்வில் முன்பைவிட நெகிழ்ச்சியான தன்மையைக் கொண்டுள்ள இக்கட்சி இதுவரை காலமும் பாராளுமன்றத்தில் (சிறுபான்மைத்) தொழிற்கட்சி அரசைப் பாதுகாக்கும் ஒரு கட்சியாகவே இருந்து வந்துள்ளது. எனினும் தற்போது செல்வாக்கு வீழ்ச்சியுற்ற தொழிற் கட்சியை இனியும் பாதுகாக்க மத்திய கட்சி முனையுமா என்பது பற்றிய முடிவுகளைத் தற்போது நிகழ்ந்துவரும் வரவு செலவுத் திட்ட விவாதத்தின் முடிவிலேயே அறிவிக்க இருப்பதாகக் கட்சி கூறியுள்ளது. அதே வேளை பிரதான எதிர்க் கட்சியான வலதுசாரிக் கட்சியுடன் கூட்டணி அரசு என்ற பேச்சுக்கே இடமில்லை எனவும் கட்சி அறிவித்துள்ளது.

இத் தேர்தலில் வெற்றியின் நாயகனாகக் கருதப் படுபவர், முன்னேற்றக் கட்சியின் தலைவர் காள் இ ஹாகனே (Carl I Hagen). வெளிநாட்டவர்கள் தொடர்பாக, குறிப்பாகக் கறுப்பின மக்கள் தொடர்பாக (ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க) மிகவும் கடுமையான போக்குகளைக் கடைப்பிடிக்க வலியுறுத்தும் இக்கட்சி, கறுப்பர்கள் வாழும் பிரதேசங்களில் பாரிய வெற்றியைப் பெற்றுள்ளது. தலைநகரான ஒஸ்லோவில் மாத்திரம் 145வீதத்திற்கு மேற்பட்ட அசுர வளர்ச்சியைப் பெற்றுள்ளது. (பார்க்க பெட்டிச் செய்தி) தென் நோர்வேயின் மாநில, மாநகரங்களில் பரந்தளவில் கட்சி பெற்றுள்ள பாரிய


Gro Harlem Brundtland

ஆதரவு, அரசினது அகதிகள், வெளிநாட்டவர்கள் தொடர்பான கொள்கைகள், நடவடிக்கைகளில் நடைமுறை சார்ந்த எத்தகைய மாற்றங்களைத் தோற்றுவிக்கும் என்பது ஒருபுறமிருக்க, இந்தக் கட்சியின் செல்வாக்கு இப்பிரதேசங்களில் சீரான நிர்வாகத்திற்கும் தடையாக உள்ளது.

இத்தேர்தலில் பாரிய இழப்பைச் சந்தித்த கட்சியாகச் சோஷலிச இடதுசாரிக் (SV) கட்சி உள்ளது. 1987ல் கட்சி ஈட்டிய பாரிய ஆதரவைத் தொடர்ந்து நிகழ்ந்த அனைத்துத் தேர்தல்களிலும் கட்சி தோல்வியையே சந்தித்து வந்துள்ளது. எனினும் இம்முறைய தோல்வி, தோல்விகளின் சிகரம் எனக் கூறப்படலாம். பல மாநிலங்கள், மாநகரசபைகளில் கட்சி பெற்ற பின்னடைவு இவ்விடங்களில் வலதுசாரிக் கட்சிகள் ஆட்சி அமைக்க வாய்ப்பு அளித்துள்ளது. நாட்டின் ஒருசில இடங்களில் கூட்டணிக் கட்சியான தொழிற் கட்சி சிறுமுன்னேற்றம் அடைந்துள்ள போதிலும், சோசலிச இடதுசாரிக் கட்சியின் பின்னடைவு இவ்விடங்களில் வலதுசாரிக் கட்சிகள் ஆட்சி அமைக்க வாய்ப்பளித்துள்ளது. 1987ல் கட்சி பெற்ற பாரிய ஆதரவைத் தக்கவைத்துக் கொள்ளக் கட்சி தவறியமையும், ஆளும் தொழிற்கட்சியுடன் "முழுநேர நண்பனா"கக் கட்சி இருந்து வந்தமையும் இடதுசாரிக் கோட்பாடுகள் மீதிருந்த பற்றுறுதியை, நவீன தொழில்நுட்பமும் சந்தைவழிப் பொருளாதாரத்தையும் நோக்கிப் படிப்படியாக நகர்த்த முற்பட்டமையும் இதன் விளைவாகக் கட்சிக்குள் தோன்றிப் புகைந்து கொண்டிருக்கும் உட்கட்சி மோதலும் கட்சியின் கட்சியின் இப் பாரிய பின்னடைவுக்குக் காரணமாகும். கட்சித் தலைவர் ஏரிக் சூல்ஹய்ம் (Erik Solheim) போன்றவர்கள் கட்சியைப் பிழையான வழியில் நடத்திச் செல்வதாகப் பரவலான குற்றச்சாட்டுக் கட்சி அங்கத்தவர்களால் முன்வைக்கப் படுகிறது. இதை ஓரளவுக்காவது உறுதிப் படுத்தும் விதமாகவே கட்சித் தலைவரின் அறிக்கைகள், செய்திகள் உள்ளன. ஏரிக் சூல்ஹய்ம் அவர்கள் பத்திரிகைகளுக்கு வழங்கிய புதிய கண்டுபிடிப்பு ஒன்று "இந்நூற்றாண்டில் உலகத்திற்குப் பாரிய பின்னடைவை ஏற்படுத்திய மூன்று காரணிகள்: 1) காலனித்துவவாதிகளின் ஏகாதிபத்தியம். 2) தேசியவாதிகளின் தோற்றமும் யுத்தங்களும். 3) கம்யூனிஸமும் அதன் ஆக்கிரமிப்பும் எனக் கூறுகிறது.

கம்யூனிஸவாதிகள் மீது ஆத்திரப்படுவது ஒருவேளை நியாயமாக இருக்கலாம். ஆனால் கம்யூனிஸம் மீது அவர் ஆத்திரப்பட என்ன இருக்கிறது?

அண்மையில் நடைபெற்று முடிந்த தேர்தலில் முன்னேற்றக் கட்சி மிகப்பெரிய வெற்றியைப் பெற்றுள்ளது. இவ்வெற்றிக்கு ஒருவகையில் இங்குள்ள வெளிநாட்டவர்களும் காரணம் எனக் கூறலாம். இதில் முக்கியமானது பல வெளிநாட்டவர்கள் தமது வாக்குகளைப் பயன்படுத்துவதில்லை என்பதும் ஒருவகையில் காரணமாகும். தேர்தலின் பின்பு மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இங்கு வாழும் அமெரிக்கர்களும் இலங்கையர்களுமே மிகக்குறைவாக வாக்களிப்பதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது. தமிழர்களாகிய நாம் முதலாளித்துவ ஜனநாயகத்தின் ஆணிவேராகக் கருதப்படும் தேர்தலின் முக்கியத்துவத்தை உணர்வதில்லை. ஈழத்தில் போலி அரசியல்வாதிகளுக்கும், தேச நலனில்

சிறிதும் அக்கறையற்ற சமூக ஒடுக்குமுறையாளர்களிற்கும் வாக்களித்தும் கள்ள வாக்குகளை எண்ணிக்கையின்றியும் குவித்த நாம் இங்கு அதற்கான வாய்ப்பின்மையாலோ என்னவோ எமக்குரிய முக்கியமான கடமையிலிருந்து விடுபட்டு நிற்கிறோம். தேர்தலில் வாக்களிப்பதன் மூலம் எமது பிரச்சனைகள் முற்றாகத் தீர்ந்துவிடும் எனக் கூறுவதற்கில்லை. எனினும் எமது கழுத்தை நோக்கி நீட்டப்பட்டிருக்கும் கத்தியானது இன,மத, நிற வெறியர்களிற்கு குறைந்தபட்சம் ஒரு தற்காலிக பின்னடைவையாவது ஏற்படுத்தலாம். நோர்வே நாட்டு அரசியலில் இங்கு வாழும் தமிழர்கள் கூடியபட்சமாவது ஈடுபாடு காட்டவேண்டும் என்பதற்காகவே சற்று விளக்கமாக இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்தவ மக்கள் கட்சியின் புதிய பெண் தலைமையும் புதிய தேர்தல் யுக்திகளும் கட்சிக்கு முன்பைவிட ஓரளவு கூடிய செல்வாக்கைப் பெற்றுத் தந்துள்ளன. நாட்டின் மேற்கு, தென்மேற்குப் பிராந்தியங்களில் பலமான செல்வாக்கைப் பெற்றுள்ள இக்கட்சிக்கு வரலாற்றில் முதற் தடவையாக ஒரு பெண் தலைமையேற்றுள்ளார். இதுவரை காலம் கிறிஸ்தவர்கள் மட்டுமே இக்கட்சிக்கு வாக்களிப்பதாகக் கொள்கையளவில் கருதப்பட்டு வந்தது. எனினும் இம்முறை, தேர்தற் பிரசாரங்களில் எமது கட்சிக்கு வாக்களிக்க நீங்கள் கிறிஸ்தவர்களாக இருக்க வேண்டிய அவசியமில்லை என்ற பிரசாரம் தீவிரப் படுத்தப்பட்டது. இங்கு வாழும் கறுப்பின வெளிநாட்டவர்கள், அகதிகள் தொடர்பான கொள்கைகளில் சாதகமான போக்குகளைக் கொண்ட இக்கட்சியின் முன்னாள் தலைவரும், பாராளுமன்றக் குழுத் தலைவருமான ஷெல் மங்ண பொண்ணவிக் (Kjell Magne Bøndevik) இலங்கைத் தமிழர் விடயத்தில் நேரடியான ஈடுபாடு கொண்டவர்.

தீவிர இடதுசாரிப் போக்கை உடைய சிவப்புத் தேர்தற் கூட்டமைப்பு (Rød Valgallianse/ RV) முன்னைய தேர்தல்களைவிடப் பாரிய மாற்றங்கள்

எதையும் கொண்டிருக்கவில்லை. இன நிறவாதங்களுக்கு எதிராயும், கறுப்பின, வெளிநாட்டு மக்களின் பிரச்சனை வெளிக் கொணர்வதிலும் அதிக சிரத்தை எடுக்கும் இக்கட்சி, நாட்டின் சுற்றுப்புறச் சூழல் விடயத்திலும் ஈடுபாடு கொண்டுள்ளது. பொதுவில் இங்கு வாழும் கறுப்பின மக்களின் மத்தியில் ஓரளவு செல்வாக்கைப் பெற்றுள்ள இக்கட்சி இம்முறை கறுப்பின மக்களின் ஒட்டுமொத்த ஆதரவையும் பெறமுடியாமல் இருந்துள்ளது. தீவிர இடதுசாரிப் போக்கைக் கொண்டுள்ள போதும், போலிக் கொம்யூனிஸ்ட்



இனவாதத்திற்குக் கிடைத்த அமோக அறுவடை

தேர்தலிற்கு ஒரு சில நாட்களிற்கு முன்பு நோர்வேயின் பிரபலத் தினசரியான "டாக்பிளாத" (Dagbladet) அதிர்ச்சி தரக்கூடிய செய்தி ஒன்றை வெளியிட்டது. முன்னேற்றக் கட்சியின் முக்கிய உறுப்பினரும் கட்சியின் நிர்வாக அங்கத்தவர்களில் ஒருவருமான "ஒய்ஸ்ரைன் ஹெட்ஸ்ரொம்" (Oystein Hedstrom) என்பவர் ஐரோப்பாவில் முனைப்புப் பெற்றுவரும் இன - நிற வாதிகளுடனும் புதிய நாஜிகளுடனும் இரகசிய தொடர்புகள் வைத்திருப்பதாகவும் அவர்களின் இரகசியக் கூட்டங்களில் பங்குபற்றியதாகவும் கூறி தகுந்த ஆதாரங்களுடன் செய்தி வெளியிட்டது. தேர்தல் முடியும் வரை ஹெட்ஸ்ரொம்மை தேர்தல் பிரச்சாரத்தில் பங்குபற்ற வேண்டாமென கேட்டுக்கொண்ட கட்சி தலைவர் "ஹாகன்" இவ் விடயம் தனக்கு அதிர்ச்சி அளிப்பதாகக் கூறியிருந்தார். எனினும் இவ்விடயம் பற்றிய சகல விபரங்களும் கட்சித் தலைவரிற்குத் தெரியும் எனவும் அவரின் முழுமையான சம்மதத்துடனேயே ஹேட்ஸ்ரொம் தங்களின் கூட்டங்களில் பங்கு பற்றியதாகச் சம்மந்தப்பட்ட நிறவாத அமைப்புக்கள் கூறியுள்ளன. எது எப்படியோ ஹேட்ஸ்ரொம்மின் தொடர்பு கட்சிக்கு அமோக விளைச்சலைத் தந்துள்ளது.

தலைமைகளையும், நாடுகளையும் விமர்சனத்திற்கு உட்படுத்தத் தவறியது கிடையாது. அண்மைக் காலமாக நோர்வேயில் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பலதரப்பட்ட பிரச்சனைகட்கும் ஆதரவாக

நின்று செயற்படும் கட்சிகளில் முக்கியமான இக்கட்சி, வரும் காலங்களில் தனது கட்சியின் செயல் வடிவங்களை மக்களை நோக்கி நகர்த்துவதன் மூலமும், நாஜிகள் - இன நிறவாதிகளுக்கு எதிரான போராட்டங்களில் மக்களை அணிதிரட்டுவதன் மூலமுமே கட்சியின் கனவான நோர்வே ஒரு பல்லின சமுதாய நாடு என்பதை நிலைநாட்டலாம்.

இத்தேர்தலில் இரண்டாவது வெற்றியைப் பெற்ற கட்சியாக இடது கட்சியே உள்ளது.

கட்சியின் பெயர் இடது என்றாலும் இது

வலதுசாரிக் கொள்கைகளையே கடைப் பிடிக்கிறது. பல வருடங்களின் பின் இக்கட்சி இன்று பெற்றுள்ள வெற்றி பெரியது. 1993 தேர்தலில் ஒரேயொரு பாராளுமன்ற இடத்தைப் பிடித்த கட்சி,

இன்றைய தேர்தல் பாராளுமன்றத் தேர்தலாய் இருந்திருப்பின், ஏழு இடங்களைப் பிடித்திருக்கும். வெளிநாட்டவர், அகதிகள் விடயங்களில் சாதகமான போக்கைக் கொண்ட கட்சியின் தலைவர் எய்னார் டோரும் (Einar Dorum) அவர்களே நோர்வேஜிய வெளிநாட்டவர் இணைப்பதிகாரியாய்த் தொழிற்படுகிறார். கட்சியின் வெற்றிக்குக் கட்சித் தலைமையே முக்கிய காரணம் எனக் கூறப்படுகிறது. பொதுவாகக் கலைஞர்கள் பலர் இக்கட்சியை ஆதரிப்பதாகப் பத்திரிகைகள் கூறுகின்றன. நோர்வேயின் பிரபல கலைஞர்கள் இக்கட்சியையே ஆதரிக்கின்றனர்.

நடைபெற்ற தேர்தலில் முன்னேற்றக் கட்சி (Fremskrittsparti/ FrP) பெற்ற பாரிய வெற்றிக்கு, இக்கட்சி வெளிநாட்டவர் தொடர்பாகப் பின்பற்றும் (மிகக் கடுமையான) கொள்கை, ஏனைய கட்சிகளது வெளிநாட்டவர் கொள்கைகளைவிடச் சிறப்பானது என்று பல நோர்வேஜியர்கள் கருதுவது காரணமாகும் எனக் கூறப்படுகிறது. இதுவே யதார்த்த பூர்வமான உண்மையுங்கூட. முன்னேற்றக் கட்சியின் வெற்றி முழுக்க முழுக்க இன - நிறவாதத்தை மையப்படுத்தியே என்பதில் //

இதுவன்றோ யதார்த்தம் ?

இரண்டு பிள்ளைகளிற்கு மேல் பெறாத வெளிநாட்டவர்களே உண்மையான நோர்வீஜியர்கள் என்ற அங்கீகாரத்தைப் பெற (குடியுரிமை பெற) தகுதி உடையவர்கள் என்பது முன்னேற்ற கட்சியின் முக்கிய பிரமுகர் ஒருவரின் அப்பட்டமான இன, நிறவெறி கருத்தாகும். இக்கட்சியின் வெளிநாட்டவர் கொள்கை பற்றி ஆளும் தொழிற் கட்சி பிரமுகரான ஒஸ்லோ மாநகர முதல்வர் என்ன கூறுகின்றார்தெரியுமா? வெளிநாட்டவர்

பற்றிய கொள்கையில் எமது இரு கட்சிகளிற்கும் இடையில் பெரியளவிலான முரண்பாடுகள் (குறைவான முரண்பாடுகளே) எதுவும் கிடையாது. முதல்வரின் கருத்தை தொழிற் கட்சிப் பிரமுகர்கள் கடுமையாகக் கண்டித்துள்ள போதும் அவரது நிர்வாகத்திற்கு உட்பட்ட, ஒஸ்லோவில் வாழும் பல ஆயிரம் கறுப்பின மக்களும் இதை எவ்வாறு சகித்துக்கொள்ளப் போகின்றார்கள்? தனிமனித உரிமைகள் எல்லாம் வெள்ளை நிறத்தைக் கொண்ட நீலநிறக் கண்களிற்கு மட்டுமே சொந்தமான விடயங்களா?

சிறிதும் சந்தேகமில்லை. தேர்தலில் இக்கட்சி மிக உயர்த்திப் பிடித்த பிரச்சனை, கறுப்பின வெளிநாட்டவர்கள் பற்றியதே. கட்சியின் தேர்தல் முடிவுகளை ஆராயும் எவரும் இதைத் தெளிவாக உணர முடியும். கட்சியின் வெளிநாட்டவர்/ அகதிகள் விடயப் பொறுப்பானவரும், முக்கிய உறுப்பினருமான ஹெட்ஸ்ட்றோம் (Hedstrom) புதிய நாஜிகளுடன், இன - நிறவாத அமைப்புகளுடன் தொடர்பு வைத்திருந்தது பற்றிப் பத்திரிகைகள் பக்கம் பக்கமாக அலசி உண்மைகளை வெளியிட்ட போதும் (பார்க்க பெட்டிச் செய்தி) முன்னேற்றக் கட்சியின் வெற்றியை அது சிறிதளவும் பாதிக்கவில்லை. மாறாக முன்பைவிட அதிக ஆதரவைக் கட்சி பெற முடிந்தது. இந்நிலை ஏற்படக் காரணம் என்ன? நோர்வே மக்கள் இன - நிறவாதக் கருத்தமைவுக்கு உட்படுத்தப் பட்டுள்ளனரா? அண்மைய கருத்துக் கணிப்பு ஒன்று சுமார் 80% மக்கள் வெளிநாட்டவர் பற்றி அச்சங் கொண்டுள்ளனர் எனக் கூறுகிறது. முன்னாள் ஒஸ்லோ மாநகர முதல்வர் ஞாண கொராட்ஸன் (Rune Gerhadsen), வெளிநாட்டவர் பற்றிய அச்சம் கொண்டுள்ள அனைவரையும் இன நிறவாதிகளாக முத்திரை குத்துவது தவறு எனக் கூறுகிறார். இதைக் கூறும்

கொராட்ஸன் இதற்கான மாற்றீட்டையும் அல்லவா முன்வைத்திருக்க வேண்டும். என்னதான் முன்னேற்றக் கட்சி வெற்றி பெற்றாலும், மொத்த வாக்காளர்களில் 12%இனர் மட்டுமே அதற்கு வாக்களித்துள்ளனர்; ஏனைய 88%இனர்

அதை எதிர்த்தே வாக்களித்துள்ளனர் எனக் கூறி மழுப்புகின்றனர் பிரதமர் குறுா ஹாலம் புருண்ட்லாந்தும், அவரது கட்சித் தலைவர் துார்பியோன் யாகலாண்டும். இவர்களது இச்செய்தி யதார்த்தத்திற்கு முற்றிலும் மாறானது. கறுப்பின மக்கள் வாழும் இடங்களில் முன்னேற்றக் கட்சி அபரிமிதமான வளர்ச்சியைக் கண்டுள்ளது. இது நாடு தழுவிய ரீதியில் காணப்படுகிறது, குறிப்பாக ஒஸ்லோவில் வட, தென் பகுதிகளில் வெளிநாட்டவர் செறிந்து வாழ்கின்றனர். இங்கெல்லாம் பிரதான எதிர்க் கட்சியான வலதுவைப் பின்தள்ளி, முன்னேற்றக் கட்சி இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளது. இந்நிலையில் வாக்குவீதங்களைப் பற்றியே கதைத்துக் கொண்டிருப்பதில் பயனில்லை. ஒஸ்லோவில் ஏற்பட்டநிலை நாட்டின் ஏனைய பிரதேசங்களிலும் எச்சமயத்திலும் ஏற்படலாம். ஒஸ்லோவின் வடபகுதி முழுவதும் சுமார் 25% வாக்காளர்கள் இக்கட்சியையே ஆதரித்துள்ளனர். அதிலும் ஹெல்லருட் (Hellerud), ஸ்ரவ்ணர்

---

முன்னேற்றக் கட்சியின் எதிர்பாராத அசுர வளர்ச்சி

கறுப்பின மக்களிற்கு எதிரான இன - நிறவாதப் பிரச்சாரத்தைத் தீவிரப்படுத்தியதன் மூலம் 1987 மாகாணத் தேர்தலில்பெரும் வெற்றியீட்டிய முன்னேற்றக் கட்சி தொடர்ந்து நடைபெற்ற 1989 (பாராளுமன்ற), 1991 (மாகாணத்) தேர்தல்களில் பெரும் பின்னடைவை அடைந்தது. இந்நிலையில் கட்சியின் பல மூத்த அங்கத்தவர்களின் ஆலோசனையின் பிரகாரம் இன - நிறவாத பிரச்சாரங்களைக் கூடியளவு தவிர்த்துக் கொள்வதெனக் கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளப் பட்டது. எனினும் கட்சிக்குள் நிலவிய உட்கட்சி முரண்பாடு காரணமாக அதிருப்தியுற்ற பல உயர்மட்டத் தலைவர்கள் கட்சியை விட்டு வெளியேறினர். 1993 தேர்தலைக் கருத்திற் கொண்டு மீண்டும் கட்சி இன - நிறவாதப் பிரச்சாரங்களை மேற்கொண்ட போதும் எதிர்பார்த்த வெற்றி கிட்டவில்லை 1994இல் கட்சிக்குள் ஏற்பட்ட பாரிய பிளவைத் தொடர்ந்து கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் கட்சியிலிருந்து வெளியேறிப் பாராளுமன்றத்தில் சுயமாக இயங்கி வருகின்றனர். இதேகாலகட்டத்தில், கட்சிக்குள் புதிய சீர்திருத்தங்களை மேற்கொள்ள விரும்பிய கட்சியின் பிரதித் தலைவர், செயலாளர் உட்பட பல மாநில அமைப்பாளர்கள் கட்சியை விட்டுக் கூண்டோடு வெளியேற்றப் பட்டனர். இளைஞர் அமைப்புக்கள் சில முற்றாக் கலைக்கப் பட்டன. அதிதீவிர முதலாளித்துவ அமைப்பான இக்கட்சி நோர்வே மக்களுக்கு வழங்கப்படும் சமூகக் கொடுப்பனவுகள் உள்ளடங்கலாக இங்குள்ள அடிப்படை வசதிகள் தொடர்பாகவும் கடும் போக்கைக் கொண்டுள்ளது. கடந்த சில வருடங்களாகத் தோல்வியையே சந்தித்து வந்த கட்சிக்கு அன்மைக் காலமாக கறுப்பின மக்களிற்கு எதிராக மேற்கொள்ளப் பட்ட கடுமையான தீவிர எதிர்ப் பிரச்சாரம் வெற்றியை அள்ளிக் குவித்துள்ளது.

---

முதலாவது வெளிநாட்டுப் பெண்மணி

பேர்கன் (Bergen) மாநகரசபைக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள ஆபிரிக்கப் (தன்ஸானியா) பெண்மணி சிகு அலி (Chicu Ali) என்பவரே நோர்வே வரலாற்றில் மாநகர சபையொன்றிற்கு தெரிவான முதலாவது வெளிநாட்டு பெண்மணியாவர். 1984இல் நோர்வேக்கு வந்த இவர் சமூக விஞ்ஞானத் துறையில் உயர்கல்வியையும் நாடக/நடன துறையிலும் கல்வி கற்றார். ஆபிரிக்க நடனத்தை பயிற்றுவித்து வரும் இவர், சிவப்பு தேர்தல் கூட்டமைப்பு (R.V) கட்சியின் பிரதிநிதியாகவே தெரிவாகியுள்ளார்.

---

கொள்கை என்ன கொள்கை எல்லாமே பதவிதான்

தேர்தலில் கட்சிகள் எவ்வளவுதான் கொள்கையைத் தூக்கி பிடித்தாலும் ஒரு சில இடங்களில் பதவிக்காக "எதையும் செய்ய - எவருடனும் கூட்டுச்சேர" சிலர் தயாராகவே உள்ளனர் இதற்குப் பிரபல கட்சிகளான தொழிற் கட்சி, வலது கட்சி என்பனவும் கூட விதிவிலக்கல்ல "நித்தடால்" (Nittadal) "லார்விக்" (Larvik) நகரசபைகளில் தொழிற் கட்சி, முன்னேற்றக் கட்சி என்பன கூட்டாக நிர்வாகத்தை நடத்துவது பற்றி விவாதித்து வருகின்றன. ஒஸ்லோவில் முன்னேற்றக் கட்சியின் மறைமுக ஒத்துழைப்புடன் தொழிற் கட்சி, வலது கட்சி என்பன நிர்வாகத்தை தக்கவைத்துக் கைப்பற்ற முனைந்துள்ளன. "ட்ரம்மன்" (Drammen) மாநகரசபையின் வலது கட்சி மேயர் "துாரிற் விக்ஸ்ராண்ட்" (Turid wickstrand) தனது பதவியைக் காப்பாற்றிக் கொள்ள பாசிஸ நிறவெறி கட்சியான "குடிவரவைத் தடை செய் " (Stop innvandring) கட்சியுடன் கூட்டு சேர்ந்து செயல்படுகின்றார்.

---

(Stovner) பிரதேசங்களில் கட்சி பாரிய வெற்றியை ஈட்டியுள்ளது. இந்நிலைமைகளுக்கு ஆளும் தொழிற் கட்சியின் இரட்டை வேடமும் ஒரு காரணம் எனலாம். இற்றைவரை மூன்றாம் உலகத்தவர், அகதிகள் தொடர்பாக ஒரு தெளிவற்ற நிலைப்பாட்டையே அரசு கையாள்கிறது. இந்நிலை மாற்றப்பட்டு இம்மக்கள் தொடர்பான நிலையான, சரியான கொள்கை கடைப்பிடிக்கப் படும்வரை முன்னேற்றக் கட்சி போன்ற கட்சிகளின் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்த இயலாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவடுகள்

## எம்மைச் சூழவுள்ள அபாயம்

அண்மையில் நிகழ்ந்த நோர்வேயின் உள்ளூராட்சித் தேர்தல்கள் பல எதிர்பாராத முடிவுகளைத் தந்துள்ளன. இவற்றில் முக்கியமானது, வெளிநாட்டவர்களை எதிர்க்கும் கட்சிகளின் குறிப்பிடத்தக்க வெற்றி. வாக்காளர் தொகையிற் கணிசமானோரது முடிவுகளை இம்முறை இனவாதம் தீர்மானித்திருக்கிறது.

இங்கு உள்ள கட்சிகளில் வெளிப்படையாகவும், உறுதியாகவும் நிறவாதத்தை எதிர்க்கும் கட்சிகள் குறைவு. அனேக கட்சிகளில் வாக்காளர்களிற் கணிசமானோர் வெளிநாட்டவர்களை விரும்பாதவர்கள் என்ற கணிப்பீடு தெளிவாகியுள்ளது. வெளிநாட்டவர்கள் கருத்தடை செய்துகொண்டாலேயே அவர்களை இங்கு தொடர்ந்து வாழ அனுமதிக்கலாம் என்று ஒரு கட்சி தேர்தலின் பின்னர் கூறியிருந்ததும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டியது. இம்முறை தேர்தலில் பல கட்சிகள் வெளிநாட்டவர் தொடர்பான விவாதங்களைத் தவிர்க்க விரும்பியபோதும் இனவாதக் கட்சிகள் அவ்விவாதங்களைத் தொடர்ந்து கிளறி, இனவாத அலைலைத் தேர்தலின் முன்பு பரவவிட்டிருந்தன.

தேர்தலுக்கு முதற் தினங்களில் ஒஸ்லோவில் நிகழ்ந்த இரு படுகொலைகளில் நேரடியாக வெளிநாட்டவர்கள் சம்பந்தப்பட்டிருந்தமை வெளிநாட்டவர்களே வன்முறைக்குக் காரணமானோர் என்ற அபிப்பிராயம் வலுக்க உதவி புரிந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. எம்மவரிடையேயும் வன்முறைகள் அவ்வப்போது பெரிய அளவில் தலைதூக்கியுள்ளன. இவ்வாறான வன்முறைகள் மட்டுமன்றி எமது ஒவ்வொரு செய்கையும் இனவாதக் கண்ணோட்டத்தில் நோக்கப்படக்கூடிய அபாயம் இருப்பதை நாம் மறந்துவிட முடியாது. இனவாதிகள் தமது வாதங்களைப் பலப்படுத்தும் விதத்தில் நாம் நடந்துகொள்வது எமக்கு ஆபத்தாகவே முடியும்.

இனவாதத்திற்கு எதிராக ஒரு நடவடிக்கையும் மேற்கொள்ளாமல், இனவாதம் பற்றிய பயத்தைப் பரப்புவதிலோ, அசட்டையாக இருப்பதிலோ நாம் தொடர்ந்து ஈடுபடுவது எமக்கு மேலும் ஆபத்தைத் தரும் என்பதில் ஐயமில்லை. ஏனைய வெளிநாட்டவர்களுடனும், நிறவாதத்திற்கு எதிரான நோர்வேஜியர்களுடனும் இணைந்த நடவடிக்கைகளில் ஈடுபடுவது அவசியம். எமக்கு நிரந்தரமாகக் கௌரவமான வாழ்வை எமது தாயகத்தில் மாத்திரமே மீட்க முடியும். ஆயினும் இங்குள்ள தற்காலிக வாழ்வை இரண்டாம்தரப் பிரஜைகளாக வாழமுடியாது.

சுவடுகள் 70,
ஆவணி 95.

Suvadugal, A Tamil monthly from Norway, Issue nr 70.



# கலைஞர்கள் கலந்துகொண்ட கலந்துரையாடல்

அண்மையில் ஒஸ்லோவில் சில கலைஞர்கள் கலந்துகொண்ட கலந்துரையாடல் ஒன்றில், பல்வேறுபட்ட கலைஞர்கள் தெரிவித்த கருத்துகள் இங்கு தொகுக்கப்படுகின்றன. கலை, கலைஞர்களிடையேயான பல்வேறு பிரச்சனைகள் வெவ்வேறு கோணங்களில் கலந்துரையாடலில் கலந்துகொண்டோரால் அலசப்பட்டது. நடிப்பு, இசை, பாடல், தயாரிப்பு, நெறியாள்கை போன்ற துறைகளில் பங்களித்த கலைஞர்கள் இந்த நிகழ்வில் பங்கெடுத்தனர். இனிக் கலந்துரையாடலில் இருந்து:

யோகி: கலைத் துறையில் ஈடுபடுவோர் குறைவான பயிற்சியுடன் ஏன் தமது படைப்புகளை வெளிக் கொணர்கின்றனர்?

அன்ரன் டேவிட்: ஈழத்தைப் போல் போட்டிச் சூழ்நிலை இங்கு இல்லை. கலைஞர்கள் பிரிந்திருக்கிறார்கள் என்பதும், கலைஞர்கள் பஞ்சமும் காரணமாக இருக்கலாம்.

கோவிலூர் செல்வராஜன்: கையில் காசிருந்தால் எதையும் செய்யலாம் என்ற நிலை. காசிருக்கு ஆர்வமிருக்கு எனக் கலைஞர்கள் வெளியீடுகளைக் கொணர்வதால் பிழைகள் ஏற்பட்டு விடுகின்றன.

திலீபன்: கலையில் ஆர்வத்தை ஏற்படுத்துவதற்காக இதைச் செய்யலாம். நோர்வேஜியர்களும் ஆரம்பப் பயிற்சியுடன் கலை உந்தலைக் கலைஞர்களுக்கு ஏற்படுத்த இவ்வாறு செய்கிறார்கள்.

கே.சுந்தர் (குட்டி மாஸ்ரர்): கலை வளர்ச்சிக்கு இவ்வகை முயற்சி உதவாது. மேலும் வேறு சமூகக் கலைகளுடன் நாம் அரைகுறைப் பயிற்சியுடன் போட்டியிட முடியாது.

ரவிக்குமார்: இதை இரண்டு வகையாக நாம் பார்க்க வேண்டும். கலைத் திணிப்பு. மக்களின் கலைத் தேவை. தேவைகளை நோக்கித் திடீர் வளர்ச்சி ஏற்படுகிறது. ஈழத்தை நோக்கிச் செல்லவேண்டிய கலைப் படைப்புகளுக்குத் திடீர்த் தேவைகள் ஏற்படலாம்.

சில தேவைகளின் அடிப்படையில் கலைஞர்கள் தங்களை அபிவிருத்தி செய்தபின்னர்தான், சில விடயங்களைச் செய்ய வேண்டிய தேவை ஏற்படுகிறது. ஆர்வம் கலைஞர்களுக்கு வளர்ச்சியை ஏற்படுத்துகிறது.

அந்தோனி தியோப்பிலிஸ்: அரைகுறைப் பயிற்சிக்கு எமது கலைகள் நிறுவனப்படுத்தப் படாமையும் முழுநேரமாக ஈடுபடாமையும் காரணமாகலாம். அமைப்புகளின் வேண்டுகோளில் முழுமையான பயிற்சியின்மையுடன் குறுகிய காலப் படைப்பாகவே கலை நிகழ்வுகள் நிகழ்த்தப் படுகிறது. மேடைகளைப் பரீட்சார்த்தப் பயிற்சிக் களமாகப் பாவிக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திலீபன்: சடுதியாக நாடகம் போட வேண்டிய நிலை. பெண் கலைஞர்கள் இல்லாமையால், நடிகைகள் இல்லாது நாடகப் பிரதி தயார் செய்ய வேண்டிய நிலை. நாடகப் பிரதி ஏற்கனவே தயார் செய்யப் பட்டிருந்தாலும், மேடை ஏற்றல் வரும்வரை போதிய நாடகப் பயிற்சி மேற்கொள்ளாது இருத்தல் அரைகுறைப் பயிற்சியுடன் நாடகம் வரக் காரணமாகிறது.

யோகி: புலம்பெயர்ந்த தமிழர்களின் கலைகள் எதிர்காலத்தில் எமது வரலாற்றில் பதிவுறும். அதை ஈடுபாட்டுடன் செய்தல், இங்குள்ள கலைகளைக் கற்றல் எவ்வளவு முக்கியமானது? கலைஞர்களிடையே கலைத் தேடல் பரவலாகக் காணப் படுகிறதா?

ரட்ணா: கலைஞர்களுக்கு மொழிப் பிரச்சனை கற்றலுக்குத் தடையாகி விடுகிறது.

ரவிக்குமார்: கலைத் தேடல் உண்டு. ஆனால் அவர்களைச் சுற்றியுள்ள சக்திகள் அவர்களை மட்டுப் படுத்திவிடுகிறது. ஆர்வம், ஒரு விஷயத்தில் ஈடுபாடு தேடலை உருவாக்குகிறது. ஆர்வம் இல்லாவிடில் ப்ரொ∴பெஷனலாக (professional) மக்களிடையே கலைப் படைப்புகளைக் கொண்டுபோக முடியாது. பணம் சம்பாதிப்பதையே நோக்காகக் கொண்டு அமைந்துவிடும்.

யோகி: கலைஞனின் சமூகப் பொறுப்பு என்ன? சினிமாப் பாட்டைத் திறமாகத் திருப்பி இசையமைப்பதுடன் இசைக் கலைஞனின் பொறுப்பு முடிந்துவிடுகிறதா? எமது கலைகளை அடிப்படையாகக் கொண்டு இசை நிகழ்வுகளைத் தரவேண்டும் என்று நினைப்பீர்களா?

கே.சுந்தர்: அப்படியான சிந்தனை ஆரம்பத்தில் குறைவு. இலங்கையின் இசைக் குழுக்களுக்கு அப்படியான சிந்தனை இல்லை. சில விடயங்களைக் கட்டாயம் மக்களுக்குக் கொடுக்க வேண்டும் எனப் பரீட்சார்த்தமாகச் செய்வது குறைவு. ஈழத்துக் கலைகளுக்கு மக்கள் மத்தியில் வரவேற்பு உண்டு. மக்களும் கலைஞர்களை மாற்றலாம். கலைஞர்களும் மக்களை மாற்றலாம்.

கோ.செல்வராஜன்: மற்றவர்கள் உருவாக்கிய சினிமாப் பாடல்களை எப்படித் திறமையாகத் திருப்பிப் படித்தாலும் அதனால் திருப்தி ஏற்படுவதில்லை. சிங்களக் கலைஞர்கள் இந்தியப் பாடல்களை அடியொற்றிச் சில பாடல்களை இசைத்திருப்பினும், இப்போது அவர்கள் தமது சொந்தக் கலை வடிவங்களை உருவாக்குவதில் நல்ல நிலையினை அடைந்துள்ளனர். நாம் முற்றாகத் தமிழகச் சினிமாப் பாடல்களை நம்புவதால் அந்த நிலையினை அடைய முடிவதில்லை. சொந்த இசை உருவாக்கங்கள் மக்கள் மத்தியில் கைதட்டல் பெறும்போதே உண்மையான மகிழ்ச்சி ஏற்படுகிறது. அரபிக் கடலோரத்தினால் (ரகுமானின் புதிய பாடல்) அல்ல.

யோகி: மேற்கத்தைய மரபு, நாட்டுப் பாடல்களைப் பயின்றுள்ளீர்களா? அப்படியாயின் அவற்றை உங்கள் கலைப் படைப்புகளில் அவற்றைப் பயன்படுத்தியிருக்கிறீர்களா?

கே.சுந்தர்: அண்மையில் தீவிரமாக யோசித்து வருகிறேன். இந்த வருடம் என் மனதில் உள்ள விடயம் இதுதான். இதுவரை ஏதும் செய்யவில்லை.

ரவிக்குமார்: இரு கலாச்சாரங்களுக்கு இடையில் பாலம் கட்ட வேண்டிய தேவை இருக்கிறது. இந்த மேற்கத்தைய வடிவங்கள் எமது மக்கள் மத்தியில் எந்தளவு எடுபடுகிறது எனப் பரீட்சார்த்தமாகப் பயன்படுத்தியிருக்குகிறேன். கிழக்கு ஐரோப்பிய நாட்டார் பாடல்களுக்கும் எங்கள் நாட்டார் பாடல்களுக்கும் இடையில் நிறையத் தொடர்பு இருக்கிறது. Imagine என்ற பாடலை (பீற்றிள்ஸ் இசைக் குழுவினரது) நோர்வேஜியப் பெண்ணை வைத்துப் பாட வைத்திருக்கிறேன். இரு நோர்வேஜியப் பாடல்களுக்கும் வாசித்திருக்கிறேன்.

அ.தியோப்பிலிஸ்: தாசீஸியஸ் சிங்களக் கண்டிய நடனத்தைத் தனது நாடகங்களிலும் சிங்கள நாடகக் கலைஞர் சரத்சந்திரா நாட்டுக்கூத்தினைத் தனது நாடகங்களிலும் கொணர்ந்து புதிய வடிவங்களை உருவாக்கினார்கள். இந்த நாட்டின் நாடக வடிவங்களை அறிய முடியும். நேரப் பற்றாக்குறை, நிதிப் பிரச்சனை காரணமாக முடியாதுள்ளது. நாம் எமது குறுகிய வட்டத்தினைத் தாண்டி, எல்லைகளை விரிவாக்க வேண்டும். தமிழருக்கென்று, கூத்து கோலாட்டம் போன்றவற்றை இணைத்து ஒரு தேசிய நாடக வடிவத்தினை உருவாக்க வேண்டும்.

யோகி: கலைத்துறையில் இங்கும் இலங்கையிலும் ஈடுபடுவதில் உள்ள வேறுபாடு என்ன?

கோ.செல்வராஜன்: கலைப் படைப்புகளை உருவாக்கும்போது புலம்பெயர்ந்த மக்களின் சூழ்நிலை, பிரச்சனை ஏன் இங்கு வந்திருக்கிறார்கள் என்பன கருத்தில் எடுக்கப்பட வேண்டும். நாம் இலங்கையில் இருந்தபோது பொழுதுபோக்கிற்காகக் கலைநிகழ்வுகளே போதுமாக இருந்தது.

யோகி: எவ்வளவு தூரம் இங்கு கலைப் படைப்புகள் புலம்பெயர்ந்தோரது பிரச்சனை பற்றிப் பேசியிருக்கின்றன?

கோ.செல்வராஜன்: நாடகங்கள் புலம்பெயர்ந்த மக்களின் சூழ்நிலைப் பிரச்சனைகளைப் பிரதிபலிக்க வேண்டும். அண்மையில் அவைக்காற்றுக் கலைக்கழகத்தினரின் மூன்று நாடகங்கள் எந்த வகையிலும் எமககுப் பரயோசனமற்றவை என்பது எனது தனிப்பட்ட கருத்து. மழை என்ற தத்துவ நாடகம் எந்த வகையிலும் எங்களுக்கு அப்பாற்பட்ட காலத்தை நினைவூட்டுகிறது. இஙகு் பிரயோசனமற்றது. ஒளிவிழாவில் நிகழ்த்தப்பட்ட தியோப்பிலிஸின் "கட்டுமரப் பூக்கள்" ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது.

ரவிக்குமார்: ஈழத்து மக்களின் பாதகமான சூழல் காரணமாக எமது மனங்களில் ஏற்படும் பாதிப்புகளை வெளிக்கொணரும் நாடகங்களை

## அறிவுக்கு வழி 1794!

அண்மையில் பிரான்ஸ் அணுகுண்டுப் பரிசோதனை நடாத்த முன்பும், பின்பும் எழுந்த எதிர்ப்புக் குரல்கள் பல திசைகளிலும் இருந்து வந்தன. குரல் எழுப்பியவர்களில், பழைய கறை படிந்த கைகளும் இருந்தன. அணுகுண்டு கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் இதுவரை அதனைப் பரீட்சித்த நாடுகள் (ஆகக் குறைந்தது) ஏழு. இவற்றில் அதிக பரீட்சார்த்த வெடிப்புகளை மேற்கொண்ட நாடு அமெரிக்கா. ஆகக் குறைந்தது எனக் கருதப்படும் இந்தியா, இஸ்ரேல் தலா ஒரு குண்டை வெடிக்க வைத்திருந்தன. ஆனால் அமெரிக்காவோ 919 தடவைகள் இந்த விஷப் பரீட்சையை நடாத்தியுள்ளது. சோவியத் யூனியன் (430), பிரான்ஸ் (183), பிரிட்டன் (44), சீனா (38), இந்தியா, இஸ்ரேல் (தலா1) என்பனவும் இந்தப் பரிசோதனையில் ஈடுபட்டவை. இவை அணு ஆயுதம் வைத்திருப்பதாக உறுதியாக நம்பப்படும் நாடுகள். வேறு சில நாடுகளும் இந்தப் பட்டியலில் விரைவில் இணையலாம். அணுகுண்டுப் பரிசோதனையைப் பொறுத்தவரை ஏனைய அனைத்து நாடுகளையும் கூட்டினாலும் அமெரிக்காவைக் கிட்ட நெருங்க முடியாது. அமெரிக்கா வல்லரசு இல்லை என்று யாராவது சொல்வார்களா என்ன?

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேடையேற்றும்போது, புலம்பெயர்ந்த மக்களின் உணர்வுகளைப் பிரதிபலிப்பதால் நாடகத்துடன் ஒன்றிக்கும் வாய்ப்பு அதிகம். மழை போன்ற நாடகங்கள் நாடக நுணுக்கங்களை அறிபவர்களுக்கு உதவி செய்யலாம்.

திலீபன்: எமது நாடகங்கள் இங்குள்ள பிரச்சனைகளை முழுமையாக வெளிக் கொணரவில்லை. "முகவரி தேடியே" ஒரு நூறு பேரைத்தான் சென்றடைந்திருக்கும்.

யோகி: கலைத் துறையில் இங்குள்ள பொதுவான பிரச்சனை என்ன?

கே.சுந்தர்: கலைஞர்களை ஒன்று சேர்த்தல், அவசரப்படல், வீடுகளில் பயிற்சி செய்ய முடியாமை.

ரட்ணா: இங்குள்ள பிரபல நடிகர்கள் சர்வேந்திரா நெறிப்படுத்தினால் மாத்திரமே நடிப்பார்கள்.

கோ.செல்வராஜன்: திறமையான கலைஞர்கள் இங்கு பிரிந்து வாழ்கிறார்கள்.

ரவிக்குமார்: இங்கு சர்வேந்திராவுக்காக நாடகம் செய்பவர்கள் இருக்கிறார்கள். தான் சார்ந்த கட்சியை விளம்பரப் படுத்தும் கலைப் படைப்பு, இது தனிப்பட்ட பிரச்சனை அல்ல. சமூகத்தின் அடிப்படைப் பிரச்சனை. இதையும் எழுதுங்கள்: அடைப்புக் குறிக்குள் ஆங்கில வார்த்தை போட்டு எழுதும் புத்திஜீவிகள் இங்குகூட இருக்கிறார்கள். யோகிகூட அப்படி என்றே கருதுகிறேன். அப்படியானவர்கள் சமூகத்தில் வேலை செய்வது குறைவு, இவர்களுக்குச் சமூகத்தில் உள்ள பிரச்சனைகள், முட்டுக்கட்டைகள் விளங்குவதில்லை. ரட்ணா குறிப்பிட்டது இதே போன்றது.

சக்தி பிறக்குது தவிர சர்வேந்திரா நெறிப்படுத்திய எதுவுமே ஒரு சாதாரண பொதுவான சமூகப் பிரச்சனையை விளக்குவதல்ல. சகலதும் ஒரு குழுச் சார்ந்த பிரச்சார, விளம்பரப் படுத்தும் நோக்கம் கொண்டவை. விமலநாதன், திலீபன் போன்றவர்கள் இங்குள்ள சமூகப் பிரச்சனை தொடர்பாக நாடகம் எழுதியிருக்கிறார்கள். இங்குள்ள குழந்தைகள், எமது நாடு பற்றி நாம் என்ன feel பண்ணுகிறோம் என்பதைப் பற்றி எழுதியிருக்கிறார்கள். ஜனநாயக ரீதியாக ஈழத்தில் நடக்கும் கண்மூடித் தனமான படுகொலைகளை, மக்களுக்கெதிரான விடயங்களை அம்பலப் படுத்தும் நாடகங்களை மேடையேற்றும்போது, பங்கேற்கும் கலைஞர்கள் நாடகத்தில் இருந்து விலகுகிறார்கள்.

யோகி: இங்குள்ள கலைஞர்கள் என்ன அடிப்படையில் பிரிந்திருக்கிறார்கள்? எவ்வாறான பொதுத்தள அடிப்படையில் இவர்களை ஒன்றுபடுத்தலாம்.

ரவிக்குமார்: பொருளாதாரத்தை நோக்கிய கலைப் படைப்புகள் சில முரண்பாடுகளை உருவாக்கின. பின் தகுதி அடிப்படையில் யார் நன்றாக நிகழ்ச்சிகளை நடத்துபவர்கள் என்ற ரீதியில் பிரச்சனைகள் உருவாகின, இவைகளைக் காரணமாக அரசியல் ரீதியான பிரிவுகள் உருவாக, இப்பிளவுகளைச் சிலர் தங்களுக்கு ஏற்றவாறு பயன்படுத்திக் கொண்டார்கள். சமூகப் பிரச்சனை, கலாச்சாரம் எனும் அம்சங்களில் அரசியல் பின்னிப் பிணைந்துள்ளதால், மக்களுக்கு எது தேவை எனும் அடிப்படையில்கூட பொதுத்தளம் அமைக்க முடியாது. அரசியல்தான் கலைப் படைப்புகளிலும் பிளவுகளைப் பயன்படுத்துகிறது. கலை என்ற அடிப்படையில்தான் பொதுத்தளம் அமைக்கலாம்.

திலீபன்: நாங்கள்தான் பிளவுக்குக் காரணம். வில்லங்கத்திற்குப் பிரிக்கப் பட்டதும், முத்திரை குத்தப் பட்டதுமே பிரிவுக்குக் காரணம். நாம் எல்லோரும் கலைஞர்கள் என்று மட்டும் சிந்தித்தால் பொதுத்தளம் கட்டுப் படலாம்.

யோகி: ஆதிக்கம் செலுத்தும் கலைகளில் இருந்து எமது கலைகளை



மீட்க என்ன செய்யலாம்?

கே.சந்தர்: அப்படி நாமே ரசிகர்களைப் பழுதாக்கி விட்டோம். படிப்படியாகப் பழுதாக்கிய மாதிரிப் படிப்படியாக நல்ல கலைகளை ரசிக்கும் தன்மையை வளர்த்தெடுக்க வேண்டும். அதற்குரிய மாற்றம் நடந்து கொண்டிருக்கிறது. மக்களிலும் மாற்றத்தை அவதானிக்க முடிகிறது.

கோ.செல்வராஜன்: ரகுமானின் பாடல்களைத் திருப்பி அடிப்பதைவிட சொந்த உருவாக்கங்களை - எமது கலைகளை மக்களுக்குக் கொடுக்க வேண்டும்.

ரட்ணா: வளர்ந்துவரும் இளம் தமிழ்ப் பரம்பரை மேற்கத்தைய நவீன இசையை ரசித்து வருகிறது.

கோ.செல்வராஜன்: அப்படியாயின் வளர்ந்துவரும் பரம்பரைக்கு மேற்கத்தைய நவீன இசைதான் தேவை என்கிறீர்களா? எமது கலை, பாரம்பரியம் என்பவற்றை மறுக்கிறீர்களா?

ரட்ணா: மறுக்கவில்லை. மிகக் கஷ்டமானது. நாம் இலங்கையிலிருந்து வந்தபடியால் அதைப் பிடித்துக் கொண்டு நிற்கிறோம். இங்கு இருப்பவர்களுக்கு அதைப் புகுத்துவது நினைத்துப் பார்க்க முடியாது.

யோகி: இலகுவான கலைகளைக் கொடுத்தால் போதுமானது என்பது சரியான பார்வை ஆகாது.

ரவிக்குமார்: கலைஞர்களுக்குத் தன்னை முன்னேற்றப் படுத்துவதே பிரதான பிரச்சனையாகி விடுகிறது. முன்னேற்றப் பட்டவர்கள் சில விஷயங்களைச் செய்வது இலகுவாக இருக்கலாம். இந்த ஆளுமை மிக முக்கியமானது. நாம் செய்யும் படைப்புகள் சினிமாப் பாடல்களைவிடக் கேவலமானதாயின் சினிமாப் பாடல்களைப் பாடுவதே மேலானதாகும்.

கே.சந்தர்: ஈழத்து இசைக் கலைஞர் கண்ணன் சினிமாப் பாடல்களூடாக வளர்ந்தார். ஒரு இமேஜ் உருவான நிலையில், அந்த இமேஜைக் காப்பாற்றப் பல விஷயங்களைக் கற்றுத் தனது போக்கை முழுமையாக மாற்றினார்.

யோகி: இங்கு திறமையான நாடகக் கலைஞர்கள் உருவாகாத நிலையை எப்படிப் பார்க்கிறீர்கள்?

அ.தியோப்பிலிஸ்: பாலேந்திரா, தாஸீஸியஸ் பரந்த விமர்சனத்தின் ஊடாக வளர்ந்தவர்கள். இங்கு 500 பார்வையாளர், ஒரு யோகி அல்லது இன்னொருவரின் விமர்சனம் என்றே நாடகப் பரப்பு மட்டுப்படுத்தப் பட்டுள்ளது. இதற்கு வெளியே இன்னொரு ஆயிரம் பேர் நாடகம் பார்க்கும் வாய்ப்பு இல்லை. புதிய சந்தர்ப்பங்கள், புதிய விமர்சனங்கள் கலைஞர்களின் வளர்ச்சிக்கு மேலும் உதவலாம்.

யோகி: நாவலர் காலத்தில் எமது பாரம்பரியக் கலைகள் "இழிசனர் கலை" என ஒதுக்கப் பட்டன. பரதநாட்டியமும், கர்நாடக சங்கீதமும் எமது கலைகள் எனக்

சகலவிதமான
சிறந்த அச்சு
வேலைகளுக்கும்
சுவடுகள் பதிப்பகம்
Herslebs gt 43,
0578 OSLO.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டாடப் பட்டன. இன்று எமது பாரம்பரியக் கலைகள் மீளக் கொண்டுவரப் படுகின்றன. இந்த நிலையை எவ்வாறு பார்க்கிறீர்கள்? இங்கு அதற்கான பங்களிப்பாக என்ன செய்யலாம்?

கோ.செல்வராஜன்: பல்கலைக் கழகத்தில் வித்தியானந்தன் காலத்தில் நாட்டுக்கூத்து பிரபல்யம் அடைந்துவிட்டது. இக்கலைகள் இரண்டாம் தரமாகப் பார்க்கப் பட்டன.

கே.சுந்தர்: சமூக அந்தஸ்து கிடைக்கவில்லை. பரவலாக மக்களிடம் இக்கலைகள் கொண்டுவரப் படவில்லை.

ரவிக்குமார்: நாட்டுக்கூத்து கரையோர மக்களால் போடப்பட்டது. அக்குறிப்பிட்ட மக்களை கீழ்சாதியாகக் கருதி அக்கலை வடிவங்கள் உயர், மத்தியதர வர்க்கங்களால் அமுக்கப் பட்டன. குறிப்பாக வடக்கில் பரதநாட்டியம் போன்ற கலைகள் திணிக்கப் பட்டன. இன்று தேசியவாதத்தின் வளர்ச்சியோடு அடிப்படை விழுதுகளைத் தேடுகிறது. தமிழ்த் தேசியவாத வளர்ச்சி பல சாதக பாதகங்களை ஏற்படுத்தியிருக்கிறது. இந்த விடயத்தில் சாதக விளைவுகளை ஏற்படுத்தியிருக்கிறது.

திலீபன்: பரதநாட்டியம் ஸ்தாபனமயப் படுத்தப் பட்டது. சமூக அந்தஸ்து கிடைத்த ஒன்று. ஒழுங்குபடுத்தப் பட்டதொன்று. சாதாரண மக்களால் வாய்க்கு வந்த மாதிரி நாட்டுக் கூத்து, கும்மி பாடலாம். வந்த மாதிரியே செய்யலாம். அதனால் இதற்கு அந்தஸ்து கிடைக்கவில்லை. இந்து கலாச்சாரத்தினால் மனிதர்கள் ஒன்றாக இருந்தார்கள். நாகரிகம் அடைந்த காலத்தில் திராவிடர்கள் வாழ்ந்ததாகச் சரித்திரம் உண்டு. அது இப்போது பாகிஸ்தானுக்கும், பஞ்சாபிற்கும் இடையில் உள்ள எல்லைப் பகுதி. இதில் பிரிப்பதற்கு என்று ஒரு கலைகளும் இல்லை.

தியோப்பிலிஸ்: ....... இங்கு opera நிறுவன ரீதியாகப் பாதுகாக்கப் படுவதுபோல் எமது கலைகளுக்கு நிறுவன ரீதியான பாதுகாப்புக் கிடையாமை அந்தஸ்து இல்லாது செய்துவிட்டது.

ரவிக்குமார்: .... இங்கு கலைப் படைப்புகளை உருவாக்கும் போது எமது விழுதுகளை (எமது பாரம்பரியக் கலைகளை) செருகும் நிலை தன்னிச்சையாக ஏற்படுகிறது. உதாரணமாக தியோப்பிலிஸின் கட்டுமரப் பூக்களில் நாட்டுக்கூத்து பயன்படுத்தப் பட்டுள்ளது. நோர்வேஜிய மக்கள் மத்தியில் கலாசார நிகழ்வுகள் நிகழ்த்தும்போது பரதநாட்டியம், கர்நாடக இசை போன்றவையே நிகழ்த்தப் படுகின்றன. ஏன் எமது தேசியக் கலை வடிவங்களை நிகழ்த்திக் காட்டுவதில்லை. எமது தேசிய கலைகள் நிறுவன மயப்படுத்தப் படாமையால், அக்கலைகள் பயின்ற கலைஞர்களை ஒன்றிணைப்பது கடினமாக இருக்கிறது. இதனால் அந்நிகழ்வுகளை நிகழ்த்த முடியவில்லை.

திலீபன்: விஸ்வநாதன் – ராமமூர்த்தி காலப் பாடல்கள் எல்லாம் இளையராஜாவின் அன்னக்கிளி வந்ததும் ஏன் தொம்மென்று விழுந்தன. காலத்திற்குக் காலம் கலைகள் மாறும். பரதநாட்டிய, கர்நாடக சங்கீதமும் ஒருநாளைக்கு விழத்தான் போகிறது. ஒரு கலையோ, கலாச்சாரமோ, மொழியோ வளர வேண்டுமாயின், மற்ற விடயங்களை உள்வாங்க வேண்டும். அப்படியே இருப்பின் அழிந்துவிடும்.

ரவிக்குமார்: கலை வடிவங்கள் மாறலாம். ஆனால் எமக்கு எமது கலை அடையாளம் என்பது என்ன? அதுதான் மிக முக்கியமானது. நாட்டுக்கூத்து இருக்கலாம் அல்லது இல்லாது போகலாம். ஆனால் எமது தேவை, எமது அடையாளம் எது என்பதே முக்கிய கேள்வி.

யோகி: விமர்சனம் என்று, கலைஞர்கள் என்ற ரீதியில் எதை விளங்குகிறீர்கள்? உங்கள் நிகழ்ச்சி தீவிரமாக விமர்சிக்கப்படும் போது, எவ்வகை நிலையினை மேற்கொள்கிறீர்கள்?

ரவிக்குமார்: முகஸ்துதி கூறும் sentimental விமர்சனத்தால் எவ்வகைப் பயனுமில்லை. ஆனால் விமர்சகன் தனக்கு எல்லாம் தெரியும் எனும் அடிப்படையில் விமர்சிக்கும்போது, அது கலைஞர்களின் வளர்ச்சியைப் பாதிப்பதோடு, அவன் மீதான மற்றவர்களின் பார்வையையும் மங்கவைத்து விடுகிறது. (எனது நிகழ்ச்சி எதிர்மறையாக) விமர்சிக்கப்படும் போது, உடனடியாக நான் பாதிக்கப் படுவேன். ஏன் எதிர்மறையாக விமர்சிக்கப் படுகிறேன் என்று பார்ப்பேன். அப்படிப் பார்க்கும்போது சிலசமயம் அவ்விமர்சனங்களை ஒரு வகைக்குள் (catogary) போடவேண்டி வரும். அது எழுந்தமானமான விமர்சனமாக இருக்கலாம்.

கே.சுந்தர்: விமர்சனம் கலைஞர்கள் எதிர்பார்ப்பதைவிடத் தலைகீழாக வரும். அது நிகழ்ச்சியின் குறைபாடாகவோ, விமர்சனத்தின் குறைபாடாகவோ இருக்கலாம். தூக்கி எறியக் கூடாது, விமர்சனத்தைக் கலைஞர்கள் ஆராயவேண்டும்.

கோ.செல்வராஜன்: விமர்சகர்களின் தன்மை, சூழலை வைத்து விமர்சனத்தை நான் அக்கறையாக எடுப்பேன். முகஸ்துதி விமர்சனத்தைவிட, தீவிர விமர்சனம் மிகவும் உயர்ந்தது. விமர்சகனுக்கு போதிய தகுதி அறிவு இருக்கிறதா என்பதையும் கருத்திற் கொள்ள வேண்டும்.

**கலந்துரையாடல் மிக நீண்டதாயும் பல முரண்பாடான கருத்துகளை உட்கொண்டதாயும் இருந்தது. கலைஞர்கள் சமூக அக்கறை கொண்டவர்களாகவும் மேலைநாட்டு வாழ்க்கைச் சூழலால் ஓரளவு எல்லைப்படுத்தப் பட்டவர்களாகவும் காணப்பட்டார்கள். இவர்களால் கலந்துரையாடப்பட்ட பிரச்சனைகள், முடிவு காணப்பட முடியாதவை அல்ல. கலை வெளியீடுகளை (நாடகம், ஒடியோ, சி.டி வெளியீடு) அரைகுறைப் பயிற்சியுடன் வெளியிடுவது கலைக்கோ கலைஞர்களுக்கோ ஒரு பங்களிப்பான சாதனையாகி விடாது. நாளைக்கான அக்கறை எம்மிடம் எவ்வளவு இருக்கிறது எனக் கலைஞர்கள் சிந்திப்பது பாரிய சாதனைகளை நிகழ்த்தும் மனோதிடத்தைக் கலைஞர்களுக்கு அளித்துவிடும்.**

## நூறாண்டு காலம் வாழ்க!

ஐம்பது வயதே எம்மவரிற் சிலருக்கு வயோதிபம் போல. அதையும் கடந்து வாழ்பவர்கள் தமது
வயோதிபத்தை ஆரம்பிப்பதாகவே நாம் பொதுவாகக் கருதுகிறோம். ஆனால் நோர்வேயில் கடந்த வருடக்
கணக்குப்படி 383பேர் நூறு வயதைக் கடந்தவர்கள். இவர்களிற் பெரும்பான்மையினர் (303பேர்) பெண்கள்.
ஒஸ்லோ, ஹோடலாண்ட் (Hordaland) ஆகிய மாவட்டங்களிலேயே அதிகளவில் நூறு வயதினர்
வாழ்கின்றனர். நோர்வேயின் சனத்தொகையுடன் (42லட்சம்) ஒப்பிடுகையில் ஒரு லட்சம் பேரில் ஒன்பது
பேர் நூறு வயதுக்கு மேல் வாழ்வதாகக் கொள்ளலாம்.
பொதுவாகப் பெண்களே அதிக ஆயுளைக் கொண்டவர்கள் என்றாலும், நோர்வேயில் ஆண்களின்
சராசரி ஆயுள், பெண்களது சராசரியை விடவும் சற்றே கூடிய வீதத்தில் அதிகரிக்கிறது. இதற்குக்
காரணம், பெண்கள் ஆண்களின் □கூடாத பழக்கங்களை□ப் பழகிக் கொண்டு வருவதுதான் எனக்
கூறப்படுகிறது.

**மாது**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழில்: ந.சுசீந்திரன்

# இனிவரும் என் சந்ததிக்கு

(An Die Nachgeborenen)

## பேர்டோல்ட் பிறெக்ட்

Bertolt Brecht

I

உண்மையில் இருள் மண்டிய காலத்தில் நான் வாழ்கிறேன்!

சர்வ சாதாரண வார்த்தை கூட முட்டாள்தனத்தில் போய்முடிகிறது.
சுருக்கில்லாத நெற்றி இருப்பின் நெஞ்சில் உணர்வில்லை என்றாகிவிடுகிறது.
அதிர்ச்சிச் செய்தியைப் பெற்றுக்கொள்ளாதவனே
இன்னமும் சிரித்துக் கொண்டிருக்கிறான்.

என்ன காலமிது, இப்போ மரங்களைப் பற்றிப் பேசுவது கூட
பயங்கரக் குற்றமாகிப் போகிறது
ஏனெனில் ஒரு மௌனம் எத்தனையோ பயங்கரங்களைத்
தன்னகப்படுத்தி வைத்திருப்பதால்!
அதோ, அமைதியாக அந்த வீதியில் போய்க்கொண்டிருப்பவன்
ஆபத்தில் சிக்கித் தவிக்கும் அவன் நண்பர்களால் கூட
நெருங்க முடியாதவனாகி விட்டானா?

என் ஊதியம் கிடைக்கிறது என்பது என்னவோ உண்மைதான்.
இது முற்றிலும் தற்செயலானது என்பதை நம்புங்கள்
அதிலிருந்து என் வயிற்றை நிரப்பிக்கொள்ள
என்ன உரிமை இருக்கிறது எனக்கு?
எப்படியோ மன்னிக்கப்பட்டிருக்கிறேன்.
(இவ்வென் அதிர்ஷ்டம் போய்விடுமானால் நானும் தொலைந்தேன்)



குடி, சாப்பிடு இவையிருப்பதால் மகிழ்ச்சிகொள் என்கிறார்கள்!
என் ஆகாரம் பசித்தவர்களிடம் பறித்ததாய், நான் குடிக்கும் தண்ணீர்
தாகத்தில் இருப்பவன் ஒருவனுக்கு இன்னும் கிடைக்காததாய் இருக்கும்போது
எப்படி என்னால் குடிக்கவும் சாப்பிடவும் ஏலும்?
ஆனாலும் நான் குடிக்கிறேன், சாப்பிடுகிறேன்.

ஞானியாய் இருக்க எனக்கும் விருப்பம்.
ஏட்டில் ஞானம் என்னவென்றிருக்கு:
சண்டை உலகினைப் பிரிந்திருத்தலும்
இச்சொற்ப காலத்தைப் பயமின்றி வாழ்தலும்.
வன்முறையகற்றி, இன்னா செய்தாரை
நன்னயம் செய்தொறுத்து, ஆசைகள் துறந்தும்
அவற்றை மறந்தும் இருப்பவன் ஞானி.
இவையெல்லாம் என்னால் ஆகாதவை:
உண்மையில் இருள் மண்டிய காலத்தில் வாழ்கிறேன்!

II

ஒழுங்கிலா ஒரு காலத்தில்,
பஞ்சமும் பசியும் ஆட்சியில் இருக்கையில்
நகரங்களுக்கு நான் வந்தேன்.
மக்கள் கொதிக்கும் ஓர் நேரத்தில் நான் அவரிடம் வந்தேன்,
அவருடன் சேர்ந்தே நானும் கொதித்தேன்.
இவ்வாறே என் காலம் கழிந்தது
இந்த வுலகினில் எனக்கெனத் தந்தது.

கொலைகளுக்கிடையில் என் உணவமைந்தது
கொலைஞருக்கிடையில் நான் துயில் கொண்டேன்.
அன்பினைப் பேணச் சிரத்தையுமில்லை
இயற்கையை ரசிக்கப் பொறுமையுமில்லை
இவ்வாறே என் காலம் கழிந்தது
இந்த வுலகினில் எனக்கெனத் தந்தது.

என் காலத்தில் பாதைகள் சேற்றிலே சென்றடைந்தன
மொழிகளோ கொலைஞரிடம் என்னைக் காட்டிக்கொடுத்தன
என்னால் முடிந்தது கொஞ்சமே எனினும்
ஆட்சியிலிருப்போர் நான் இல்லாதமையால்
உறுதியாய் இருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படித்தான் நான் நினைத்தேன்
இவ்வாறே என் காலம் கழிந்தது
இந்த வுலகினில் எனக்கெனத் தந்தது.

பலமோ கொஞ்சம், இலக்கோ எங்கோ நெடுந்தொலைவில்
தெளிவாய்ப் பார்க்கக்கூடிய தொலைவுதான் எனினும்
என்னால் சென்று சேரத்தான் முடியவேயில்லை.
இவ்வாறே என் காலம் கழிந்தது
இந்த வுலகினில் எனக்கெனத் தந்தது.

III

நாங்கள் தாண்டுபோன வெள்ளத்தில் வெளிக்கிளம்பி வருவோரே
எங்கள் பலவீனங்களைப் பற்றிப் பேசுவீர்களேயானால்
நீங்கள் தப்பித்துவிட்ட இந்த
இருள் சூழ்ந்த எங்கள் காலத்தைப் பற்றியும் பேசுங்கள்.

மாறிமாறி
அடிக்கடி எங்கள் செருப்பிலும் அதிகமாய்த்
தஞ்சம் புகுந்தோம் பர தேசங்களில்
வர்க்கத்திடையில் மூண்ட போர்களிலோ
அநீதிகள் மட்டும் கண்டோம் அவற்றில்
கோபங் கொண்டவர் கொதித்தெழல் காணோம்

இவற்றினை மட்டும் நாம் கண்ணுற்றோம்:
சிறுமை கண்டு பொங்குதல்
எமைப் பிரித்தெடுத்தது
அநீதிற் கோபம் எம்
குரலுக்குச் சூடேற்றியது.
பரஸ்பர நேசத்தைத்தான்
மண்ணில் பரப்ப விழைந்தோம்
எனினும் நேசம் மிக்கோராய்
எம்மாலேயே இருக்க முடிந்ததில்லை.

ஆனால் நீங்கள்
மனிதர் மனிதரின் உதவியாள்
என்பதாய் இருக்க முடிந்தால்
எங்கள் நிலையினை புரிந்து
மன்னித்தவாறே எமை நினைத்திடுக.





தேசபக்தன்.

# தேசத்தின் குறிப்புகள்

உலகின் பேரினவாதிகளாலும், இன ஒடுக்குமுறையாளர்களாலும் ஒடுக்குமுறைக்கு உள்ளாகி வரும் மக்களது நலனில் சிறிதும் அக்கறையற்று, ஐ.நா.வும் உலகத் தலைவர்களும் ஐ.நா.வின் ஐம்பதாவது ஆண்டு விழாவைச் சிறப்பாகக் (?) கொண்டாடி வருகையில், இலங்கைவாழ் தமிழ் மக்கள் யுத்த விளிம்பில் நின்று தத்தளித்துக் கொண்டிருக்கின்றனர். கடந்த 12 வருட கால ஆயுதப் போராட்டத்தில் இலங்கையில் இன்று நிலவும் நிலை முன்னெப்போதையும் விட மோசமான நிலையாகும்.

சமாதானப் புறாவாகத் தன்னை வெளிக்காட்டிக் கொள்ளும் ஜனாதிபதி சந்திரிகா இலங்கையின் முன்னைய ஆட்சித் தலைவர்களைவிடத் தமிழ் மக்கள் மீது இராணுவக் காட்டுமிராண்டித் தனத்தை ஏவிவிடுவதில் தானே வல்லவர் என்பதைத் தொடர்ச்சியாகத் தானே வல்லவர் என்பதை நிரூபித்து வருகிறார். நவாலியில் தேவாலயத்தில் தஞ்சமடைந்திருந்த அப்பாவிப் பொதுமக்கள் மீது (இவர்களிற் பலர் குழந்தைகளும், வயோதிபர்களும்) நிகழ்ந்த திட்டமிட்ட விமானத் தாக்குதலும், நாகர்கோவில் பாடசாலை மீது சிறுவர்கள் கொல்லப்படும் விதத்தில் மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதலும் இதை நிரூபித்துள்ளன. இவ்விரு தாக்குதல்களிலும் ஏராளமானோர் கொல்லப்பட்டுப் பலர் அங்கவீனமாயுள்ளனர். அப்பாவிப் பொதுமக்களை அழிப்பதால், தமிழ் மக்களது தேசிய விடுதலைப் போராட்டத்தை அழிக்கலாம் எனச் சந்திரிகா அம்மையார் கனவு காண்பதாகத் தெரிகிறது. இம்முடிவை எடுத்த முன்னைய ஆட்சியாளர்கள் கற்ற பாடத்தையே இவர்களும் கற்க முயல்கின்றனர்.

சந்திரிகாவின் கோர யுத்தத்தை, இலங்கையிலும், வெளிநாடுகளிலும் வாழும் தமிழ்ப் புத்திஜீவிகளும், தமிழ் மக்களைப் புலிகளிடம் இருந்து விடுவித்து, அவர்களுக்கு ஜனநாயகம் வழங்குவதற்கான யுத்தம் எனக் காட்ட முற்படுகின்றனர். இந்த யுத்தம் நியாயமானது எனக் கூறும் அவர்கள், யுத்தத்தை மக்கள் பாதிக்காத விதத்தில் நடாத்துமாறும் கூறுகின்றனர். ஓர் இனத்தின் மீது தொடுக்கப்படும் யுத்தம் அடிப்படையிலேயே நியாயமற்றது என்பதை இவர்கள் மறந்து விடுகின்றனர். மனித உரிமைகட்கான யாழ்ப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்க அறிக்கைகளும், சமாதானத்துக்கான அமைப்புச் சார்பாக மனோரஞ்சன் என்பவரது அறிக்கையும் இந்த வகையினவே. இவ்வகையான கருத்துகள் அனைவராலும் கண்டிக்கப்பட வேண்டியவை. தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமையுடன் வாழ்வதற்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிவகைகளை இந்த அறிக்கைகள் எந்த விதத்திலும் ஏற்படுத்த மாட்டா. பதிலாக இதற்கு எதிர் விளைவுகளையே ஏற்படுத்தும்.

முன்னெப்போதும் இல்லாத உக்கிரத்துடன் இம்முறை வடக்கின் மீது போர் தொடுக்கப் பட்டிருக்கிறது. புத்தூர், அச்சுவேலிப் பகுதிகளூடாக இராணுவம் முன்னேற முயன்றதும் நிகழ்ந்த போரில் பாரிய அழிவுகள் ஏற்பட்டுள்ளன. முன்பைவிடப் பலாலி ராணுவ முகாமின் பரப்பு அதிகரித்துள்ளதுடன், அதிகளவு படையினராலும், கனரக ஆயுதங்களாலும் அது பலப்படுத்தப் பட்டுள்ளது. அண்மையில் நிகழ்ந்த "சூரிய பிரகாசம்" என்ற ராணுவ நடவடிக்கையால் குடாநாட்டின் காற்பகுதி ராணுவப் பிடிக்குள் வந்துள்ளதாக அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

வடக்கில் யுத்தம் தீவிரம் அடைந்த உடன் அதன் எதிரொலியாக விடுதலைப் புலிகள் கிழக்கிலும், கொழும்பிலும் தமது நடவடிக்கைகளைத் தீவிரப் படுத்தியுள்ளனர். கொழும்பில் ஈபிடிபி செயலாளர் டக்ளஸ் தேவானந்தாவின் வீடு தாக்கப் பட்டதில் அவரது பாதுகாவலர்கள் நால்வர் கொல்லப் பட்டதுடன், கட்டிடமும் சேதமடைந்தது. இச்சம்பவம் நிகழ்ந்த சில நாட்களில் இலங்கையின் முக்கிய எண்ணெய்க் குதங்கள் சில தாக்கப் பட்டன. இருநூறு கோடி ரூபாய் பெறுமதியான எண்ணெய் எரிந்ததுடன், சுற்றாடல் பெரும் பாதிப்புக்கு உள்ளாகி ஆயிரக் கணக்கானோர் இடம்பெயர நேரிட்டது. இத் தாக்குதலில் பங்கெடுத்த சிலர் பிடிபட்டதாகவும், ஏனையோர் கொல்லப் பட்டதாகவும் கொழும்புச் செய்திகள் கூறுகின்றன. இச் சம்பவத்தின் பின் கிழக்கில் நிகழ்ந்த தாக்குதல்கள் சிலவற்றில் எழுபதுக்கு மேற்பட்ட சிங்களப் பொதுமக்கள் தாக்கிக் கொல்லப் பட்டுள்ளனர். அடுத்தடுத்த தினங்களில் மேலும் பத்தொன்பது சிங்களப் பொதுமக்கள் வெட்டிக் கொல்லப்



தமிழ் மக்கள் மீது அரசின் படுகொலைத் தர்பார் தலைவிரித்தாடுகிறது. தினசரி அப்பாவிப் பொதுமக்கள் பலர் கொல்லப் படுகின்றனர். இத்தகு ஈனச் செயல்களைக் கண்டிக்கும் அதே சமயம், இதை நிறுத்தச் சிங்கள மக்களைப் படுகொலை செய்வது சரியெனச் சிலர் நியாயப்படுத்த முனைகின்றனர். அப்படியாயின், அரச பயங்கரவாதத்திற்கு நாமும் சளைத்தவர்களல்ல என்பதுதானா?

புலிகளை அழிக்கவல்ல, புலிகளை ஜனநாயகப் படுத்தித் தேசிய அரசியலுக்குக் கொண்டுவரவும், அதன்பின் தமிழ் மக்களுக்கு உரிமைகளை வழங்கவுமே இந்த யுத்தம் நிகழ்கிறது எனக் கூறும் பல தமிழ்ப் புத்திஜிவிகள் ஒரு விடயத்தை மறந்துவிடுகிறார்கள். புலிகளிடம் இத்தனை ஆயுதம் இருக்கும்போதே எதையும் தரத் தயாரில்லாத சிங்கள அரசு, புலிகளின் பலத்தைக் குறைத்தபின் எதையாவது தருவார்களா? எங்கள் அனைவருக்கும் காதில் பூ ஒன்றை வைத்துவிடுவார்கள் அவர்கள்.


தனிநபர்கள், மாற்றுக் கருத்துள்ளவர்கள் மீதான விடுதலைப் புலிகளின் வன்முறை எப்போதும் கண்டனத்துக்கு உரியதாக இருந்துள்ளது. டக்ளஸ் தேவானந்தாவின் மீதான தாக்குதல் (புலிகளால் மேற்கொள்ளப் பட்டிருப்பின்) அதுவும் அத்தகையதே. இவர்களை அம்பலப்படுத்தி, அரசியல் ரீதியில் தனிமைப் படுத்தி விடுவதே சரியான அரசியல். ஏற்கனவே இவர்கள் மக்களிடம் இருந்து அந்நியப் பட்டுப் போயுள்ளனர் என்பதைக் கடந்த தேர்தலில் காண முடிந்தது.

பட்டதாகச் செய்திகள் வந்துள்ளன. சிங்கள மக்கள் மீதான முதலாவது தாக்குதலில் சில தமிழர்களும் கொல்லப் பட்டதாக அறிய முடிகிறது. இச்சம்பவங்கள் அனைத்தும் விடுதலைப் புலிகளாலேயே செய்யப் பட்டதாகச் செய்திகள் கூறுகின்றன. ஆயினும் இச்சம்பவங்கள் எவராலும் உரிமை கோரப்படவில்லை; புலிகளால் மறுக்கப்படவும், கண்டிக்கப் படவும் இல்லை.

ஏனைய இனத்தவர்கள் மீதான படுகொலைகள் நீண்ட வரலாற்றைக் கொண்டவை. எமது விடுதலைப் போராட்டத்தில் இவ்வாறான சம்பவங்கள் பின்னடைவை ஏற்படுத்தக் கூடியவை. இவை கண்டிக்கப்பட வேண்டியவை. தமிழ் மக்களது நியாயமான போராட்டத்தைக் கொச்சைப்படுத்த நினைக்கும் போலி அரசியல்வாதிகள் இவவாறான சம்பவங்களைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தலாம். பொதுவாக இவ்வாறு கொல்லப்படுவோர் மிகவும் வறியோராகவே உள்ளனர். இவர்கள், உண்மையில் சிங்கள அரசால் பொருளாதார ரீதியிலும் வேட்டையாடப் பட்டவர்களே. இவர்களைச் சிங்கள அரசு பல சந்தர்ப்பங்களில் பலிக்கடாக்கள் ஆக்கியுள்ளது.

வடக்கைப் பிடிப்பதில் அரசு உறுதியாக உள்ளது என்பதை ராணுவ அதிகாரிகள் சிலரது பேச்சுகள் காட்டுகின்றன. ஆரம்ப நிலைகளில் புலிகளுக்கு ஏற்பட்ட இழப்புகளும், ராணுவம் உறுதியாக

## " சமாதானதிற்கான வெண்தாமரை இயக்கம் "





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னேறக் காரணமாக இருந்திருக்கலாம். அரச படையினர் மன உறுதிகொள்ளும் நிலை ஏற்பட்டால், அது தமிழ் மக்களை மேலும் அழிக்கவே வழிவகுக்கும். தற்போதைய சூழல் அவ்வாறான சாத்தியங்களையே கொண்டுள்ளது. யாழ்ப்பாணத்தைப் பிடிப்பது ராணுவத்தினருக்கு கௌரவப் பிரச்சனை போல இருக்கலாம். தமிழ் மக்களுக்கு அது உயிர்ப் பிரச்சனை. தற்போதாவது இலங்கை அரசினது யுத்தத்தை நிறுத்த முயற்சிப்பதே, சமாதான விரும்பிகள் எனக் கூறிக்கொள்ளும் அனைவரதும் கடமையாகும். ஏனெனில், சந்திரிகா அரசுக்கு யுத்தம் புரிவதற்காக மக்கள் வாக்களிக்கவில்லை, சமாதான வழிகளில் இனப் பிரச்சனையைத் தீர்க்கவே வாக்களித்தனர்.


இங்கு சுவடுகள் விற்பனைக்கு உண்டு

சகலவிதமான வீடியோப் பதிவுகளிற்கும்

தமிழ்ப்பட வீடியோக்களிற்கும்

S.V.S. VIDEO

T.P. 22 17 34 05

Motzfeldts gt 1

0187 Oslo



இங்கு சுவடுகள் விற்பனைக்கு உண்டு

ஆசிய, ஐரோப்பிய உணவுப் பொருட்கள்

தமிழ் வீடியோக்கள்

Yarl butikk


(ved Grorud T – bane stasjon)

Bergens vei 8
0963 oslo

Tlp.22155096

மாலை எட்டு மணி வரைக்கும் திறந்திருக்கும்



# மதச் சுதந்திரமும் மனிதச் சுதந்திரமும்

சிவசேகரம்

சமுதாயக் கோட்பாடுகள் சமுதாயத்துக்கும் மனிதருக்கும் இடையிலான உறவை வரையறுக்கின்றன. அதன் மூலம் அவை, ஒருபுறம், தனிமனிதச் சுதந்திரம் பற்றிய சில கட்டுப்பாடுகளை விதிக்கின்றன. மறுபுறம், தனிமனித உரிமைகள் தொடர்பான உத்தரவாதங்களையும் முன்வைக்கின்றன. மனிதரின் இருப்பு சமுதாய இருப்பாகவே வரலாற்றில் இருந்து வந்துள்ளது. இச் சமுதாய வாழ்வே இன்று தனிமனிதர் செய்யக்கூடிய பலவேறு வகையான காரியங்களை இயலுமாக்கியது. இவ்வகையிற் தனிமனித நலனும் சமுதாய நலனும் இணைந்தே செயற்பட்டு வந்துள்ளன. இவ்விரண்டு நலன்களுக்குமிடையில் முரண்பாடுகள் எப்போதுமே இருந்துள்ளன. ஆயினும் அம்முரண்பாடுகள் அடிப்படையிற் சினேகமானவை. சமுதாய மாற்றத்தில் இம் முரண்பாடுகட்குத் தொடர்பாகச் செயற்படும்போதே தனிமனிதரது பங்களிப்பு முக்கியத்துவம் பெறுகிறது. எனவே மனிதச் சுதந்திரம் எனும்போது நாம் தனிமனிதச் சுதந்திரம் என்ற ஒன்றை மட்டும் கருத்திற் கொள்ளாமல் சமுதாயம் என்ற முழுமையினது சுதந்திரத்தையும் அதன் முக்கியமான கூறுகளது சுதந்திரத்தையும் சேர்த்தே கருதவேண்டியிருக்கிறது.



சமுதாயக் கோட்பாடுகள் காலத்துடன் விருத்தியடைந்து வந்துள்ளன. மரபுகள், சடங்கு சம்பிரதாயங்கள் போன்ற சமுதாய வழக்குத் தொடர்பான வழிகாட்டல்கள் பரவலாகச் சமுதாய ஏற்பைச் சார்ந்து நிறப்ன. ஒழுக்கம், அறநெறிகள் போன்றனவற்றில் மதங்களுக்கு முக்கியமான பங்கு இருந்து வந்துள்ளது. உற்பத்தி உறவுகளிலும் தனியார் உடைமை, ஆளுமை, அதிகாரம் ஆகியவற்றிலும் மனிதரால் இயற்றப்பட்ட சட்டமுறைகளின் முக்கியத்துவம் பெரிது. இவற்றைவிட, மனிதரது சிறப்பான அக்கறைக்குரிய துறைகளுள்ளும் சிந்தனையையும், நடைமுறையையும் ஆளும் வழிகாட்டல்கள் உள்ளன. இவற்றிடையே, சமுதாய நடைமுறையிற் சரிபிழைகள் பற்றிய பொதுவான உடன்பாடு எப்போதுமே இருக்க அவசியமில்லை. சில மரபுகள் மத நம்பிக்கையுடனும், சட்டத்துடனும் முரண்படலாம். மத நம்பிக்கைகள் சட்டத்துடன் மாறுபடலாம். இவ்வாறான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரண்பாடுகள் சமுதாய வளர்ச்சியின்போது தவிர்க்க முடியாதவை. இவை மாற்றத்தின் கருவிகளாகச் செயற்படுபவை.

மரபுகளும் சமய வழிகாட்டல்களும் பகுத்தறிவின் அடிப்படையிலல்லாது ஒரு பாரம்பரியத்தின் அடிப்படையிலேயே தம்மை நிலைநிறுத்திக் கொள்வன. மரபுகள் கடந்தகாலச் சமுதாய நடைமுறையின் அடிப்படையில் தம்மை நியாயப்படுத்திக் கொள்கின்றன. மதங்கள் புலனறிவுக்கும் பகுத்தறிவுக்கும் அபபாற்பட்ட ஒரு ஞானத்தின் பேராலேயே பெருமளவும் தம்மை நியாயப்படுத்திக் கொள்கின்றன. சட்டங்கள் சமுதாய நிர்ப்பந்தத்தை ஏற்று மாறும் தன்மையுடையவை. மரபுசார்ந்த விதிமுறைகள் சமுதாய உட்பிரிவுகட்கு ஏற்ப மாறுபடலாம். மதங்கள் குறிப்பிட்ட ஒரு சமுதாய எல்லைக்கும் அப்பால் தமது ஆளுமையை வலியுறுத்த முனைகின்றன. சட்டங்கள் ஒரு சமுதாயத்திற்குப் பொதுவானவையாக வகுக்கப் படுகின்றபோதும், சில சூழ்நிலைகளில் மரபுகள், மதங்கள் தொடர்பான விஷயங்களில் அவை ஒரு சமுதாய அமைப்பிற்குள் விலக்குகளையோ வெவ்வேறு விதிகளையோ கொண்டு அமையலாம்.

மதங்கள் மனிதரின் புறவாழ்விற்கும் புலனுணர்வு சார்ந்த அறிவுக்கும் அப்பாற் பட்டதெனக் கூறப்படும் கருத்துக்கள் மூலம் தம்மை நியாயப்படுத்திக் கொள்வதால், மதங்களில் ஏற்படும் மாற்றங்கள் சமுதாய மாற்றங்களைவிடக் காலத்தால் மிகவும் பிற்பட்டவையாக அமைகின்றன. பெருவாரியான சூழல்களில், மிகுந்த தயக்கத்துடனும் இவ்வாறான மாற்றங்களின்றி மதங்களின் இருப்பு அசாத்தியமாகலாம் என்ற நிர்ப்பந்தத்தின் கீழுமே மாற்றங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

எல்லா மதங்களும் ஒன்றையே போதிக்கின்றன என்பது முற்றிலும் அபத்தமான ஒரு கூற்று. எல்லா மதங்களும், தமக்குரிய சூழலுக்கமைய அல்லது தமது தோற்றுவாயின் சூழலுக்கமைய, மனித நலனை மனதிற் கொண்டலை என்பதில் உண்மை உண்டு. ஆயினும், மனித நலன் என்பது என்ன, சரிபிழைகள் என்பன என்ன என்பது பற்றி எக்காலத்துக்குமான வரைவிலக்கணங்கள் இல்லை. எனவே, மதங்களின் பொதுமை மிகவுங் குறைபாடுடைய ஒன்றாகவே காணப்படுகிறது.

மறுபுறம், பகுத்தறிவின் அடிப்படையில் மனிதர் வந்தடையும் முடிவுகள் எப்போதுமே சரியானவையாகவும் தம்முள் உடன்பாடானவையாகவும் அமைய அவசியமில்லை. மனிதச் சிந்தனைகளதும் உணர்வுகளதும் அகச்சார்பான பண்பை நாம் முற்றாக மறந்துவிடக் கூடாது. வெறுமனே சட்டங்கள் மூலம் ஒரு நல்ல சமுதாயத்தை உருவாக்க முடியாது என்பதையும் மரபுகளும் மதங்களும் மனிதனது நடத்தையை நன்னெறிப் படுத்துவதில் ஆற்றியுள்ள நல்வ பங்கையும் நாம் மறுக்க முடியாது. அதேவேளை, மரபுகளும் மதங்களும் சமுதாய நீதியை மறுக்கவும் பயன்பட்டுள்ளன. இன்னமும் பயன்படுகின்றன. எனவே மதங்கள் பற்றிய நமது பார்வை வெறுமனே அவற்றை ஏற்பதா எதிர்ப்பதா என்ற தோரணையில் அமையமுடியாது. மதங்கள் மனித ஒடுக்கலுக்குப் பயன்பட்டுள்ளது போல மனித விடுதலையிலும் பங்களித்துள்ளன என்பதையும் நாம் கவனத்தில் எடுக்க வேண்டும். எந்த ஒரு மதத்தின் அடிப்படையிலும் மனித விடுதலைக்கான போராட்டத்தை அதன் இறுதி இலக்குவரை கொண்டுசெல்ல இயலாதிருப்பது ஏனென்றும் நாம் கவனிக்க வேண்டும். மனித விடுதலைக்குப் பயன்பட வேண்டிய விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் மருத்துவமுங் கூட, இன்று மனிதர்மீது மனிதர் ஆதிக்கம் செலுத்தும் வசதியை அதிகப் படுத்தியுள்ளன. எனவே மனித விடுதலையின் எதிரி தனியே மதமல்ல.

மதம் மக்களது அபினி என்ற மாக்ஸின் மேற்கோள் இவ்வளவு காலமும் மாக்ஸியம் மதத்தைத் தனது பிரதான எதிரியாகக் கொள்கிறது என்று காட்டுவதற்குப் பயன்பட்டு வந்துள்ளது. கொடுமையான சுரண்டலுக்கு உட்பட்ட மனிதனுக்கு மதம் ஆறுதலளிக்கிறது. அந்த ஆறுதல் மனிதனை அமைதிப் படுத்திப் போராட்ட உணர்வை மழுங்கடிக்கிறது என்ற கருத்திலும் கொடுமையான ஒரு சூழலில் மனிதன் நாடக்கூடிய ஒரே ஆறுதலாகவும் மதம் இருந்து வந்த உண்மையை மாக்ஸ் அழகாகக் கூறியுள்ளார். அபினி என்ற சொல்லை அதன்



தீய விளைவுகளைப் பற்றிய இன்றைய அறிவை மனதிற் கொண்டு நோக்கும்போது , மாக்ஸ், மதம் ஒரு நச்சுப் பொருள் என்ற நோக்கிற் கூறியதாக யாரும் எண்ண இடமுண்டு. இது குறைபாடான வாசிப்பின் விளைவு.

ஒரு மாக்ஸியவாதி நல்ல காரணங்கட்காக மதத்தை நிராகரிக்கலாம். தனிமனிதரது மதநம்பிக்கைகளை மதிக்க மறுப்பவராகவும் வழிபாட்டு, மத அனுட்டான உரிமைகளை மறுப்பவராகவும் அவர் இருப்பாராயின், அவரது மாக்ஸியச் சிந்தனை எவ்வளவு ஆழமான ஒன்றாக இருப்பினும், அவரால் மனித இனத்தின் விடுதலைக்கு அதிகம் பங்களிக்க முடியாது. எது முக்கியமான சமுதாய முரண்பாடு என்பது பற்றிய தெளிவு ஒரு மாக்ஸியவாதிக்கு அவசியம். மத நிறுவனங்கள் சுரண்டும் வர்க்கங்களோடு அணிவகுத்து நிற்கும்போது, அந்த நிறுவனங்களதும் அந்த மதத்தைச் சேர்ந்த மக்களதும் தேவைகட்கும் இடையிலான வேறுபாட்டை இனங்காண்பதன்

## 350 வருடத் தபாற் சேவை

நோர்வேயின் தபாற் சேவை ஆரம்பித்து இன்னும் இரு வருடங்களில் 350 ஆண்டுகள் நிறைவு பெறுகின்றன. இதைக் கொண்டாடும் நிகழ்வுகள் இந்த வருடமே ஆரம்பித்து விட்டன. செப்டம்பர் 22ம் திகதி வெளிவந்த ஒரு தொகுதி முத்திரைகள் தபாற்துறையின் வரலாற்றைக் கூறும் விதத்தில் வடிவமைக்கப் பட்டுள்ளன. இம் முத்திரைகள் வழமையைவிட அதிக வர்ணக் கூட்டுகள் பாவித்து அச்சிடப் பட்டன.




இதே தினத்தில் ஐ.நா.வின் பிறப்பின் 50வது ஆண்டு நிறைவு முத்திரை வெளியீடும், 25வது முத்திரை தினத்தைக் குறிக்கும் முத்திரை வெளியீடும் கொண்டாடப் பட்டன. கடந்த 25 வருடங்களாக நோர்வேயில் நிகழும் முத்திரை தினத்தில் ஏராளம் முத்திரை சேகரிப்பாளர் பங்கேற்கும் நிகழ்ச்சிகள் நிகழ்ந்துள்ளன.

**சிவன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலமே, மதத்தின் பேரால் சமுதாய மாற்றத்தை மறிக்க முனைவோரைத் தோற்கடிக்க இயலும். மறுபுறம், மதங்களின் பேரால் வெவ்வேறு வகைகளில் அடக்குமுறை ஆட்சியாளர்கட்கும் ஏகாதிபத்திய வாதிகட்கும் எதிரான கிளர்ச்சிகள் ஏற்பட்டுள்ளன. இவை பற்றிய ஒரு தெளிவான பார்வையும் நமக்கு அவசியம்.

மதங்கள் தமது தோற்றுவாயிலேயே பிற்போக்கானவையல்ல. மனித விடுதலை, சமுதாயச் சீர்திருத்தம் போன்ற இலக்குகளுடன் பல மதங்கள் பிறந்துள்ளன என நாம் அறிவோம். மதங்களுக்குள்ளே இருக்கும் அதிகார வர்க்கங்களின் ஆதிக்கத்துக்கு எதிரான கிளர்ச்சிகள் மதங்களின் பேரால் உருவாகி வளர்ந்துள்ளன. வைணவ, சைவ பக்தி இயக்கங்களின் வெகுஜனத் தன்மை பற்றின் விரிவாகவே ஆராயப் பட்டுள்ளது. கத்தோலிக்கத் திருச்சபைக்குள்ளிருந்தே லத்தீன் அமெரிக்காவின் விடுதலைக்கான இறையியல் உருவானது. அரபு நாடுகளின் கொள்ளைக்கார ஷேக்குகட்கும், சுல்தான்கட்கும் அரசர்கட்கும் எதிரான குரலாகவும் இஸ்லாமிய அடிப்படைவாதம் எழுகிறது.

அல்பானியப் புரட்சியில் பர்தா அணிந்த பெண்களும், திபெத்தில் தலாய் லாமாவின் நிலப் பிரபுக்களின் கிளர்ச்சிக்கு எதிராக சாதாரண பௌத்த லாமாக்களும், இலங்கையில் கம்யூனிஸ்ட் கட்சியை நிறுவுவதில் ஒரு புத்த பிக்குவும் பங்குபற்றினரென்றால், மதத்தை எதிரியாகக் கருதுகிற அரசியலுடன் அந்த உடன்பாடு சாத்தியமாகியிருக்குமா என நாம் சிந்திப்பது பயனுள்ளது. மதம் தொடர்பாக ஒரு மாக்ஸியவாதி எடுக்கக்கூடிய நிலைப்பாடுகட்கும் தேசிய இனங்கள் தொடர்பாகவும் சாதிமுறை தொடர்பாகவும் எடுக்கக்கூடிய நிலைப்பாடுகட்கும் சில முக்கியமான ஒற்றுமைகள் உள்ளன.

மத நம்பிக்கைக்கும் வழிபாட்டுக்குமான சுதந்திரம், ஒரு தேசிய இனம் தனது சுய அடையாளத்தைப் பேணுவதற்கான சுதந்திரம் போன்றது. சாதி, தேசிய ஒடுக்குமுறைகட்கெதிரான உரிமைப் போராட்டத்திற்கு வழங்கப்படக் கூடிய ஆதரவு மத அடிப்படையிலான ஒடுக்குமுறைக்கு எதிராகவும் வழங்கப்பட வேண்டியுள்ளது. சாதி உணர்வோ தேசிய உணர்வோ மத உணர்வோ தம்மளவிலேயே முற்போக்கானவை அல்ல. ஒடுக்கப்பட்ட சாதியினர், தேசிய இனங்கள், மதப் பிரிவினர் என்போர் பற்றிய மாக்ஸிய நிலைப்பாடு சாதி ஒடுக்குமுறையாளர், தேசிய ஒடுககுமுறையாளர், மதவெறியர் என்போர் பற்றிய நிலைப்பாட்டினின்று மிகவும் வேறுபடுகிறது.

தொழிற்சங்கப் போராட்டங்களோ முதலாளித்துவ ஜனநாயகமோ சமூகச் சீர்திருத்தங்களோ சமத்துவமான மனித சமுதாயத்தை உருவாக்கியதில்லை என மாக்ஸியவாதிகள் அறிவர். ஆயினும் அவை தொடர்பான போராட்டங்களை அவர்கள் முழுமனதுடன் ஆதரிக்கின்றனர். இவ்வாறே இனம், நிறம், மதம், சாதி, தேசம், பால் போன்று எந்த அடிப்படையிலாயினும் மனிதரது உரிமைகள் மறுக்கப் படுமாயின், மனிதர் ஒடுக்கப் படுவாராயின், அவர்கள் எதிர்த்துப் போராவது இயல்பானதும் நியாயமானதும் என்பதை ஒரு மாக்ஸியவாதி உணராமலிருக்க முடியாது. எனவே, மத நம்பிக்கைக்கும் வழிபாட்டுக்குமான சுதந்திரம் மாக்ஸியத்துக்கு முரணானதல்ல. மதங்களை நம்பவும் நம்பாமலிருக்கவும் மனிதருக்குச் சுதந்திரம் இருக்க வேண்டும். மனிதரது தெரிவுகள் மதிக்கப்பட வேண்டும். இந்தளவில், ஒரு மாக்ஸியவாதியால் எந்த மதத்தினிடமும் இன்னொரு மதவாதியை விடக் கூடிய சகிப்புடன் நடந்துகொள்ள முடியும்.

மதங்களின் பேரால் மக்கள் ஏமாற்றப் படுவது உண்மை. தேசம், மொழி, பிரதேசம் என்பவற்றின் பேராலும் ஜோசியம், பில்லி சூனியம், சூதாட்டம் போன்றவற்றினாலும் மட்டுமன்றி, விஞ்ஞானத்தின் பேராலும் தொழில்நுட்பம், நவீனத்துவம், அபிவிருத்தி என்பவற்றின் பேராலுங்கூட, மனிதர் ஏமாற்றப் படலாம். மாக்ஸியத்தின் பேராற்கூட மனிதர் ஏமாற்றப் படலாம். நம் முன்னுள்ள பிரச்சனை, மக்களுக்குத் தமது சூழல் மீதும் தமது வாழ்வின் மீதுமான ஆளுமை தொடர்பானது. அவர்கள் முதுகிற் சவாரி செல்வோரை மறிக்கும் ஒரு அதிகாரங்கூட அவர்கள் மீதான அதிகாரமாக மாறிவிடலாம். எனவே, ஒரு



மாக்ஸியவாதியின் பிரதான பணி, மக்கள் அரசியல் அதிகாரத்தை வென்றெடுக்க உதவுவதுதான். தாமே மக்களைவிட அதிகம் அறிந்தவரெனக் கருதும் எவரும் இதைச் செய்தல கடினம்.

மத அடிப்படையிலான சமுதாயங்களிலும் சமுதாயப் பிரிவுகளுக்குள்ளும் மதங்களால் நியாயப் படுத்தப்படும் பலவேறு விதமான ஒடுக்குதல்கள் உள்ளன. ஆணாதிக்கம் இவற்றுள் முக்கியமான ஒன்று. மதபீடங்களின் வர்க்க நலன்கள் சுரண்டும் வர்க்கங்களைச் சார்ந்து நிற்பதும் உண்மை. ஆயினும், இவ்வாறான சூழல்களில், இச் சமுதாயங்கட்கு வெளியில் இருந்து மாற்றத்தைத் திணிக்கும் முயற்சிகள், அவை எவ்வளவு தான் நல்லெண்ணம் உடையனவாய் இருப்பினும், எதிர்மாறான விளைகளையே தரவல்லன. மனித சமுதாயங்களிடையே சமத்துவமான உறவும் அதன் அடிப்படையிலான உறவுப் பரிமாறல்களும் இருக்குமாயின், மதங்களின் அடிப்படையில் நிகழும் அநீதிகட்கெதிரான எழுச்சிகள் அச்சமுதாயங்களின் உள்ளிருந்தே எழுவது இயலுமாகும். மனித சமுதாயத்தின் பன்முகப்பட்ட பண்பு மாக்ஸியவாதிகட்கு உடன்பாடானது. இப் பன்முகப் பண்பில் விடுதலையினதும் சமத்துவத்தினதும் கூறுகள் உள்ளடங்கியுள்ளன.

இன்று பலவிதமான தீவிர மதவாதப் போக்குகள் உள்ளன. இந்து அடிப்படைவாதம், சாதியம், இஸ்லாமிய விரோதம் என்பவற்றை வலியுறுத்துகிறது. அந்தளவில் அது முறியடிக்கப்பட வேண்டியது. கிறிஸ்தவ அடிப்படைவாதம் அமெரிக்காவிலும் மேற்கிலும் வலதுசார் அரசியலுடன் கைகோத்து நிற்கிறது. (இதற்கு மாறாக விடுதலைக்கான இறையியற் கோட்பாடு உள்ளது.) இஸ்லாமிய அடிப்படைவாதம் ஒருபுறம் முக்கியமான ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்தியாகவும், சுரண்டும் வர்க்கங்களின் ஊழல் மிகுந்த ஆட்சிகட்கு எதிரன ஆயுதமாகவும் செயற்பட்டுள்ளது. அதேவேளை அதனுட் பொதிந்துள்ள சகிப்பின்மையின் கூறுகள் ஈரானின் முல்லாக்களின் அதிகாரத்துக்கும் ஊழல்கட்கும் வசதி ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறான இடங்களில், தேசியம் போன்று,மத உணர்வும், ஒரேகாலத்தில், முற்போக்கான கூறுகளையும் பிற்போக்கான கூறுகளையும் தன்வசத்தே உடையது என்பதை நாம் நினைவுகூர்வது நல்லது.

ஒரு மாக்ஸியவாதிக்கு, மதச் சுதந்திரம், மனிதச் சுதந்திரத்தின் ஒரு பகுதி என்றளவில், ஆதரிக்கப்பட வேண்டிய ஒன்றாகிறது. மதச் சுதந்திரம் சமுதாய நீதியையும் மனித விடுதலையையும் மறிக்கும் ஒரு கருவியாகும்போது, மதங்களில் உள்ள விடுதலைப் பாங்கான கூறுகளை வலியுறுத்தி, ஒடுக்குமுறைக்கும், சுரண்டலுக்கும் துணைபோகும் கூறுகளை விமர்சிப்பதற்கான தேவை ஏற்படுகிறது. மதத்தோடல்லாமல் மதத்தின் பேரால் மக்களைப் பிளவுபடுத்தவும் ஒடுக்கவும் எடுக்கப்படும் முயற்சிகளுடனேயே எவரும் மோத வேண்டியுள்ளது. தனிமனித உரிமைகள் என்ற பேரில் மற்றவர்களது மத நம்பிக்கைகளைப் புண்படுத்துமாறான செயல்கள் ஊக்குவிக்கப்படக் கூடாதவை. அதேவேளை, ஒருவரது மத நம்பிக்கை, இன்னொருவர், அந் நம்பிக்கை உள்ளவராயினும் இல்லாதவராயினும், அவர்மீது கட்டவிழ்த்து விடப்படும் அடக்குமுறையாக்கப்படல் மிகவும் தவறானது. கடவுளின் சட்டங்களை நிறைவேற்றும் அதிகாரம் எவ்வாறு எந்த ஒரு தனிமனிதனுக்கும் இருக்க முடியும்? சர்வ வல்லமையுள்ள தமது கடவுள் குற்றவாளிகளைத் தக்கபடி கவனிக்க வல்லார் என்ற நம்பிக்கை இல்லாதவர்களது மத நம்பிக்கை குறைபாடுடையது. சமுதாய ரீதியாகத் தவறுகளைச் சமுதாயம் திருத்தலாம். சமுதாயத்தின் செயற்பாட்டைக் கேள்விக்குட்படுத்தும் உரிமை தனிமனிதர்கட்கு உண்டு. இந்த உரிமையின் அடிப்படையிலேயே உலகின் பிரதான மதங்கள் பல உருவாக இயலுமாயிற்று.

மதமும் மனித உரிமைகளும் பற்றிய விஷயங்களில் சட்டாம்பிள்ளைத் தனமான கட்டளைகள் மனித நலனுக்குத் தீங்கானவை. எனவே இவ்வாறான முரண்பாடுகளை நிதானமுடனும் சகிப்புடனும் அணுகுவது மனித இன விடுதலைக்கு (அது பொருள் சார்ந்த புற விடுதலையாயினும் சீவன் சார்ந்த அக விடுதலையாயினும்) நல்ல பயனளிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுப்ரபாரதிமணியனின் இரு கவிதைகள்



1.
பீச்சில் கடலின் மணம்
இன்னும் அழிந்து போகவில்லை.
தனிமையில்
மணலில் சாய்ந்து கிடப்பது
துரதிர்ஷடத்தனம்
ராட்சத மீனைப்போல்
கடல் பயமுறுத்திக் கொண்டிருக்கிறது.
மீன் வலைகளின் நாற்றம் மீறி
அவற்றின் பின்னல் நளினம்
முகர்ந்து பார்த்து மணம் அறிய
நிறைய இருக்கின்றன.
குறிப்பாய் இளம்பெண்களின் மணம்.
மல்லாந்து கிடந்து சூரியக் கதிர்களை
உடம்பில் வாங்கும் விதேசி யாத்ரிகர்கள்
அவர்களின் உடம்பு மணம் சுற்றிலும்
கரையோரம் திரியும் பறவைகள்
கடற்காக்கைகளின்
சலிப்பில்லாத பயணம்
என்றும் குறையாமல் தூரத்துப் படகுகள்
(தினமும் இப்படித்தானா?
எல்லாப் படகுகளும் காத்திருப்பு?)
அடர்ந்த தலைமயிர் காடுகள்
பாறைகளின் வெம்மை தவிப்புபோல்
என் தனிமை.
குளித்து முடித்த பெண்ணின்
தலைமுடிவாசம் நோக்கும்
மனநோயாளி போல்
தனிமையில் நான்.
என்னருகில் உனக்காக ஒரு இடம்.


2
தவழ்ந்து வந்து
தஞ்சம் புகுந்துகொண்டது
என் காலடியில்.
கல் என்ற பெயருக்கு
அதன் ஆகிருதி சம்பந்தமில்லாதது என்றாலும்
வழக்கமாய் கூழாங்கல் என்று
சொல்லிக் கொண்டேன்.
அதன் மினுங்கலில்
யுகங்களின் ஒளி
அதன் விரைவில்
பறவைகளின் வேகம்
அதன் குளுமையில்
வனங்களின் ஈர்ப்பு
அதன் பயணம்
எண்ணில்லா காலத்தது.
அதிக பட்சம் கானகத்தில்
500 மைல்களைக் கடந்திருப்பேனா?
1,00,000 மைல்களைச்
சுற்றிப் பார்த்திருப்பேனா?
10,000 அடி உயரத்திற்கு ஏறி
மேகத்தைத் தொட்டிருப்பேனா?
தேய்ந்து தன் உருவிழந்து
அதன் புது அழகு கூழாங்கல்லிற்கு
என் நான்கு சுவர்
வாழ்க்கையைக் கேலி செய்தபடி.





ஒரு கேள்வி! ஒரு பதில்!

# ஒஸ்லோக் கலைஞர்களின் பதில்கள்




கலைஞர்கள் லடிஸ்லோஸ் - மரியா தம்பதிகள்

கேள்வி: கலைத்துறையில் நீங்கள் ஆர்வமுடன் ஈடுபடப் பின்னணிக் காரணங்கள் ஏதாவது உண்டா?

பதில்: இலங்கையின் மணிமுடி போல் விளங்கும் வடமாகாணத்தில் பதித்த மாணிக்கம் போல் தமிழ் ஈழத்தில் ஒளிரும் மானிப்பாயில் அருணோதய மன்றத்தின் கலைஞர்களாகவும் எமது பாரம்பரிய நாட்டுக் கூத்திலும் பங்கெடுத்தோம்.

புலம்பெயர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கும் போதுகூட எமது குழந்தைகளுக்கும் எமது கலைகளை ஊக்குவிக்கவேண்டும் என்றும் எமது கலைகளை அழியவிடக் கூடாதென்றும் அன்றாட தாயக மண்ணின் நிகழ்வுகளையும், சமூக சீர்திருத்தங்களையும் பற்றி நாடக வடிவில் ரசிக்கத்தக்க முறையில் கலையில் பங்கெடுத்துக் கொண்டிருக்கின்றோம்." நாம் கற்றது கைமண்ணளவு கல்லாதது உலகளவு".

ஓவியக்கலை வரைஞர் மகா

கேள்வி: "புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் ஓவியக்கலை" இது பற்றிய உங்கள் அபிப்பிராயம்?

பதி: ஒப்பீட்டளவில் மற்றையகலைகளைவிட ஓவியக்கலையின் அறிமுகம் புலம்பெயர்ந்து வாழும் எம்மவர்கள் மத்தியில் மிகவும் குறைவுதான். போட்டிகளினூடாகவோ அல்லது கலை நிகழ்ச்சிகளினூடாகவோ மற்றையகலைகள் அடிக்கடி அரங்கேற்றம் காணுகின்றன. அதனூடாக மக்கள் மத்தியில் பரவலான அறிமுகத்தையும் பெற்றுக் கொள்ளுகின்றன. அப்படியே, ஓவியங்களையும் கண்காட்சிகள், போட்டிகளில், இலக்கியப் படைப்புக்களையும், சமூக, அரசியல் சூழ்நிலைகளையும் சித்தரித்தல் போன்றவற்றினூடாக எம்மவர்கள் முன்னெடுத்து வரவேண்டும். அப்போதுதான் அதன் அறிமுகத்தையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மவர்கள் உள்வாங்கிக் கொள்வார்கள். மேற்குலகில் ஓவியக்கலை பொதுவாக வரவேற்கப் படுகின்றதாயின், அது பல்வேறு வடிவங்களில் அம் மக்களிடையே கொண்டு செல்லப் பட்டிருக்கின்றது என்பதுதான் உண்மை.

அதே போல் ஐரோப்பிய சமூகத்துள் புலம்பெயர்ந்து வாழும் எமது மக்கள் மத்தியிலும் ஓவியக் கலையைப் பல்வேறு வழிகளில் அறிமுகம் செய்யும் போது (மேற்கூறியவாறு) காலப்போக்கில் அதன் வளர்ச்சி வலுவடைவதை நாம் அவதானிக்க முடியும்.

"த றூட்ஸ்" இசைக் குழுவில் ஆர்வமுடன் இணைந்து செயலாற்றி வரும் பின்னணிப் பாடகி மல்லிகா

கேள்வி: நோர்வேயில் வாழும் ஈழத் தமிழ்ப் பெண்களின் கலைத் துறைப் பங்களிப்புப் பற்றிய உங்களின் கருத்து யாது?

பதில்: ஐரோப்பிய நாடுகளைப் பொறுத்தவரை எமது தமிழ்ப் பெண்களின் வருகை பெரும்பாலும் திருமணத்தின் பின்னரே நிகழ்வதால் அதிகப்படியான பெண்கள் கூச்ச சுபாவம், குடும்பச் சுமை, பொருளாதார நிலைமை, கலைகளில் ரசனையின்மை போன்ற பலதரப்பட்ட காரணங்களை முன்வைத்து இயன்றவரை தம்மைக் கலைத் துறையில் இருந்து ஒதுக்கிக் கொள்ளவே விழைகின்றார்கள். இதனால் தேர்ச்சியும் திறமையும் உள்ள கலைஞர்கள் முகவரி இழந்திருக்கின்றார்கள் என்பது உண்மை.

ஆனால் இங்கு வளரும் இளம்பெண்கள் மத்தியில் கலைத்துறை சார்ந்த போட்டி மனப்பான்மையுடன் கூடிய வளர்ச்சியினைக் காணக் கூடியதாக உள்ளது. இது ஆரோக்கியமானது, எனினும் மற்றொருபுறம் முறையான பயிற்சி இல்லாமலேயே பலர் தம்மைத் தேர்ந்தவர்களாகக் காட்ட முனைவதுண்டு. இவ்வாறான நிலைமைகளினால் எமது கலைகள் முற்று முழுமையான வளர்ச்சியினை அன்றி வீழ்ச்சியினைத்தான் சந்திக்கும்.

நோர்வேத் தமிழர்களும் தமிழ் நாடகங்களது போக்கும்
வே. இரவிக்குமாரின் பதில்

"கலை கலைக்காகவா?" இல்லை "கலை மக்களுக்காகவா?" என்ற இரு கேள்விகளுடனும் கலையில் ஒரு பிரிவான நாடகக் கலையையும் வைத்துப் பார்க்க விரும்புகிறேன். "கலை கலைக்காகத்தான்" என்பவர்களுடன் நான் தொடர்ந்து வாதாடிச் செல்லாமல் "கலை மக்களுக்காகத்தான்" என்பவர்களுடன் எனது கருத்துக்களைப் பரிமாற விரும்புகிறேன்.

நோர்வேயில் தமிழர்களது வாழியலில் 1986இற்குப் பின் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டன. தமிழ் அகதிகளது பெருமளவிலான வருகை, தமிழர்களது எண்ணிக்கையைக் கூட்டியது என்பதுடன் பலதரப்பட்ட பார்வைகளைக் கொண்ட மனிதர்களையும் உள்ளடக்கியதாகவும் அமைந்தது.

காலம், தேவை போன்றவை காரணமாக தமிழர்கள் கலாச்சார விழுமியங்களில் மாறுதல்களைத் தேடப் புறப்பட்டதைத் தொடர்ந்து புதிய பரிமாணங்கள் பரீட்சார்த்தங்களுக்கு உள்ளாகின. இதில் நாடகமும் தனது பங்கை வகிக்கின்றது.

1. பண்டைய கலாச்சாரங்களை எடுத்துரைக்கும் நாடகங்கள்.
2. கற்பனைக் கதைகளைக் கொண்ட நாடகங்கள்.
3. கருத்துத் திணிப்பு நாடகங்கள்/ பிரச்சார நாடகங்கள்.
4. உள்ள உணர்வுகளை/ ஆதங்கத்தை வெளிப்படுத்தும் நாடகங்கள்.
5. நகைச்சுவை நாடகங்கள்.
6. குறியீட்டு நாடகங்கள்.
7. நவீன தொழில்நுட்பத்தை முதன்மைப்படுத்தும் special efectsஐப் பயன்படுத்தும் (ஒலி,ஒளி) கவர்ச்சி நாடகங்கள். (இதில் கதைக்குப் பெரிய பங்கிருக்காது)
8. மக்கள் அரங்கம்.

இவ்வாறான பல்வேறுவகைப்பட்ட நாடகங்களும் குறிப்பாக ஒஸ்லோவில் அரங்கேறிவிட்டன என்று சொல்லலாம். ஈழத்திலிருந்து வரவழைக்கப்பட்ட நாடகங்களும் உள்ளூர்த் தயாரிப்புகளும் மேடையேறி விட்டன. தமிழ் மக்களது ரசிக்கும் தன்மையும் சற்றே மேல்நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது. இந்த வகையில் நாடகங்களில் புதிய யுக்திகளைக் கையாள்வோரும், பழைய பல்லவியையே திருப்பித் திருப்பிப் பாடுவோருமான நாடகக் கலைஞர்கள் நோர்வேயின் பலபாகங்களிலும் தமது நிகழ்வுகளை நிகழ்த்துகின்றனர். நாடகங்களிலே கருத்துச்செறிந்த கதைகளோடும் மக்களது எதிர்பார்ப்பை ஓரளவேனும் ஈடுசெய்யக்கூடிய புதிய யுக்திகளைக் கையாண்டு நெறிப்படுத்துவதிலும் எழுதுவதிலும் ஈடுபடுபவர்கள் மிகமிகச் சிலரே. அந்தவகையில் அன்ரனி தியோபிலிஸ் (ஒஸ்லோ), இளவாலை விஜேந்திரன் (ஒஸ்லோ), சர்வேந்திரா (ஒஸ்லோ), தமயந்தி (ஸ்தங்வர்), ஜீவகரன் (ஸ்தவங்வர்), விமலநாதன் (பேர்கன்), பத்மநாதன்(துரண்ணியம்), திலீபன் (ஒஸ்லோ), ஜோன்சன் (ஒஸ்லோ), ஸ்ரீபன் (ஒஸ்லோ) ஆகியோரைக் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

மேற்குறிப்பிட்ட ஏழு வகையான பாணிகளையும் கலந்து நாடகங்களைத் தயாரித்ததில் தமயந்தி, விமலநாதன், திலீபன் ஆகியோர் வெற்றி கண்டிருப்பினும் தற்போதைய அன்ரனி தியோபிலிசின் பிரமாண்டமான தயாரிப்புகள் ஒஸ்லோ தமிழர்கள் மத்தியில் புதிய ஒரு பாணியாகப் பார்க்கப்படுகின்றது.

நாடகத்தின் கரு, பாத்திரங்களின் தெரிவு, நடனம்/ இசை போன்றவற்றைப் பயன்படுத்துவதுடன் special light, sound effects ஐப் பயன்படுத்துவதன் மூலமும் இவர் தனது நாடகங்களில் வெற்றி கண்டுள்ளார்.

சர்வேந்திரா, இளவாலை விஜேந்திரன் ஆகியோரது நெறியாள்கையில் முதிர்ச்சித் தன்மை தென்படும்.

நோர்வேயில் தமிழர்களது தொகை ஏறத்தாழ 6000 ஆக இருப்பினும் அவர்களது கலைப் பங்களிப்பும் வளர்ச்சிப் போக்கும் கணிப்பிட்டுக் கூறக்கூடிய அளவிலுள்ளது.

மொழி பெயர்ப்பு நாடகங்களைவிட நமது மண்ணின் நிகழ்வுகளையும் மக்களது அவலங்களையும், புலம்பெயர்வு வாழ்வின் நல்ல, தீய பக்கங்களையும் வெளிக்கொணரும் நாடகங்கள் பொதுவாக மனதில் அச்சாணி போல் பதிவாகிவிடுகின்றன.

மக்களது ரசனையை மழுங்கடிக்காமலும், நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திய நல்ல கதையம்சங்களைக் கொண்ட நாடகங்கள் இன்று நமக்குத் தேவையானதாகவுள்ளன. சமூக வளர்ச்சிக்கும், மாற்றத்துக்கும் நாடகங்களின் பங்களிப்பு இன்றியமையாதது என்பது எனது கருத்து. அந்தவகையில் நோர்வேத் தமிழர்களது நாடக முயற்சிகள் முன்நோக்கிய படிக்கற்களாக அமைகின்றன என்று சொல்லலாம்.

நோர்வே இசைப் பிரியர்களிற்கு நன்கு அறிமுகமானவரும் முதல் தமிழ் "சீ.டீ" இசைத்தட்டை நோர்வேயில் வெளியிட்ட இசையமைப்பாளருமாகிய முரளி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்வி: ஒரு இசைக் கலைஞனாக நோர்வேயில் உங்கள் அனுபவம்.

பதில்: புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களில் ஒருவனாக, சுமந்து வந்த கனவுகளோடும் தனிமையும் சேர்ந்து வெறுப்பேற்ற எனது கவனம் இசையின் பக்கம் திரும்பிற்று. ஆரம்பத்தில் எல்லோரையும் போல் இசையை பொழுது போக்காகவே எண்ணி அடியெடுத்து வைத்தேன். தொடர்ந்து என்னையறியாமலே இசையார்வம் ஒருவித வெறியாக மனதில் நிலைப்பெற தொடங்கியது எனது நன்பர்களுடனே கருத்துப் பரிமாறிக்கொண்டிருந்த எனக்கு நாளடைவில் நோர்வீஜிய நன்பர்களின் உதவி கிடைத்தது. நாளடைவில் அவர்களுடன் சேர்ந்து வேலை செய்யவும் ஒலியமைப்பு (Sound) ஒலிப்பதிவு (Recording) பற்றிய பயிற்சியும் விபரங்களையும் பலதரப்பட்ட நோர்வீஜியர்களிடம் இருந்தும் கிடைக்கக் கூடியதாயிருந்தது. பின்னர் நானே எனக்கென்று ஒரு "ஒலிப்பதிவு நிலையத்தை" (M.Studio) உருவாக்கிக் கொண்டேன். நானும் எனது நன்பன் "விக்கியும்" 1989 - 1990 காலப்பகுதியில் இருந்து சொந்தமாகப் பாடல்களிற்கு இசையமைப்பதில் ஆர்வம் காட்டி வந்தோம், "தமிழ்நாதம்" உள்ளூர்த் தென்றலில் மாதம் ஒரு முறை எமது பாடல்கள் ஒலிபரப்பாகும். இந்த அடிப்படையில் என்னிடம் "ஸ்ருடியோவும்" இருந்தமையால், நானும் ஒரு "இசைத்தொகுப்பு" ஒன்று வெளியிட வேண்டும் என்று மனதில் ஆசை தூண்டியது. 22.04.93 அன்று எனது முதலாவது ஒலிப்பதிவு நாடா "புதுராகம் - அரங்கேற்றம்" வெளியிட்டேன். இது ஓரளவு வரவேற்பைப் பெற்றது. அதிலிருந்து ஒவ்வொரு சித்திரை மாதம் 22ம் திகதியும் ஒரு இசைத் தொகுப்பு வெளியிடுவது என முடிவு செய்தேன். 94ம் ஆண்டு "ஜீவராகம் சீ.டி" (C.D) ரமி இசைப்பதிவு (Ramy records) உதவியுடன் வெளிவந்தது. 1995 சித்திரை 22ம் திகதி எனது கடின உழைப்பிலும் நன்பர்களின் உதவியுடனும் "சிறகு" சீ.டி வெளிவந்தது. இன்னும் எனது இசைப் பயணம் அடுத்த வருடத்திற்கான பாடல்களை தெரிவுசெய்வதிலும், இசையமைப்பதிலும் ஈடுபட்டுள்ளது.

## ஐநூறில் இரண்டு!

உலகில் உள்ள நிறுவனங்களில் மிகப் பெரியவற்றின் பட்டியல் ஒன்றை வருடாந்தம் அமெரிக்கச் சஞ்சிகை ஒன்று (Fortune) வெளியிட்டு வருகிறது. கடந்த வருட வியாபாரத்தைக் கணக்கில் கொண்டு ஆகப்பெரிய 500 நிறுவனங்கள் பட்டியலிடப்பட்டுள்ள இதில் நோர்வேஜிய நிறுவனங்கள் இரண்டு இடம் பிடித்துள்ளன. அரச எண்ணெய் நிறுவனமான ஸ்ராத்ஒயில் (Statoil) 298வது இடத்தையும், நொஸ்க் ஹீத்ரூ (Norsk Hydro) 380வது இடத்தையும் பிடித்துள்ளன.
ஜப்பானிய நிறுவனமான மிற்சுபிஷி முதலாவது இடத்தைப் பிடித்துள்ளது. இதன் வர்த்தகம் கடந்த ஆண்டு 17,583கோடி டொலர்கள். கடந்த வருடம் முதலிடத்தில் இருந்த அமெரிக்க நிறுவனமான ஜெனரல் மோட்டோர்ஸ் இம்முறை ஐந்தாம் இடத்திற்குத் தள்ளப் பட்டுள்ளது. இதற்கு முக்கிய காரண டொலரில் ஏற்பட்ட பெறுமதி இறக்கங்களும், தடுமாற்றங்களும்தான்.
கொக்கோ கோலா நிறுவனமே பங்குதாரருக்கு அதிக வீத லாபத்தை (18.4) ஈட்டித் தந்துள்ளது.

### பாலஸ்தீனம் !

# ஒரு நீறுபூத்த நெருப்பு

(முன்தொடர்)

அரபுநாடுகளின் ஒத்துழைப்போடு துருக்கியின் "ஓட்டோமான் பேரரசை" முறியடித்த இங்கிலாந்து போர் முடிவுற்றதும் அரபுநாடுகளை நட்டாற்றில் கைவிட்டுவிட்டது. இத்தோடு நிற்காமல் பாலஸ்த்தீனத்திற்கும் அரபுநாடுகளிற்கும் எதிராக மாபெரும் துரோகம் ஒன்றையும் இங்கிலாந்து மேற்கொண்டது.
பாலஸ்தீனத்தின் சுதேசி மக்களின் விருப்பிற்கு மாறாக பலாத்காரமான முறையில் நிரந்தர யூதக் குடியிருப்புக்களை பாலஸ்தீனத்தில் ஏற்படுத்த இங்கிலாந்து முடிவெடுத்திருந்தது. இது தொடர்பாக உத்தியோகபூர்வ கடிதம் ஒன்றை இங்கிலாந்தின் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் சேர் ஆதர் பல்போர் என்பவர் 02.11.1917 அன்று யூதர்களின் தலைவரும் பெரும் செல்வந்தருமான ரூத்ஸ்சைல்ட் பிரபு (Routhschild) என்பவரிற்கு எழுதிய கடிதத்தில் சுருக்கம் வருமாறு:





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடன் ரூத்ஸ்சைல்ட் பிரபு

மேன்மைமிகு மன்னான் சார்பாக யூதர்களின் விருப்பங்களான பாலஸ்தீனத்தில் யூதமக்களிற்கான நிரந்தர குடியிருப்பை ஏற்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை இங்கிலாந்து ஆதரிக்கின்றது. இந்த இலட்சியத்தை அடைய தங்களுடைய முயற்சிகளை மேற்கொள்ளும் போது சில விடயங்கள் தெளிவாகப் புரிந்து கொள்ளப்பட வேண்டும். பாலஸ்தீனத்தில் யூதரல்லாத ஏனைய சமூகங்களினதோ அல்லது ஏனைய நாடுகளிலுள்ள யூதர்களின் அடிப்படை உரிமைகளோ பாதிக்கும்படி நடந்துகொள்ளக் கூடாது.

மேற்கூறிய விடயம் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகரிக்கப் பட்டது தாங்கள் இதை யூத சம்மேளனத்திற்குக் கொண்டு வரும் பட்சத்தில் நான் மிகவும் நன்றியுடையவனாய் இருப்பேன்.

இங்ஙனம்
தங்கள் உண்மையுள்ள
ஆதர் ஜேம்ஸ் பல்போர்
(Auther. J. Balfour)

நம்பவைத்துத் துரோகம் செய்வதில் பெயர்பெற்ற இங்கிலாந்து யூதர்களுடன் ஏற்படுத்திக் கொண்ட உறவும் சியோனிச யூத சார்பும் சேர்ந்து பாலஸ்தீன சுதேசி மக்களிற்கு துன்பத்தையும் துயரத்தையுமே வழங்கியது. அம்மக்களின் கண் முன்னாலேயே அவர்களின் தாயகம் பறிக்கப்பட்டது. தனது ஏகாதிபத்திய காலனித்துவத்தை நிலைநிறுத்தவும் இதற்கு அனுகூலமாயிருக்கும் சுயஸ் கால்வாயை தக்கவைத்துக் கொள்ளவும் இங்கிலாந்திற்கு நம்பிக்கைக்குரிய ஒரு ஆத்ம நண்பன் தேவைப்பட்டான். யூதர்களே இதற்கு தகுதியானவர்கள் எனக் கருதிய இங்கிலாந்து ஐரோப்பாவில் வேகமாக முனைப்பு பெற்று வந்த யூத வெறுப்பையும் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டது. பாலஸ்த்தீனத்தில் ஒரு யூத நாடு உருவாக்கப்படுமானால் என்னென்ன நன்மைகள் உண்டாகுமெனி "வைஸ்மன்" (Weismen) என்பவர் 1914ல் கூறிய கருத்துக்கள் இச்சமயத்தில் கவனத்திற் கொள்ளத் தக்கன. பாலஸ்தீனம் இங்கிலாந்தின் காலனித்துவ நாடாக்கப்பட்டு அங்கே இங்கிலாந்தைச் சார்ந்து நிற்கக்கூடிய ஒரு யூதக் குடியிருப்பை உருவாக்க இங்கிலாந்து ஒத்துழைக்குமானால் சுமார் 20 – 25 காலப் பகுதியில் பத்து இலட்சம் யூதர்களை பாலஸ்தீனத்தில் குடியேற்ற முடியும். இது தொடர்ந்துவரும் காலப் பகுதியில் இங்கிலாந்தின் காலனித்துவ ஆதிக்கத்தை வலுப்படுத்தப் பேருதவியாக இருக்கும்.

இவ்வாறான சூழ்நிலையிலேயே பாலஸ்தீனத்தை 09.12.1917ல் இங்கிலாந்து கைப்பற்றியது. இதன் மூலம் 400 ஆண்டு காலத் துருக்கியின் ஒட்டோமான் பேரரசின் ஆட்சிக்கு முடிவு கட்டியது. பாலஸ்தீனம் விடுவிக்கப் பட்டதையிட்டு மகிழ்ச்சியுற்ற அரபுகளின் மகிழ்ச்சி சில நாட்கள் கூட நீடிக்கவில்லை. அரபுகளிற்குத் தான் முன்பு கொடுத்த வாக்குறுதியை மீறிய ஆங்கிலேய ஏகாதிபத்தியம் தாங்கள் கைப்பற்றிய பிரதேசங்களை மீளக் கையளிக்க மறுத்து தந்திரமான நடவடிக்கைகளில் ஈடுபட்டது. முதலாம் உலக யுத்த முடிவில் தேசங்களின் சங்கம் அல்லது சர்வதேச சங்கம் (League of Nations) என்ற அமைப்பு உதயமாகியது. ஜெனிவாவில் உருவான இவ்வமைப்பு பெயரிற்கு தேசங்களின் சங்கம் என அழைக்கப் பட்டாலும் உண்மையில் வெற்றிபெற்ற நாடுகளின் (நேசநாடுகள்) ஆதிக்கத்தை வலுப்படுத்தி தோல்வியுற்ற நாடுகளின் பொருளாதார வளத்தைச் சுரண்டி, அந்நாடுகளை பழிவாங்கவும் (உ.ம்: யுத்தத்தில் நலிவடைந்து உருக்குலைந்து போயிருந்த ஜேர்மனி அதன் சக்திக்கு அப்பாற்பட்ட பெருந்தொகைப் பணத்தை யுத்த நஷ்ட ஈடாக வழங்க வேண்டுமென தேசங்களின் சங்கம் கோரியமை). அதேசமயம் தமது காலனித்துவ ஆதிக்கத்தை வலுப்படுத்திக் கொள்ளவுமே தேசங்களின் சங்கம் நேசநாடுகளினால் பயன்படுத்தப்பட்டது.

இதன் அடிப்படையில் தான் தேசங்களின் சங்கம் கட்டளை நாடுகள் (Mandatory Powers) என்றும் அவற்றிற்கான கட்டளை விதிகள் என்ற திட்டத்தையும் முன்வைத்து யுத்தத்தில் கைப்பற்றிய



கட்டளை நாடுகள் (Mandatory Powers) என்றும் அவற்றிற்கான கட்டளை விதிகள் என்ற திட்டத்தையும் முன்வைத்து யுத்தத்தில் கைப்பற்றிய நாடுகளைப் பங்குபோட்டுக் கொண்டன. கட்டளை நாடுகள், கட்டளை விதிகள் பற்றி தேசங்களின் சங்கம் அமைதி சமாதானத்தின் வழி எனக் கூறி நியாயப் படுத்திய போதும் அதன் முழுமையான நோக்கம் கைப்பற்றிய நாடுகளை பங்குபோட்டுச் காலனித்துவ ஆதிக்கத்தை மேலும் வலுப்படுத்திக் கொள்வதே.

கட்டளை விதிகளின் பிரகாரம் ஈராக், பாலஸ்தீனம் ஆகியவற்றிற்கான கட்டளைப் பொறுப்பு இங்கிலாந்திற்கும் லெபனான், சிரியா ஆகிய நாடுகளின் கட்டளைப் பொறுப்பு பிரான்சிற்கும் வழங்கப்பட்டது.

(வரும்)

# இருதயமுள்ள மண்

முகமட் அபார்

கடற்கரை மண்
ஒவ்வொரு இரவும்
என்னைத் தேடிக்கொண்டிருக்கும்.

ஊர்க் கதையில்
அதிக விருப்பம் அதற்கு
அதனால் –
அடிக்கடி தேடிக் கொள்ளும்.

அதன் மடியில்
உட்கார்ந்துகொண்டே
சிலர் பொய்களைக் கொட்டுவார்கள்.
இன்னும் சிலர்
புகழை அவிழ்ப்பார்கள்
மண்
சலித்துக்கொண்டே
எனது கதையில்
இன்பம் காணும்.

அன்று
அவர்கள் வெட்டியதையும்
கண்ணைக் கட்டி
கடலில் விட்டதையும்
கண்ணால் கண்டதாய்
கதைக்குள் கதையாய்
அழுதழுது சொல்லும்.

மண்ணின் ஒவ்வொரு மூச்சிலும்
புனிதத்தின் வாடை
வீசிக் கொண்டிருக்கும்.
பால்நிலவு
உச்சிக்கு வந்ததும்
மண் –
எனது முகத்தைப் பார்க்க
மண்ணின் முகத்தை
நான் பார்த்துக்கொள்வேன்.


உண்மையில்
கடற்கரை மண்ணின் இதயம்
வெள்ளைதான்!
நான் இவ்வளவு காலமும்
கதைத்த கதைகளை
மனதுக்குள் பூட்டி வைத்துக்கொண்டே ஜீவிக்கிறதே!

101094



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயிரம் பூக்கள் மலரட்டும்



## ஆங்கில மோகம்

1. ஆவணிமாதம் 5ம் திகதி லண்டன் நகரில் கிழக்கிலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான துடுப்பாட்ட (cricket) விளையாட்டுப் போட்டியில் அறிவிப்பாளரும், பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட வைத்தியர் -----ரும் ஏன் ஆங்கில மொழியில் உரையாற்றினார்கள் என்பது எனக்கு இன்னும் விளங்கவில்லை. (ஆனால் தமிழ்ப் பாட்டுப் போட்டார்கள்) இப்போட்டியில் சிங்களப் பாடசாலைகள் கலந்து கொண்டிருந்தால் ஆங்கில மொழியில் அறிவிப்பு, பேச்சு ஆகியவை அவசியம்.

ஆனால் பங்குபற்றிய அனைத்துப் பாடசாலைகளும் தமிழ்ப் பாடசாலைகளே. பிரதம அதிதி தநுது பேச்சை முடித்தபின் தமிழனாக மாறித் தமிழில் வெளுத்து வாங்குகிறார். அறிவிப்பாளரும் அப்படியே.
ஏன் இங்கிலாந்தில் தமிழ்ப் புத்திஜீவி(?)கள் தமிழ் பேசினால் கௌரவக் குறைவா? அல்லது புத்திஜீவி(?)கள் பொது இடங்களில் ஆங்கிலம் பேசுவதுதான் நாகரிகமா?
வெளிநாடுகளில் நம்மவர்களுக்காக நடத்தப்படும் நிகழ்ச்சிகளில் நாம் தமிழுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். வளரும் சமுதாயத்துக்குத் தமிழில் பற்றுதலை ஏற்படுத்தும் வகையில் நாம் செயற்படுதல் முக்கியமாகும்.

சஞ்சயன்,
24.08.95

2. ஏன் எங்கட பிள்ளைகள் தமிழ் படிக்க வேணும்? அங்க பிரச்சனை முடியாது. நாங்களும் என்ன அங்க போகப் போறமே? அப்பாவும், அம்மாவும் இன்னும் கொஞ்சக் காலம்தான். பிள்ளைகளும் ஆரோடை தமிழ் கதைக்கிறது? தமிழ் படிப்பிக்கிறதாலை பிரயோசனம் இல்லை தம்பி. இனி அவ்வளவு எழுத்துகளையும் படிப்பிச்சு, பிள்ளைகள் பாவம் கஸ்டப்படுங்கள். அந்த நேரத்திலைEnglish படிப்பிச்சாலும் பிரயோசனப்படும் பாரும் தம்பி. எங்கட பிள்ளைகளின் காலத்தில தமிழ் தேவை இல்லை.
இது ஆபிரிக்க நாடொன்றில் கணக்காய்வாளராக இருந்து, தற்போது லண்டனில் புதிதாய் குடியேறிய ஒரு தமிழ் புத்தி(?)ஜீவியின் தாழ்மையான கருத்து. இந்தத் தமிழனுக்கு என்ன பதில் கொடுக்கலாம். (பதில் தெரிந்தால் ஆங்கிலத்தில் பதில் எழுதவும்)

சஞ்சயன்,
15.08.95



● அன்பரசன்

# தமிழகப் பார்ப்பனீயம் : 2




தமிழர்களும் இந்துமதமும் ஒட்டிப் பிறந்தவை என்று கூறப்படுவது ஒரு அயோக்கியத்தனமான பொய். வெவ்வேறு காலகட்டங்களில், அந்தந்த காலகட்ட அரசியல் நிலைமைகள், நிர்ப்பந்தங்களுக்கேற்ப வெவ்வேறு மதங்களைத் தமிழர்கள் தழுவியிருக்கின்றார்கள். தமிழர் வாழ்வில் இடம்பெற்ற மதங்களெல்லாம் அந்நிய மதங்களே. மத்திய கிழக்கிலிருந்தும், ஐரோப்பாவிலிருந்தும் இறக்குமதியான கத்தோலிக்க, இஸ்லாமிய, கிறித்தவ மதங்களைப்போலவே - இந்து மதமும் மத்திய ஆசியாவிலிருந்து கைபர் கணவாய் வழியாக வந்து இந்தியாவை ஆக்கிரமித்த ஆரியர்கள் எனப்படும் குடியினரால் அறிமுகப் படுத்தப்பட்ட ஒரு மதமாகும்.

இந்து மதம் ஒரு ஆரிய மதம். ஆரியத்தோடு சம்பந்தப்பட்ட எல்லாச் சிந்தனைகளிலும் மனிதன் இன, குல அடிப்படையில் பிரிக்கப்படுகிறான். அடோல்வ் ஹிட்லரிலிருந்து அத்வானி வரைக்கும், சோபித தேரோவிலிருந்து "சோ" இராமசாமிவரை - ஆரிய சிந்தனையே இவர்களை வழிநடாத்தியது; நடாத்துகிறது. வெளிநாட்டாரின் வீடுகளைக் கொளுத்தும் நாஸிகளும் அயோத்தி மசூதியை இடித்த இந்துக்களும் ஒரே ஆரிய சிந்தனை வயிற்றில் பிறந்த குழந்தைகளே.

இந்து மதத்தின் இன்னொரு முகம்தான் சாதீயம். நான் ஒரு இந்து என்று ஒப்புகொண்டால், சாதிக்கட்டமைப்பில் எனக்கொரு இடம் ஒதுக்கப்பட்டுள்ளது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று ஒப்புக்கொள்ளவேண்டியிருக்கிறது. என்னுடைய கடவுளுடன் தொடர்பு கொள்ள ஒரு மொழிபெயர்ப்பாளரை, அதாவது ஒரு பிராமணரை தேடவேண்டியிருக்கிறது. ஏனெனில் என்னுடைய கடவுளுக்கும் எனக்கும் மொழிப் பிரச்சினை. அவரின் மொழி சமஸ்கிருதம். என்னுடைய மொழி தமிழ். கடவுளும், ஐயரும் ஏதோ பார்த்துச் செய்வார்கள் என்ற நம்பிக்கையில் நான் என் பெயரையும் நட்சத்திரத்தையும் சொல்லிவிட்டு பயபக்தியுடன் நிற்கவேண்டியிருக்கிறது. பிள்ளையார் பால் குடிக்கிறார் என்று பெருமிதத்தை வெள்ளையர் மேலாதிக்கம் (white superiority) அவனுக்குக் கொடுக்கிறது. அதுபோலவே இந்துமதச் சமூகங்களிலும் "எனக்கும் கீழே சிலர் இருக்கிறார்கள்" - "என்ன இருந்தாலும் நான் அந்தச் சாதிக்காரனைவிட மேலானவன்தானே" என்ற உளவியல் மேலாதிக்கத்தை சாதிக்கட்டுமானம் கொடுக்கிறது. சாதிக்கட்டமைப்பில் கீழ்ப்படிகளில் இருப்பவர்களுக்கு இந்து மதம் ஒரு நரகம். இந்த நரகத்திலிருந்து விடுபடவே அவர்கள் வேறுமதங்களைத் தழுவ விரும்புகிறார்கள். தமிழகத்தில் பல கிராமங்களில் தலித்துக்கள் இஸ்லாம்

**உலகெங்குமுள்ள இந்துமதப் பாதுகாவலர்களை உன்னித்துப்பார்த்தால் ஒரு உண்மை தெரியும். சாதிக்கட்டமைப்பின் மேற்படிகளில் இருப்போரே இந்துமதத்துக்காக மெய்வருந்தப்பாடுபடுகின்றவர்களாக இருப்பார்கள்.**

புல்லரித்துப்போகவேண்டியிருக்கிறது. இப்படி எல்லாச் சுத்துமாத்துக்களுடனும் இந்துவாக இருப்பதில் ஒரு பெரிய வசதி இருக்கிறது. அதுதான் சாதியமைப்பு. உலகெங்குமுள்ள இந்துமதப் பாதுகாவலர்களை உன்னித்துப்பார்த்தால் ஒரு உண்மை தெரியும். சாதிக்கட்டமைப்பின் மேற்படிகளில் இருப்போரே இந்துமதத்துக்காக மெய்வருந்தப்பாடுபடுகின்றவர்களாக இருப்பார்கள். இந்த உளவியல் ரீதியான மேலாதிக்கத்தை இந்துமதம் தருகிறது. ஒரு கீழ்சாதி உத்தமனைவிட ஒரு மேல்சாதி அயோக்கியன் உயர்வானவன் என்ற ஈனத்தனமான எண்ணம் இந்துமதம் சார்ந்த சமூகங்களில் வேரூன்றியிருப்பதை நாம் அறிவோம். வீதியில் புரளுகின்ற ஒரு வெள்ளைக்காரனுக்கு தனக்கும் கீழே கறுப்பர்கள் இருக்கிறார்கள்; தான் கறுப்பரிலும் உயர்வானவன் என்ற மதத்துக்கு மதம் மாறியதை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். ஒரு தலித் முஸ்லீமாக மாறியதும் பிராமணர்களையும், வேளாளர்களையும் தன் தலையிலிருந்து இறக்கிவிட்டு சுதந்திரமாக வாழமுடிகிறது. உயர்சாதிக்காரர்களைக் கண்டால் தலைகுனிந்து போகவேண்டிய அவசியமில்லாமல் போய்விடுகிறது. இந்தியா ஒரு பெரும்பான்மை முஸ்லீம் நாடாகவோ, கிறித்தவ நாடாகவோ இருந்திருந்தால் பிராமணர்கள் இவ்வாறு செங்கோலாச்ச முடியுமா? முறுக்கு வியாபாரம் செய்து பிழைக்கவேண்டியிருக்குமேயல்லாது கடவுளோடு பேசுவதாகச் சொல்லி பிழைக்கமுடியாது. அதனால்தான் இந்து மதம் பாதுகாக்கப்படவேண்டும் என்று உயர்சாதிக்காரர்கள் மாய்கிறார்கள். சாதீயம் வாழவேண்டுமானால் இந்துமதம் வாழவேண்டும்; இந்துமதம்



பாதுகாக்கப்பட்டால் சாதீயம் பாதுகாக்கப்படும் என்பது இந்துகாவலர்களுக்குத் தெரியும்.

இங்குதான் பார்ப்பனீயத்தின் சாதுரியம் தெரியவருகிறது. இந்துமதச் சமூகக்கட்டமைப்பில் அதிஉயர்வான இடத்தை தனக்கென்று ஒதுக்கிக்வைத்துக்கொண்டு தனக்கடுத்த ஒரு சாதி, அதற்கடுத்ததாக ஒரு சாதியென்று ஏராளம் பிரிவுகளை "வர்ணாசிரம தர்மத்திற்கேற்ப" பார்ப்பனீயம் ஏற்படுத்திக்ககாண்டது. இதன்படி சாதிகட்டமைப்பின் சொல்வதாக கம்பராமாயணம் சொல்லும் அறிவுரைகளில் "திருமால், சிவன், பிரம்மா ஆகிய மூன்று தெய்வங்களையும்விட, ஐம்பெரும் பூதங்களைவிட, பிராமணர்கள் பெரியவர்கள், அதனால் அவர்களை மதித்து நடக்கவேண்டும்" என்பது முக்கியமானது. இந்த அறிவுரையை இராமன் மட்டுமல்ல தமிழர்களும் பலநூறு ஆண்டுகளாக, பலநூறு சந்ததிகளாக கேட்டுவந்திருக்கிறார்கள். இவ்வாறு தமிழர்களின் மூளை ஆண்டாண்டுகாலமாக இந்த நாசகாரப்போதனையில் ஊறப்போட்டதனால்தான் அடுத்த

**ஒரு சூத்திரன் ஒரு பார்ப்பனனுக்கு வணக்கம் சொன்னால் அதை அந்தப் பார்ப்பான் ஏற்றுக்கொண்டால் முதலில் அந்தப் பார்ப்பானே நரகத்துக்குச் செல்வான்; அதன்பின்னரே வணக்கம் சொன்ன சூத்திரன் நரகத்துக்குப் போவானாம்.**

கடைசிப்படிகளில் நிற்கும் ஒருவனுக்கு பிராமணன் எட்டமுடியாத உயரத்தில் இருப்பதாக போதிக்கப்பட்டுள்ளது. இவன் பிராமணனோடு மோதவேண்டுமானால் முதலில் இவனுக்கும் பிராமணனுக்கும் இடையில் இருக்கிற ஏனைய சாதிக்காரர்களைத் தாண்டிவரவேண்டும். இவ்வாறு எவருமே தன்னைத் தொட்டுவிடமுடியாதவாறு வெகுநுட்பத்துடன் பின்னப்பட்பட சமூகக்கட்டுமானத்தில் மிகுந்த பாதுகாப்புடன் பார்ப்பனீயம் தன்னை வைத்துக்கொண்டுள்ளது. ஒரு சூத்திரன் ஒரு பார்ப்பனனுக்கு வணக்கம் சொன்னால் அதை அந்தப் பார்ப்பான் ஏற்றுக்கொண்டால் முதலில் அந்தப் பார்ப்பானே நரகத்துக்குச் செல்வான்; அதன்பின்னரே வணக்கம் சொன்ன சூத்திரன் நரகத்துக்குப் போவானாம். வசிட்டன் இராமனுக்கு முடிசூட்டமுன் கண்டத்திலிருந்தாவது ஐயரைக் கூப்பிட்டு தாலிகட்டவேண்டும் என்று பிடிவாதம் பிடிக்கிறோம்.

அண்மையில் தமிழகத்துப் பேராசிரியர் ஒருவர், சாதிக்கட்டமைப்பில் கீழ்நிலையில் வைக்கப்பட்டுள்ளவரை, ஒஸ்லோவில் சந்தித்தபோது "என்ன இருந்தாலும் பிராமணர்கள் கருவிலே திருவுள்ளவர்கள்" என்பதை தான் ஒப்புக்கொள்வதாகச் சொல்லி எனக்குத் திகைப்பூட்டினார். மேலும் "குலத்தளவேயாகுமாம் குணம்" என்பது உண்மைதான் என்றார். அதற்கு உதாரணமாக "தமிழ்நாட்டில் ஒரு அலுவலகத்துக்கு நீங்கள் சென்று ஒருவருடன் நீங்கள் பேசினால், அவர் பிராமணராக இருந்தால் வார்த்தைகளில் நாகரீகத்தை உணர்வீர்கள்; அவ்வாறில்லாமல் ஒரு கீழ்சாதிக்காரருடன் பேசவேண்டியிருந்தால் நீங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெறுத்துப்போகும்படி பேசுவார்." என்றார். அதற்கு நான் "ஐயா! அந்தப் பிராமணரது குடும்பம் பரம்பரை பரம்பரையாக கல்வியறிவு பெற்றிருக்கும். அந்தப் பிராமணர் நல்ல பாடசாலையில் படித்திருப்பார். நிறைய வாசித்திருப்பார். உளவியல் நெருக்கடி இல்லாமல் வளர்ந்திருப்பார். இவைகள் அந்தப் பிராமணரின் பழக்க வழக்கங்களில் பாதிப்பை ஏற்படுத்துமல்லவா? மறுவகையில் நீங்கள் குறிப்பிட்ட கீழ்சாதிக்காரர் எழுத்தறிவற்ற குடும்பத்திலிருந்து வந்திருப்பார். அவர் ஒரு ஏழைத் தொழிலாளியின் மகனாக, சேரியில் வாழ்பவராக, வறுமையில் வாடுபவராக, அதனால் சமூகத்தின்மீது கோபம், விரக்தி கொண்டவராக இருந்திருப்பார். இவரின் நடத்தைக்கும் அந்தப் பிராமணரின் நடத்தைக்குமிடையில் நிச்சயமாக வேறுபாடு இருக்கும்தானே!" என்றேன். அவர் என் கருத்தை ஒப்புக்கொள்ளவில்லை. ஆனால் அவரின் நம்பிக்கையை நினைக்க நினைக்க ஆச்சரியம்தான் என்னை ஆக்கிரமித்தது. ஒரு பேராசிரியர், அதுவும் சாதீயம் சுட்ட ஏராளம் தீக்காயங்கள் கொண்டவர் - அவரே பிராமணர்கள் "கருவிலே திருவுடையவர்கள்" என்று நம்புகிறாரே என்று அவர்மீது பரிதாபம் ஏற்படவில்லை. மாறாக அவரையே நம்பவைக்குமளவுக்கு தனது மேலாதிக்கத்தை நிலைநாட்டிவந்திருக்கும் பார்ப்பனீயத்தின்மீது, ஆற்றல் மிகுந்த விரோதிமீது ஏற்படும் ஒரு வகை மதிப்பு ஏற்படத்தான் செய்தது.

பெரியாரும், அண்ணாவும் தமிழகப் பிராமணர்களின் நிரந்தர வில்லன்கள். காலங்காலமாக பிராமணர்களிடமிருந்துவந்த மேலாதிக்கத்தை பறித்தெடுத்தவர்கள் இவர்கள். ஒரு முறை தண்டபாணித் தேசிகர் என்ற தமிழ்ப் பாடகர் பாடிய மேடையொன்றை தண்ணீருற்றிக் கழுவிய பின்னரே பிராமணப் பாடகர்கள் மேடைக்கு வந்தார்களாம். கீழ்சாதியினர் மொழியான தமிழில் பாடியதால் அந்த மேடை தீட்டுப்பட்டுவிட்டதென்று அந்தத் தமிழகப் பிராமணர்கள் கருதியதே அதற்குக் காரணமாம். இவ்வாறு பிராமணர்களால் வெறுக்கப்பட்ட தமிழையே அண்ணா பிராமண அதிகாரத்துக்கெதிரான போரில் தனது முக்கிய ஆயுதமாக பயன்படுத்தினார். தமிழை முதன்மைப்படுத்திய அண்ணாவின் போராட்டமே பிராமணர்களை தமிழகத்தின் சிம்மாசனத்திலிருந்து இறக்கியது. தங்கள் பொன்முடியைப் பறித்தெடுத்தது தமிழ்; தங்கள் மூச்சான சமஸ்கிருதத்தின் அந்தஸ்தைப் பறித்தது தமிழ் - என்பதனாலேயே பிராமணர்கள் தமிழின் பரம்பரை விரோதிகளானார்கள்.

பார்ப்பன எழுத்தாளரான க.நா.சு, தமிழ்நாட்டில் நமஸ்காரம், வணக்கம் ஆகிப்போய்விட்டது என்று வருந்திக்கொண்டாராம். பிராமணர்களுக்கு சமஸ்கிருதம் ஒரு தேவபாஷை. அதன்மீது அவர்கள் கொண்டிருக்கும் மதிப்பு கடவுளுக்குச் சமனானது. இந்து மதம், பூணூல் என்பவற்றுடன் அவர்களின் அடையாளமாக இருப்பது. இந்தச் சமஸ்கிருதத்துடன் மிகநெருங்கியிருப்பதால் ஹிந்தி மொழிமீது பிராமணர்களுக்கு மிகுந்த விசுவாசமும், வாஞ்சையும் உண்டு. திராவிட இயக்கங்கள் ஆரம்பித்த ஹிந்தி எதிர்ப்பை தமிழகப் பிராமணர்கள் தங்களுக்கெதிரானதாகவே கருதிக்கொண்டார்கள். இது அவர்களை

தண்டபாணித் தேசிகர் என்ற தமிழ்ப் பாடகர் பாடிய மேடையொன்றை தண்ணீருற்றிக் கழுவிய பின்னரே பிராமணப் பாடகர்கள் மேடைக்கு வந்தார்களாம். கீழ்சாதியினர் மொழியான தமிழில் பாடியதால் அந்த மேடை தீட்டுப்பட்டுவிட்டதென்று அந்தத் தமிழகப் பிராமணர்கள் கருதியதே அதற்குக் காரணமாம்.



மேலும் தமிழ்மீது வெறுப்புக்கொள்ளச் செய்தது. இதனால் வெங்கடராமன் (முன்னாள் ஜனாதிபதி) போன்ற தமிழகப் பிராமணர்கள் தமிழ்நாடு என்று தமிழ்நாட்டுக்கு பெயர் சூட்டுவதையே எதிர்த்துப் போராடினார்கள். இன்று திராவிட இயக்கங்கள் இறந்துவிட்டனவென்றாலும் அறுபதுகள் வரை இவ்வியக்கங்களின் பங்களிப்பு மகத்தானது. இவை இல்லையென்றால் தமிழ்நாடு என்ற பெயரில் ஒரு மாநிலம் இன்றுவரை இருந்திருக்காது. ராஜாஜி போன்ற தமிழகப் பிராமணர்கள் கண்ட கனவின்படி தமிழ்நாடு ஹிந்தி பேசும் மாநிலமாக மாறியிருக்கும்.

இவ்வாறு தமிழ், தமிழர்கள், தமிழ் நாடு என்று தமிழோடு தொடர்புபட்ட அனைத்துக்கும் எதிரானதாகவும், ஹிந்தி, இந்து மதம், இந்தியத் தேசியம் போன்றவற்றிற்கு தீவிர விசுவாசமாகவும் இருப்பதனால் தமிழகப் பிராமணர்கள் டெல்லிப் பிராமண ஆளும்வர்க்கத்தின் நம்பிக்கைக்குரியவர்களானார்கள். தமிழக மாநில ஆட்சியதிகாரத்தைப் பிராமணர்களிடமிருந்து திராவிட இயக்கங்கள் பறித்தெடுத்தாலும், இந்திய அரசியல் சட்டமைப்பின்படி மாநிலங்களை ஆட்டிப்படைக்கும் அதிகாரம் டெல்லியிலேயே இருப்பதனால் தமிழகப் பிராமணர்கள் டெல்லியினூடாக தமிழக அரசியலை ஆட்டிப்படைக்கும் ஆற்றல் கொண்டவர்களாக இருக்கிறார்கள். பிராமணருக்குப் பிடிக்காதவரான கருணாநிதியின் ஆட்சி நாற்காலியில் அமர முன்னரே அவரது ஆட்சி கலைக்கப்பட்டதும், அதே நேரம் சினிமா நடிகை ஜெயலலிதாவின் அலங்கோல ஆட்சி இன்றுவரை கலைக்கப்படாமலிருப்பதும் ஒரு சில உதாரணங்கள். "எங்களைப் பகைத்தபடி பதவியிலிருக்க முடியாது. பதவி வேண்டுமானால் எங்களை அனுசரித்துப் போயாகவேண்டும் " என்பதே இதன் செய்தியாகும். சுப்ரமண்யசாமியை கருணாநிதி முத்தமிட ஆரம்பித்ததும், டெல்லி உளவுத்துறையின் ஆலோசனைப்படி வை.கோபால்சாமியை விலக்கியதும் இதனடிப்படையிலேயாகும்.

தமிழகத்தின் அரசியலில் பிராமணர்களின் நேரடியாக பங்குபற்றவில்லையே தவிர தமிழர்களின் வாழ்வியலைத் தீமானிக்கும் ஆற்றல் இன்னம் அவர்கள் வசமேயுள்ளது.

இன்று திராவிட இயக்கங்கள் இறந்துவிட்டனவென்றாலும் அறுபதுகள் வரை இவ்வியக்கங்களின் பங்களிப்பு மகத்தானது. இவை இல்லையென்றால் தமிழ்நாடு என்ற பெயரில் ஒரு மாநிலம் இன்றுவரை இருந்திருக்காது. ராஜாஜி போன்ற தமிழகப் பிராமணர்கள் கண்ட கனவின்படி தமிழ்நாடு ஹிந்தி பேசும் மாநிலமாக மாறியிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அவற்றில் முதன்மையானது பத்திரிகை, தொடர்புசாதனங்கள் மீதான அவர்களின் ஆதிக்கம். இன்றைய யுகத்தில் பத்திரிகை, தொடர்பு சாதனங்களின் சக்தி மகத்தானது. இது மக்களை இயக்குவிக்கும் மூலசக்தியாக, மக்களின் சிந்தனைகளைப் பதப்படுத்தும் சாதனமாக, மக்களின் சிந்தனைப் போக்கினைத் திசைதிருப்ப வல்லதாக இருப்பதனால்தான், இதனைத் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க அதிகார விரும்பிகள் படாதபாடு படுகின்றனர். “மீடியா” என்ற இந்த ஆங்கில மந்திரச் சொல்லால் கோழையை வீரனாக்கலாம்; வீரனைத் துரோகியாக்கலாம்; துரோகியைத் தியாகியாக்கலாம். மேற்குலகில் பனிப் போர் (Cold War) முடியும்வரை கொம்யூனிஸ்டுகள் பிசாசுகள் என்ற கருத்தும், இப்போது முஸ்லீம்களும், மூன்றாம் உலகத்தவர்களும் பிசாசுகள் என்ற கருத்தும் இந்த மீடியாவினாலே உருவாக்கப்பட்டது. ஒவ்வொரு சராசரி இந்தியனும் பாகிஸ்தானிய விரோதியாயிருப்பதற்கும், ஒவ்வொரு சராசரி சிங்களவரும் தமிழருக்கான அதிகாரப் பகிர்வுக்கு விரோதமாயிருப்பதற்கும் இதே “மீடியா”தான் காரணம். இந்த ஆற்றல் மிகுந்த சாதனம் தமிழகத்தில் பிராமணர்களிடமே இருக்கிறது. கால்நூற்றாண்டுக்கு மேலாக ஆட்சியிருந்தபோதும், திராவிடக் கட்சிகளால் இந்தப் பத்திரிகை, தொடர்புசாதனங்களை தமிழகப் பிராமணர்களிமிருந்து விடுவிக்க முடியவில்லை.

எண்ணிக்கையடிப்படையில் பல பத்திரிகைகள், சஞ்சிகைகளை பிராமணரல்லாதவர்கள் நடாத்தினாலும், இன்று முன்னனணியில் இருக்கும் அனைத்துப் பத்திரிகைகளும், சஞ்சிகைகளும் பிராமணர்களுடையதே. கல்கி, குமுதம், ஆனந்த விகடன், யூனியர் விகடன், யூனியர் போஸ்ட், துக்ளக், இந்தியா டுடே, கல்கண்டு, கலைமகள், சாவி, இதயம் பேசுகிறது, ஹிந்து, தினமணி, தினமலர் என்று நாமறிந்த அனைத்து வர்த்தகப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் அனைத்தும் பிராமணர்களதே. திராவிடக் கட்சிகளை உடைப்பது, திராவிடக் கட்சி ஆட்சிகளைக் கவிழ்ப்பது, ஹிந்தியையும், ஆங்கிலத்தையும் மெல்லப் மெல்லப் புகுத்தி தமிழ்மொழியை இயற்கையாக சாகவைப்பது, தனித்தமிழ் பாவனையை கேலிசெய்வது, தமிழாசிரியர்களை கோமாளிகளாகவும், தமிழ்ப் பற்றாளர்களை வெறியர்களாகவும் சித்தரிப்பது, இந்து மத வெறிமூட்டி விநாயகர் சதுர்த்தி கொண்டாடவைப்பது, முஸ்லீம்களை, பாகிஸ்தானியர்களை, கிறித்தவர்களை விரோதிகளாக கருதப் பழக்குவது, இந்தியத் தேசீய இனங்களின் உரிமைகளை தேசவிரோதமாகக் கற்பிப்பது போன்ற பார்ப்பனீயக் கொள்கைகளை - தமிழ் விரோதக் கொள்கைகளை செயற்படுத்துவதில் மிகமிகப் பெரிய பங்கினை இந்தப் பிராமண மீடியா வகிக்கின்றன. எனைய தொடர்புசாதனங்கள் டெல்லி ஆட்சியாளரின் கட்டுப்பாட்டின் கீழ் இருப்பதால் அவை இயல்பாகவே தமிழகப் பிராமணர்களின் கைகளுக்குக் கிடைத்துவிடுகின்றன. இவ்வாறு இந்த மீடியா தமிழகப் பிராமணர்கள் கையிலிருப்பதால் இவர்களுக்குப் பிடித்ததே தமிழக மக்களுக்குப் பிடித்ததாகவும், இவர்களுக்குப் பிடிக்காதது தமிழக மக்களுக்கு பிடிக்காததுமான ஒரு நிலையை இவர்களால் இன்று உருவாக்க முடியும்.

**(இதுபற்றி மேலும் அடுத் இதழில்)** ■



# நாற் சந்தி



**ஆசிரியர்,**
**சுவடுகள்.**

அன்புடையீர்,

யமுனா ராஜேந்திரன் சினிமா பற்றி நிறையவே எழுதுபவர். சமகாலத் தமிழ் சினிமா பற்றி நினைத்தாலேயே எனக்குத் துக்கம் மிகுந்து அழுகை பீறிட்டுக்கொண்டு வரும். காமராஜர் ஆட்சி போன பிற்பாடு தமிழ்நாட்டை ஆளும் தகுதி சினிமாக்காரர்களுக்கு மட்டுமே உண்டு என்பது உறுதியாகிவிட்டது. கல்யாணம் ஆனால் பைத்தியம் போகும், பைத்தியம் போனால் கல்யாணம் ஆகும் என்கிற மாதிரித் தமிழ்நாட்டில் அரசியலும் சினிமாவும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்துள்ளன. இப்போதைக்கு இரண்டும் உருப்படும் சாடை இல்லை. எனவே அவற்றைப் பற்றி அதிகம் எழுத விரும்பவில்லை. சுவடுகள் 67ல் யமுனா ராஜேந்திரன் இசையைப் பற்றி என்னென்னமோ எல்லாம் எழுதியிருக்கிறார். எனக்கு இசையைப் பற்றி அதிகம் தெரியாது. ஆனாலும் Tாங்Gா (Tango) லத்தீன் அமெரிக்க நடனம் என்று தெரியும். அது யமுனா ராஜேந்திரன் சொல்வது போல ஜப்பானிய நடனமல்ல. இந்திய இசையும் நடனங்களும் ஆபிரிக்கப் பாடல்களும் பற்றிய அவரது குறிப்புகள் தெளிவீனமாக உள்ளன. கலாசாரத்து உணர்ச்சிகளைச் சித்தரிக்கப் பயன்படுத்தும்போது அது பிரதி செய்வது போலவோ திருட்டுப் போலவோ தோன்றக் கூடும் என்ற அவரது கருத்து சரியானதாகத் தோன்றவில்லை. மேனாட்டுப் பாடல் மெட்டுக்களை முன்பு இந்தி வழியாகத் தமிழ்த் திரை திருடியது. இப்போது முன்னேறிவிட்டோம். நேரடியாகவே திருடப் பழகிவிட்டோம். இன்னொரு இசை மரபுக்கேற்ப இசை அமைப்பதும் இன்னொரு இசை மரபிலிருந்து மெட்டுக்களை அப்படியே எடுத்துக் கொள்வதும் ஒன்றல்ல. இது வெறுமனே இசைக்கருவி தொடர்பான பிரச்சனையுமல்ல. இளையராஜாவின் ஒத்திசை (ஸிம்பொனி) திருட்டு எனக் கூறப்படலாம் என்ற கூற்று இவ்வகையில் அபத்தமானது. ஸக்ஸபோன் மரபுவழி ஜாஸ் இசையில் மிகவும் பயன்படும் ஒரு கருவி. ஆபிரிக்க இசைஞர்கள் அதை எவ்வளவு தூரம் பயன்படுத்துகிறார்களோ தெரியாது. கதிரி கோபால்நாத் அதை முக்கியமாகக் கர்நாடக இசைக்கே பயன்படுத்துகிறார். அவர் சினிமாவில் வாசித்தது எவரது இசையின் தழுவல் என்று யமுனா ராஜேந்திரன் தனது நண்பரிடம் கேட்டுச் சொன்னால் நல்லது. இன்றுவரை தமிழ்த் திரைப் படங்களில் காட்சி அமைப்பின் தரம் மிகவும் மோசம் என்றே நினைக்கிறேன். சராசரிக்கும் கீழான மேனாட்டுப் படங்களில் எடுக்கப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரத்தைகூட இல்லாமலே தமிழிற் படமெடுக்கிறார்கள். இதை யாராவது சொல்வது அடிவருடித்தனம் இல்லை. அதை மழுப்புவதுதான் அயோக்கியத்தனம்.

சுவடுகள் 68ல் புலம்பெயர் இலக்கியம் பற்றி யமுனா ராஜேந்திரன் எழுதும்போது மலையகத் தமிழ் இலக்கியத்தையும் உள்ளடக்குகிறார். அப்படியானால் அமெரிக்கக் கண்ட முழுமையின் இலக்கியமும் புலம்பெயர் இலக்கியமாகிவிடாதா? மலையகத் தமிழ் இலக்கியம் இன்று இலங்கை மண்ணின் பெருமை மிக்க இலக்கியமாக வளரும் நிலையில் உள்ளது. இந்திரா பார்த்தசாரதி டெல்லியிலிருந்து எழுதியது புலம்பெயர் இலக்கியம் என்றால், மஹாகவி கொழும்பில் எழுதியதும் புலம்பெயர் இலக்கியமாகாதா? ஸத்யஜித் ராய் (ரே என்று சொல்வதிலுள்ள அடிவருடித்தனம் பற்றி முன்பு எழுதியிருக்கிறேன்) படங்களில் உள்ளதும் புலப்பெயர்வு என்றால் இன்றைக்குப் புலம்பெயர் இலக்கியம் பற்றி ஆராய்வதை விடப் புலம்பெயரா இலக்கியம் பற்றி ஆய்வது கூடப் பயனுள்ளது. ஏனெனில் அதுதான் சிறுபான்மைப் போக்கும், கவனித்துக் காப்பாற்றப்பட வேண்டியதுமாக இருக்கும்.

ஆங்கில மொழி பற்றியும் ஆங்கில இலக்கியம் பற்றியும் இன்று விரிவான விவாதங்கள் நடைபெறுகின்றன. சுவீகரிக்கப்பட்ட ஆங்கில மொழிகள் என்ற விதமாகப் பல்வேறு நாடுகளிற் பேசப்படும் ஆங்கிலத்தின் வடிவங்கள் தம்மை இன்று நிலைநிறுத்தி விட்டன. ஆங்கில இலக்கியம் என்பது பல பொருள்களில் வருகிறது. ஒன்று ஆங்கில நாட்டைக் குறிப்பது. இங்கே அமெரிக்க, அவுஸ்திரேலிய இலக்கியமும் புறமானவையாகின்றன. பல வகையான ஆங்கிலங்களை ஒருசேரக் கருதி அதில் மூலவடிவு பெறுவனவற்றையோ ஆங்கிலேய மரபு எனக் கூறக்கூடிய மொழிநடைக்குரியனவற்றையோ அப்பதம் குறிக்கலாம். ருஷ்டியும் நய்ப்பாலும் எழுதுவன ஆங்கில இலக்கியமாக அங்கீகரிக்கப் பட்டவைதான். இவர்களது எழுத்தில் உள்ள கொலனி ஆதிக்க எதிர்ப்பு சர்ச்சைக்குரிய விஷயம். முக்கியமாக நய்ப்பால் பற்றிப் புகழ்பெற்ற மேற்கிந்தியக் கவிஞர் திருவாளர் அந்திநேரம் (Mr.Nightfall) என்று குறிப்பிடுவதற்குக் காரணம் இல்லாமலில்லை.

"கொஞ்ச நேரம் தனியாய் இருந்தால் கவிதை எழுதிவிடுகிறார்கள்.... எல்லாவற்றிலும் அரசியல். ஏதேனும் ஒரு குழு சார்ந்திருக்க வேண்டிய அவசியம். சுயாதீனமாக இருப்பவன் மீது அவதூறுகள். என்ற விதமாக நீளமாகக் குறைப்பட்டுக் கொண்டு போகிற யமுனா ராஜேந்திரன் புலம்பெயர் வாழ்க்கையின் நெருக்குவாரங்களுக்கிடையில் திணறுகிறவர்களது நிலைமைகளை யோசித்துத்தான் எழுதுகிறாரா என்று விளங்கவில்லை. என்ன சாதனைகள் நிகழ்ந்துள்ளன என்று அவர் கேட்கிறார். எந்த நல்ல இலக்கியமும் சாதனை பற்றியதல்ல, பங்களிப்புப் பற்றியது. வண்ணநிலவன் சொல்கிற மாதிரி ஈழத்து இலக்கியம் மட்டுமல்லாது புலம்பெயர் இலக்கியமும் தனது அரசியலுக்காக கசாயம் குடிக்க வேண்டும்" என்று மருத்துவ ஆலோசனை கூறும் யமுனா ராஜேந்திரன் இந்தியா டுடேயிலிருந்துதான் கஷாயம் வழங்கப் படுகிறதா என்று விசாரித்துச் சொன்னால் நல்லது. அவரும் வண்ணநிலவனும் ஈழத்து இலக்கியம் பற்றி அறிந்தது சொற்பம் என்றே நினைக்கிறேன். ஆங்கில இலக்கியம் பற்றி இதே கட்டுரையில் அவர் கூறியவை தமிழ் இலக்கியம் பற்றிய தமிழகத்து மொத்த விற்பனையாளர்களது நிலைப்பாட்டுக்கும் பொருந்தும் என நினைக்கிறேன்.

"தமிழகப் பார்ப்பனியம்" கட்டுரையாளர் பார்ப்பனியத்தை நாற்ஸியிசத்துடன் ஒப்பிடும் முயற்சியில் சாதியத்தின் பிற பரிமாணங்களை உதாசீனம் செய்கிறார். இந்திய தேசியவாதம் என்பது பார்ப்பனியத்தின் சிருஷ்டி அல்ல. அது பிரித்தானிய சாம்ராஜ்யத்தின் குழந்தை. குறிப்பிட்ட சாதிப் பரிமாணத்தை மட்டும் வலியுறுத்திப் பிற சமுதாய முரண்பாடுகளை அவதானிக்கத் தவறுவது ஒடுக்கப்பட்ட மக்களது நலன்கட்கு உகந்ததல்ல.

திருநாவுக்கரசு கட்டுரை (சுவடுகள்69) போல மேலும் பல தேவை. தேசபக்தனுடைய கட்டுரை மிகவும் நிதானமான ஒரு ஆய்வு. பழமலய் பற்றிய பங்களிப்புகள் மிகவும் வரவேற்கத் தக்கன. கனிவண்ணனுடைய கவிதைகள் மூன்றும் நன்றாக இருந்தன.

அன்புடன்,
சிவசேகரம்.



# திறமைக்கும் இடமுண்டு

## அது சந்திர சூரியராகும்

அறிமுகம் செய்வது வணங்காமுடி

அத்தியாயம் 1.
சிறு பீடிகையுடன் ஆரம்பம்

ஆயிரமாயிரம் தமிழீழ சோசலிசப் புலவர்கள் பாரெங்குமிருந்தும், செங்குட்டுவன், தான்தோன்றி, இளையவன், மூத்தவன், கடைக்குட்டி, கண்றாவி, கற்பரசி, தொல்காப்பியன், பெண்மணி, வன்னிச்சாமி, பட்டாம்பூச்சி, மௌலானா, திரு.கோணல்சாமி, இளையவள், மூத்தவள், குப்பிளானாள், மணிமுடிக்கரசி, லால்பகதூர், யாழ்ப்பாணி என இருபத்துப் யெர்கள்தான் கண்முன் வந்து திறக்கும். இவர்கள் எவ்வாறு தனித்துவம் பெற்றார்கள், எம் கண்முன் வந்து சடுதியாக நிறுத்தப் படுவதற்கான காரணங்கள் என்னவென வினவும்போது "திறமை" என்ற அடித்தள விவாதம் பிளக்கும். இது என்ன திறமை, உயர்வான புலவர்கள், என்றவாறு சோசலிசப் புலவர்களிடையே தேவையற்ற ஏற்றத் தாழ்வா? புதிய வர்க்கமொன்றின் தலையெடுப்பா? என்றெல்லாம் கிளம்பும் கேள்விகள் யதார்த்தமானவையே!

ஆனால் இவற்றிற்கு வரமுன் எம்மெல்லோர் முன்னர் நிறுத்த வேண்டிய முக்கிய கேள்வி, மேற்படி பட்டியலில் குடிமகன், பொதுமகன் என்ற பெயர்கள் எவ்வாறு இடம்பெறாது போயின என்பதாகும். இக்கேள்விக்கு இப் புனைபெயர்களின் பின்னிருக்கும் சோசலிசப் புலவர் அன்பர் சந்திர சூரியரது தனிப்பட்ட விளக்கத்தின் தர்க்கம் இலகுவானது.

"கால் - மதி ஆளுனர் அரைகுறை கூறித் தம் நாமம் பேசி ஓயார்
நின் - மதி கண்டிடும் இயற்கையாள் எய்தும்பால் - இவர்யாவர்
என் பெயரன்றி வேறுயாது ஓதி வாழ்வார்.
கண்ணிமைக் கடுதியின் காலமும் கண்டிடா புகழ் பட்டியல் கூறி - நீர்
ஒழியும், எய்தியம்பிடும் அடிபிடி கோமாளியவர்
இளைத்துச் சமையும் செய்தி சேர்வீர்"

புலவரது பதில் இவ்வாறிருக்கினும், சோசலிசப் புலவர் குழுக்களிடையே பொதுவாக இடம்பெறும் விளக்கம் பிறம்பானதாயும், முரண்களுள்ளதாயும் காணப் படுகின்றன. "சந்திர சூரியர் சுமார் 25 வருட காலம் முன்னே பிறந்ததுதான் அவரது பிழை" என அவரைப் புகழ்பாடும் குழுவினரது கணிப்புகள் ஒருபுறமும், இவர் கவிதையின் வடிவம் இலக்கியம், அமைப்பு போன்றவற்றில் பழமையையும், அதேவேளை அரசியல் - கலாச்சார - சமூக - இயங்கியல் நோக்குகளில் புதுமையையும் பேணி அவ் இடைவெளியில் இருந்துகொள்வதால் பிரபல்யம் இப்போது கிட்டப் போவதில்லை என்ற விளக்கம் கொண்டோர் நடுவினிலும் மறுபுறத்தில் புலவரை "விதண்டாவாதி" என்றும் இவர் அன்றன்று ஏற்றுக் கொள்ளப்படும் அரசியல்நெறி (Political correctness) கொண்ட சொற்தொடர்களையும் வார்த்தைகளையும் பாவனம் செய்து சகல ஒழுக்கக் கோட்பாடுகளையும், இலக்கியக் கட்டுக்கோப்புகளையும் உடைத்தெறிய முற்படும் "போக்கிலி" என்றும் கூறி நிராகரிப்பவர்களும் சுமுகமாக ஒன்றாகச் சீவனம் செய்வதைக் காண முடிகிறது.

ஆனால், இவற்றையெல்லாம் கவனத்தில் கொண்டு, மேலும் இதற்கான காரணங்களை ஆராய்வதும், அவற்றினூடாக சிறிது சிறிதாக இந்தச் சோசலிசப் புலவருடைய சிந்தனைகளையும், கருத்துகளையும், நாசூக்காகவும், நகைச்சுவையுடனும் அவர் அவற்றை முன்வைக்கும் பாங்கையும், கூடவே, புலவரான அந்த மனிதரையும் அடையாளம் கண்டு அறிமுகம் செய்து வைப்பதே இக்கட்டுரையினதும், தொடரப் போகும் அதன் அத்தியாயங்களதும் இரு நோக்கங்களாகும்.

இச் சிரமமான வழியில் காலடி வைக்குமுன், இன்றைய சோசலிசப் புலவர் காலத்து, வீச்சினை ஓரளவு கண்கணிப்பீடு செய்துகொள்வது அவசியமானது. இதனை எதிர்வரும் கட்டுரைகளூடாக சந்திர சூரியரது துணையுடன் கண்டுகொள்ள முடியுமாயினும் அவ்வீச்சின் கடந்தகால ஆழத்தினையாவது ஒரு பொது அறிவுக்கூடாகக் கிரகித்துக் கொள்வது வேண்டியதாகிறது.

உண்மையில், இதற்கு ஒரு சரித்திர பூர்வமான சமூக - கலாச்சார ஆய்வு ஒன்று மாக்சிச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையில் நன்றாக சமைத்து இவ்விடத்தில் சமர்ப்பிக்க வேண்டியுள்ளது. ஆனால், இக்கட்டுரையாளரின் போக்கும், கட்டுரையின் நோக்கும் அவ்வண்ணமில்லாதமையால் சில துணுக்குகளூடாக கடந்த காலத்தை சம காலத்துடன் ஒப்பீடு செய்யும் முயற்சியே இங்கு கவலையுடன் கைக்கொள்ளப்படும்.

சோசலிசப் புலவர்களது காலத்தில் நின்று பின்னோடி பார்ப்பின், தமிழர்களது நிலைமை மிகவும் மோசமானது, கவலைக்குட்பட்டது என்பதை நாம் இன்று அவ்வப்போது நினைவூட்டுமாறு சொல்லிக் காட்டும்போதே புலப்படுகிறது.

ஆத்திசூடி, கொன்றைவேந்தன், தேவாரம், திருவாசகம் என அலச்சியமாக இல்லாதவற்றைத் தேடியும் குடியானவர் சமூக அமைப்பைப் பேணியும் தமது திறமைகளை வீணாக்கித் தம்மையும் குழப்பி மக்களையும் அடியொட்டத் தாழ்த்தியும் போக்காட்டிய காலம் நம்ப முடியாதது, ஏற்கப்படக் கூடாதது. அண்மையில்கூட தமிழீழத்தில் "தடுக்கி விழுந்தால் காலடியில் ஒரு பனங்கொட்டையும், அருகில் ஒரு உயர்வான பாடசாலையும் இருக்கும்" என்று ஈவிரக்கமில்லாது, எமது பண்பாட்டினை, எமது பழைய அபிலாஷைகளை அதன் போலி அடித்தளங்களை நியாயமாகவும், ஆனால் பொதுவில் "பொறாமை"யின் பேரிலும் மாற்றார் சாடித் தீர்த்த காலமொன்றும் அதைத் தொடர்ந்திருந்தது. புத்தகப் புழுக்களாய் பொறியிலாளர் (Engineers), மருத்துவவாதிகள் (Doctors), கணக்காளர்கள் (Accontants) என்ற கூட்டங்கள் மலிந்து வாழும் பூமி என எமது முழு இனத்தையுமே அவதூறாக நையாண்டி செய்தபோது நாம் சலித்து மனம் நலிந்துபோன தருணங்கள் எம்மெல்லோர்க்கும் பல தடவை உண்டு. இதனை ஞாபகமூட்டி பல மனங்களை இங்கு யான் வேதனைக்குட்படுத்தலாம், மன்னிக்கவும். இந்த நிலைமைகளிலிருந்து இன்று எம்மை சற்று நோக்குங்கள். எவ்வளவு முன்னேற்றம் கண்டுவிட்டோம் என்பது அப்போதே புரியும். சோசலிசப் புலவர்களது மகிழ்ச்சியான ஆழமும் தெரியும்.

"உன்னிப்பார் உன்னைப்பார் உண்மை உழைத்தவனே
வர்ணிப்பாரோ காடையர்தம் வதைக்கும் வார்த்தைகளில்"
......

என்ற சில அடிகளிலேயே எமது இன்றைய முன்னேற்றத்தின் ஆணித்தரத்தையும், அதேவேளை கடந்தகாலச் சோதனைகளின் வேதனைகளையும் மிகவும் அரத்தபுஷ்டியுடன் முன்வைக்கிறார் சோசலிசப் புலவர் பனங்காட்டுச் சோணகிரி, தனது "தமிழீழ சோசலிசப் பூங்கா" என்ற கவிதைத் தொகுப்பில்.

எம்மவரின் இப்பாரிய நவநாகரிக - சதாய - சோசலிச வளர்ச்சியானது வெறும் "புத்தகப் படிப்பினால் புதுமை பிறந்திடுமா?" அல்லது "ஏட்டப்பம் சாப்பிட்டும் ஏப்பம் முடியுமா?" என்ற சில யதார்த்த கேள்விகளால் மட்டும் செப்பனிடப்பட்டதொன்றல்ல.

சோசலிசப் புலவர்கள் எமது சமுதாயத்தினை உள்ளும் புறமும் அணுவணுவாக ஆராய்ந்தது மட்டுமல்ல, எமது பண்டைய நாகரீகத்தினூடாக நேரப் பயணம் (Time – travel) செய்து வெட்டி, வடிவம் செய்யப்படாது (uncut) கண்ட இரத்தினங்கள் - வைரங்களாம் உவமைகள், கவிதைகள், கற்பனைப் படிப்பினைகள், பழைய உண்மைகள் என இன்னபிற மீட்டெடுத்து மெருகூட்டி தற்கால வடிவங்கள் கொடுத்து எம்மவர் பலன்காணச் செய்துள்ளதுடன், எமது பழைய சரித்திரம்பால் ஒரு சிறு பெருமையையும் சேர்த்துள்ளார்கள். ஆக, எம்மவர் முன்னர்போல் "நான் தமிழன்" என்று வெட்கத்தினால் ஒப்புக்கொள்ளாத நிலைமை போக்காட்டப் பட்டுள்ளதுடன், நாம் தமிழர் என சிறு சுயநம்பிக்கையுடன், மற்றைய முற்போக்கான சோசலிச நாகரிக சமுதாயங்களிடையேயும் ஒப்பீடாக நிமிர்ந்து நிற்கச் செய்துள்ளது இவர்களது பாரிய முயற்சி.

இவ்வகையில் உதாரணமாக கவிஞர் சந்திரசூரியரது கவிதையொன்றை இங்கே குறிப்பிடலாம்.

எமது சரித்திரத்தில் மிகவும் கேவலமான ஒரு சகாப்தம், சைவர்கள் எமது சமுதாயத்தின்மேல் கொண்டிருந்த கெடுபிடிக்காலம் என்பதை எமக்கு சோசலிசப் புலவர் மட்டுமன்றி, சோசலிச - சமுதாய - விஞ்ஞான அறிஞர்கள்கூட நன்கு கற்றுத்தந்து தெரிந்துகொண்ட விடயம். இக்காலத்தில்



ஒரு மூலையில் எழுதப் பட்டதாகக் கூறப்படும் ஒரு "படிப்பினைக் கதை" "செம்மனச் செல்வி"யின் படலமாகும்.

அறிமுகமில்லாதவர்க்கு இதோ ஒரு சிறு திரைநீக்கம்:

செம்மனச் செல்வி என்பவள் ஒரு வியாபார வெற்றியற்ற புட்டவித்து விற்கும் குட்டி பூர்ஷ்வாக் கிழவியாவாள். கிழவியின் ஊரருகிலிருந்த அணைக்கட்டு பாரிய வெள்ளம் காரணமாக உடைந்து பெருக்கெடுக்கிறது. அரசன் மந்திரியின் ஆலோசனைப்படி "வீட்டுக்கு மூன்று முழம்" என அணைக்கட்டை நிவர்த்தி செய்யும் பொறுப்பை அளந்து கொடுக்கிறான். கிழவிக்கும் அதன்படி ஒருபங்கு வேலை சுமத்தப் படுகிறது. ஆனால், அணைகட்டும் தேகத் திராணி கிழவிக்கு எங்கே?

இவ்விடத்தில் சைவச் சதிகாரர் சமைக்கிறார்கள் சிவன் எனும் போலிக் கதாபாத்திரத்தை. அணைப் பெருக்கிற்கே சிவன்தான் காரணியாம். ஏனெனில் அவனொரு கடவுளாம். மக்களுக்குப் படிப்பினை தர இந்தத் திருகுதாளங்கள் செய்வானாம். அத்தோடு மானுட தேகம் அணிந்து வருவானாம்! சோசலிச உண்மை கண்ட விஞ்ஞான அறிவுடைய சகலர்க்கும் ஒன்று மட்டும் நன்கு புரியும்: அணைக்கட்டு உடைவதற்குப் பின்னால் ஒரு பூர்ஷ்வா - குட்டி பூர்ஷ்வா சதி இருக்குமென்று!

அணைக்கட்டின் கருவைத் திட்டமிட்ட பொறியிலாளர்கள், உப ஒப்பந்தம் (sub – contract) ஏற்று பாகங்களைக் கட்டியவர்கள் என்று குட்டி பூர்ஷ்வாக்கள் ஒரு புறமும், தண்ணீர் வியாபாரம், மீன் வியாபாரம் எனப் பல வியாபாரங்களூடாக பெருலாபம் காண, பொறுமையில்லாது அணைக்கட்டு வேலையை அரைகுறையாக முடித்து வைக்கத் தூண்டிக் கொண்ட பூர்ஷ்வா கூட்டங்கள் மறுபுறமும் பிரச்சனையின் பங்காளிகள் என எமக்குப் புரியும். இவற்றைவிட குடியானவர் (Feudal) சமூக அமைப்பும், மன்னர் ஆட்சி முறையும் இந்த நிலைமையை எவ்வாறு மோசமாக்கியிருக்கும் என்பதும் உணரக் கூடியதே. இவற்றைவிட்டு சிவன், கடவுள் என்ற கேலிச் சேட்டைகள் தேவையற்றவையே! பறுவாயில்லை கதையைத் தொடருவோம்....

இந்தச் சிவன் மாறுவேடத்தில் (மனிதனாக) கிழவியிடம் வந்து தான் அவள் பங்கினைச் செய்வதாகவும், மாற்றீடாக கிழவியின் புட்டுக் குழலால் வரும் உரிந்த புட்டை மட்டும் பெற்றுக் கொள்வதாகவும் ஒப்பந்தம் செய்கிறான். ஆனால், புட்டுக் குழலாலோ உலர் தவிர்த்து வேறொன்றுமில்லை. நன்றாகத் திண்டுவிட்டு நித்திரை செய்கிறான் சோம்பேறி.

## இங்கும் இருக்கிறது!!

நோர்வேயில் ஊழல் இல்லை என்று யாராவது சொன்னால் யாரும் நம்பிவிடாதீர்கள். எங்கள் நாட்டில் இருக்கும் அளவில், மட்டத்தில் இல்லாவிட்டாலும், இங்கும் கணிசமாக இருக்கிறது. குறிப்பாகத் தொழில்துறையில் ஊழலைக் கண்டபடி சந்திக்கலாம்.

அண்மையில் உலகின் 41 நாடுகளில் எடுக்கப்பட்ட ஒரு கணிப்பீட்டின்படி ஊழல் குறைந்த நாடுகளில் நோர்வே பத்தாவது இடத்தில் உள்ளது. அயல் நாடுகள் ஓரளவு நல்ல நிலையில் உள்ளன. உலகிலேயே ஊழல் குறைந்த நாடாகக் கணிக்கப்படும் நாடு நியூஸிலாந்துதான். இதையடுத்து டென்மார்க், சிங்கப்பூர், பின்லாந்து, கனடா, சுவீடன், அவுஸ்திரேலியா, சுவீற்சர்லாந்து, ஒல்லாந்து என்பன உள்ளன. இந்தப் பட்டியலில் ஊழல் மிக மோசமாக உள்ள நாடுகளாகப் பாகிஸ்தான், சீனா, இந்தோனேசியா என்பன குறிக்கப் பட்டுள்ளன. ஊழலுக்கு எதிரான உலக அமைப்புகளில் ஒன்று (Trancparency International) இந்தக் கணிப்பீட்டை வெளியிட்டுள்ளது.

**மாது**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வேலை விடுதலை தரும்" என அற்சவிற்சில்கூட (Auschwitz) தேசிய சோசலிசவாதிகள் (Natinal socialist)கூடத் தெரிந்து எழுதியிருந்தார்கள். "எல்லாம் தெரிந்த" சிவனுக்கோ வேலைக்கு மதிப்புத் தரத் தெரியவில்லை. அரசன் வருகிறான். விசாரணை செய்கிறான். கட்டி முடியா அணையால் ஆத்திரம் கொள்கிறான். அவன் உத்தரவின் பேரில் சோம்பேறிச் சிவனுக்கு கசையடி வழங்கப் படுகிறது. ஆச்சரியமாம்! விடயம் என்னவெனில் அவன் பட்ட அடிகள் சகலர்க்கும் பட்டதாம்! வேதனை எல்லோர்க்குமாம்!!

நம்பக்கூடிய விசயமோ? நிச்சயமாக இல்லை!!

உண்மையைத் தேடி அலையும் சோசலிசப் புலவர்கள் இக்கேள்விகளுனேயே தமது ஓய்வில்லா ஆய்வுகளை நிறுத்தியிருக்கலாம். ஆறரவ் அவர்கள் ஒருபடி மேலே ஏறிச் சென்று அப்படி அடி யாபேருக்கும் பட்டிருந்தால் அது முறையானதா? அதற்கான காரணிகள் எவைதானோ? எனப் பல ஆய்வுகள் செய்து சோசலிச - சமுதாய - விஞ்ஞான அறிக்கைகள் பலவற்றை சமர்ப்பித்துள்ளதுடன், இந்தப் படிப்பினைக் கதைக்கும் புதிய வியாக்கியானங்கள் கொடுத்துச் சீர்செய்து நிமிர்த்தியுள்ளார்கள்.

இவ்வழியில்தான் இடம்பெறுகிறது சந்திரசூரியரது கவிதை:

உதிர் சதிப்புட்டாம் பாட்டியின் குழலால் - மெம்பனிதனில்
கொட்டிக் குவித்தும் கெட்டி சோராதாம்
மனிதர் சதி - விதி யென்றுண்டாம் அதனால் - மண்
வெட்டிக் குவித்தும் சிற்றணைப் பெருக்கடங்காதாம்.
செவ்விகள் இப்பல குத்தின செம்பனா பூகடித்த காதுகளில்
செம்மறிக் கூட்டமாயின எம்மினம் வரித்தான் பூ நூல்
வலிவான் சொல்மதிக் கடங்கி மடங்கினர் தடங்கினர்
பெருக்கும் புட்டும் கூட - வுள்ளே சிவனும் - வேறேது
மனிதன் அறிந்து "மாவோ" "கிண்டலோ"? என பிரித்தறி - புரியும்
இங்கே சொல்லில் செயலில் சிந்தனைக் குழப்பமென.
புதிதாமோ மாந்தருக்கு மன்னரின் அடிகடி
வரிவரியாம் கட்டணம், மேனியிலும் பெரும்வதை
அதிகாரப் பிரம்பதனால் ஆயிரம் குறிதர - வேண்டும்
எங்கே சோசலிச மக்கள் ஜனநாயக குடியரசு
நலமன்னர்கள் நாம்தான் துணிந்தியங்குவீர், நீவிர் - அன்றே
எம்மண்ணும் செம் மனம் கண்ட செல்வியாகும்.

உதிர்புட்டுக்கும், உடைந்த அணைக்கட்டுக்கும் பொருளாதார விஞ்ஞான விளக்கங்கள் உண்டு என்ற அசைவில்லா நம்பிக்கையுடன் மனிதனின் விதி, கடவுள் என்ற மூட நம்பிக்கைகளின் கற்பனை

விவாதங்களை அடியொட்ட நிராகரிக்கும் சந்திரசூரியரது கங்கணம் ஆணித்தரமானது. மக்களது சுமையும், விடிவும் அதற்கான தேடலும் எவை என்பதில் அவர் கொண்டுள்ள முடிவு குழப்பமில்லாதது. அதைவிட, அவை யாவற்றையும் சுவாரசியமாக இலக்கிய நவீனத்துடன் குழைத்து சமகால கலாச்சாரப் பரிமாண நெறிகள் கொடுத்து வரைந்துள்ள இக்கவிதை யாவரது நெஞ்சங்களிலும் ஒட்டும் என்பதில் ஐயமில்லை.

"பிரம்பு ஒன்று இருந்தால்தானே அந்த அடிகள் எல்லோருக்கும் பட்டது?" என்ற ஆத்திரக் கேள்வியால் விளக்கத்தை சுட்டிக் காட்டிடும் கவிஞர் அதன் எச்சங்கள் மிச்சங்களுக்கும் எம்மை தெம்புடன் கூட்டிச் செல்கிறார். அதாவது, "மக்கள் ஒவ்வொருவரது கைகளிலும் ஒரு பிரம்பு இருக்குமாயின்?" என்று கேளாமல் கேட்ட கேள்வியூடாக நாம் கவனத்திற் கொள்ளாவிதத்தில் எம்மை மிகச் சுபீட்சமான சோசலிசப் பூங்காவில் சேர்த்துவிட்டுச் செல்கிறார் கவிஞர் மிக நிதானத்துடன்.

(தொடரும்)




# மிகவும் மலிவானது!

# தொலைபேசிக் கட்டணத்தில்

# 40%வரை பணத்தைச் சேமியுங்கள்

தமிழ் அன்பர்களுக்கு மகிழ்ச்சியுடன் நாம் அறிமுகப்படுத்தும் ITMs டெலிபோன் அட்டைகள். (ITMs telekort)

Telenor ஐ விட 40% கழிவுகளை உங்களிற்கு வழங்குகின்றோம்.

வீட்டுத் தொலைபேசியா, தொழில் செய்யும் இடங்களிலுள்ள தொலைபேசியா, மொபைல் தொலைபேசியா கவலை வேண்டாம். சகல தொலைபேசிகளிலும் எமது ITMs அட்டைகளைப் பயன்படுத்தலாம்

உடன் தொடர்பு கொள்ளுங்கள்!

**38 26 02 82**

ஒஸ்லோ உள்ளடங்கலாக நாடு முழுவதும் எமது ITMs அட்டை விற்பனை முகவர்கள் செயல்படுகின்றார்கள்

உதாரணங்கள்:

| | வழமையாக நீங்கள் செலுத்தும் கட்டணம் | எமது கட்டணம் | சேமிப்பு |
|---|---|---|---|
| இலங்கை | 17, 52 | 13, 50 | 25% |
| இந்தியா | 21, 90 | 13, 50 | 40% |
| பாகிஸ்தான் | 17, 52 | 13, 50 | 25% |
| பங்களாதேஷ் | 21, 90 | 13, 50 | 40% |

இன்னும் பல நாடுகளிற்கும் விசேட கழிவுகளை வழங்குகின்றோம்

தாமதியாமல் தொடர்பு கொள்ளுங்கள்

Telefon/Fax 38 26 02 82

**ITM International Tele Communication Marketing,**
**Elveveien 3, 4500 MANDAL, NORWAY**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

70

**Av sender : (From)**
*Norway Tamil Culturel Centre*
**Address:**
*Suvadugal,*
*Herslebs gt43,*
*0578 Oslo,*
*NORWAY*

*mottaker:*

**SUVADUGAL,**
**A Tamil monthly from Norway**
Estd: Sept 1988

**Bank account**: 16075213062
SparebankenNOR

ISSN: 0804 - 5712

**Editorial Group**: Thuruvapalagar

Price: 25NKr
Subscription: 300NKr/ 12 issues

**Published by:**
Norway Tamil Culturel Centre
**Address:**
Suvadugal,
Herslebs gt43,
0578 Oslo,
NORWAY

ஆசிரியர் குழு:
துருவபாலகர்

வெளியீடு:
நோர்வே தமிழ்க் கலாசார மையம்
முகவரி:
சுவடுகள்,
ஹெர்சிலெப்ஸ் காதா 43,
0578 ஒஸ்லோ,
நோர்வே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org